பக்கங்கள்: இருபத்துநான்கு

Registered as a Newspaper

# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை 9 : வள்ளுவர் ஆண்டு 2030 ஆனி 19 சனிக்கிழமை (03-07-1999) SANJEAVY -Regenerative Tamil Weekly சிகரம்:5

# அரசு - ஐ.தே.கட்சி பிரமுகர்கள் தீர்வு குறித்துப் பேச இணக்கம்!

## வியாழனன்று சந்திப்பு

கொழும்பு,ஜூலை3

**இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணிப் (அரசாங்கப்) பிரமுகர்களும் ஐக்கியதேசியக் கட்சிப் பிரமுகர்களும் எதிர்வரும் எட்டாந்திகதி சந்தித்துப் பேச்சு நடத்த இருக்கின்றனர்.**

**இனப்பிரச்சினைத் தீர்வுக்காக ஐ.தே.கட்சி முன்வைத்துள்ள ஆலோசனைகளும் அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வுத்திட்டமும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட இருக்கின்றன.**

இரு கட்சிப் பிரமுகர்களுடனும் வர்த்தகப் பிரமுகர்கள் கடந்த 18 மாதங்களாக நடத்தி வந்த கலந்துரையாடலின் பேரில் இந்தச் சந்திப்பு ஏற்பாடாகியுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் அமைச்சர்களான பீரிஸ், எம்.எச்.எம்.அஷ்ரப் மற்றும் நெவில் கனகரத்தின, விக்கினராஜா ஆகியோரும்-

ஐ.தே.க. சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.சி.எஸ்.ஹமீட், கே.என்.சொக்ஸி மற்றும வி.எஸ்.சுவாமிநாதன் ஆகியோரும் -

இந்தக கலந்துரையாடலில் கலந்து கொள்ள உள்ளனர்.

பேச்சுக்களுக்கு உதவும் வகையில் இருகட்சிகளும் இணக்கம் கண்ட விடயங்கள், இணக்கம் காணப்படாத விடயங்கள் ஆகியவை தொடர்பாகப் பட்டியல் ஒன்று வர்த்தகப் பிரமுகர்களால் தயாரிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

## தாக்கப்பட்ட பொது மக்களிடம் மன்னிப்புக் கோரியது ராணுவம்

யாழ்ப்பாணம்,ஜூலை3

சாவகச்சேரி நுணாவிலில் நேற்று இடம்பெற்ற கிளைமோர் குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி யாழ்ப்பாணம், சாவகச்சேரி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுபவர்களை நேரில் சந்தித்த சாவகச்சேரி பிரிகேட் கட்டளை அதிகாரி கேணல் சமரவீர அவர்களிடம் மன்னிப்புக் கோரினார்.

நேற்றுக்காலை சாவகச்சோ் வைத்தியசாலைக்குச் சென்ற சமரவீர மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி எஸ்.ஸ்ரீதரன் மற்றும் பத்திரிகையாளர் முன்னிலையிலேயே இவ்வாறு மன்னிப்புக் கோரினார்.

அங்கு சிகிச்சைபெறும ஐவரிடமும் சம்பவம் தொடர்பான விவரங்களை அவர் கேட்டறிந்தார்.

பொதுமக்களைத் தாக்கியது தொடர்பாக இரு படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும்-

இது தொடர்பாக தற்சமயம் விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும்-

சம்பந்தப்பட்ட சகலரும் கைதுசெய்யப்பட்டு அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் என்றும் - அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் சார்பாக இந்தச் சம்பவத்துக்காக தாம் மன்னிப்புக் கோருவதாகத் தெரிவித்த அவர், இனிமேல் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறாமல் பார்த்துக்கொள்வதாகவும் உறுதியளித்தார்.

அதன் பின்னர் யாழ்.ஆஸ்பத்திரிக்குச் சென்ற அவர் அங்கு சிகிச்சை பெறும் இருவரையும் சந்தித்து மன்னிப்புக் கோரியதுடன் வைத்தியச் செலவுக்கு உதவுவதாகவும் அவர்களிடம் தெரிவித்தார்.

ஏழுக்கு மேற்பட்ட படையினர் சேர்ந்து மண்வெட்டி, கோடரிப்பிடிகளால் தங்களைத் தாக்கினர் என்றும்-

தாம் மயக்கம் அடையும்வரை தாக்குதல் தொடர்ந்ததாகவும் -

யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் வசந்தநாதர் ஜெயக்குமார் என்பவர் கேணல் சமரவீரவிடம தெரிவித்தார்.

காலை 10.30 மணிக்கு கிளைமோர் தாக்குதல் நடைபெற்றது. சொற்ப நேரத்தில் ஐவரும் -

பின்னர் 2.30 மணியளவில் மேலும் இருவரும் -

தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது

(உ-3-31-15)

## 3 சிப்பாய்கள் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்

சாவகச்சேரி,ஜூலை3

நுணாவில் பகுதியில் நேற்று முன்தினம் பொதுமக்களைத் தாக்கியதாகக் கூறப்படும் மூன்று படையினர் நேற்று மாலை சாவகச்சேரி நீதிமன்றத்தில் இராணுவப் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக எதிர்வரும் 7ஆம் திகதி அடையாள அணிவகுப்பு நடைபெறும் என்றும் -

அதுவரை மூவரையும் விளக்கமறியலில் வைக்கும்படியும் -

நீதிவான் உத்தரவிட்டார்.

(உ-3-31)

## மாங்குளம் ஊடாக பாதை திறக்க புலிகள் இணக்கம்

வன்னிப் பிரதேசத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற மற்றும் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கிடையில் பொதுமக்களின் போக்குவரத்துக்காக மாங்குளம், மல்லாவி ஊடாக பாதை ஒன்றைத் திறப்பதற்கு விடுதலைப்புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கும் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இடையில் போக்குவரத்தை மேற்கொள்ள மூன்று பாதைகளின் விவரங்களை படை அதிகாரிகள் வவுனியா அரச அதிபருக்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியிருந்தனர்.

இது தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தினர்.

கண்டி வீதியில் மாங்குளத்திலிருந்து மல்லாவி ஊடாக பாதை ஒன்றைத் திறக்க விடுதலைப்புலிகள் இணங்கியுள்ளனர் என செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரி தெரிவித்தார்.

இந்தப் பாதை தொடர்பாகப் படை அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் மீண்டும் விடுதலைப்புலிகளுடன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கலந்துரையாடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-164-21)

## இருபாலை காவலரணில் கிளைமோர் வெடித்தது!

வலி.கிழக்கு,ஜூலை 3

இருபாலைச் சந்தியில் இராணுவக் காவலரணுக்கு அருகே மரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கருதப்படும் கிளைமோர் கண்ணி ஒன்று நேற்றுக்காலை 9.30 மணியளவில் வெடித்தது.

இதனால் அங்கு பதற்றம் நிலவியது.

வழமையாக அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் படையினர் சம்பவ நேரம் அங்கு இருக்காததால் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

இந்தக்குண்டு வெடித்த சமயம் பயணிகள் பஸ ஒன்று அவ்விடத்தைத் தாண்டிச் சென்றபோதும் அதற்குச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இருபாலைச் சந்தியில் அமைந்துள்ள சில வர்த்தக நிலையங்களின் கண்ணாடிகள் மட்டும் சேதமடைந்தன. அந்தக் காவலரண் தகர்ந்தது.

இந்தக் குண்டுவெடிப்பை அடுத்து அந்தப் பகுதியைப் பொலீஸாரும் படையினரும் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர்.

(உ-3-5-15-27-72-180)

## வவுனியாவில் ஒருவர் சுட்டுக்கொலை

வவுனியா,ஜூலை3

வவுனியா வயிரவப்புளியங்குளம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்ற சம்பவமொன்றில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்,

அந்தப் பகுதியில் சைக்கிளில் சென்ற மூவரை பொலீஸார் மறித்ததாகவும், அவர்கள் நிற்காமல் சென்ற சமயம் அவர்கள் மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், அவர்களில் ஒருவா உயிரிழக்க மற்றிருவரும் தப்பி ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சைக்கிளில் வந்தவர்கள் திருப்பிச் சுட்டதில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்தார். (உ-3-164)

## புளொட் உறுப்பினர் சுட்டுக்கொலை

வவுனியா,ஜூலை3

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் புளொட் அமைப்பின் உறுப்பினரான மூக்கன் உதயகுமார் (23 வயது) என்பவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் ஒரு பிள்ளையின் தந்தை எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-164-3)

## மட்டக்களப்பில் மாணவன் கைது

மட்டக்களப்பு, ஜூலை3

மட்டக்களப்பு வின்சன் மகளிர் கல்லூரியில் நேற்று நடந்த பரிசளிப்பு விழாவின்போது துண்டுப்பிரசுரம் விநியோகித்ததாகக் கூறப்படும் மாணவன் ஒருவன் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளான்.

இந்த விழாவிற்கு பிரதம விருந்தினராகப் பங்குபற்றிய கல்விஅதிகாரியை விமர்சிக்கும் வகையில் அந்தத் துண்டுப்பிரசுரம் அமைந்திருந்ததாகவும் -

இது தொடர்பாக கல்லூரி நிர்வாகம் கொடுத்த தகவலின் அடிப்படையில் பொலீஸார் அந்த மாணவனை கைது செய்ததாகவும் கூறப்பட்டது.

(உ-3-21)

## டாக்டர்களின் பிரச்சினைகள்: ஆராய ஐந்து பேர் கொண்ட குழு

### சந்திப்பில் ஜனாதிபதி இணக்கம்

கொழும்பு, ஜூலை3

அரச வைத்தியர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக ஐந்து பேர் கொண்ட குழ ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று அரச வைத்தியர் சங்கப் பிரதிநிதிகளுடன் நடந்த சந்திப்பின்போதே இவ்வாறு இணக்கம் காணப்பட்டது.

அரசமைப்புக்கு உட்பட்ட வகையில் வைத்தியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாகவும் -

சுகாதார சேவையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனம் செய்த அறிவிப்பை வாபஸ் செய்வது குறித்து ஆராயவும் -

வேலை நிறுத்தத்தின் போது வைத்தியர்களுக்குப் பாதிப்பு ஏதும் ஏற்பட்டிருப்பின் அதற்கு நஷ்டஈடு வழங்க ஏற்பாடு செய்வதாகவும் -

ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

(உ-3-21)

## திங்களன்று சந்திரிகா நேபாளத்துக்கு விஜயம்

நான்குநாள விஜயம் மேற்கொண்டு நாளை மறுதினம் நேபாளத்துக்கு வரும் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்படவிருப்பதாக நேபாளப் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

பாதுகாப்பு முன்னேற்பாடாக நேற்று ஏழு இலங்கைத்தமிழர்கள் நேபாளத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். ஹோட்டல் ஒன்றில் வைத்துக் கைது செய்யப்பட்ட இவர்கள் தாங்கள் மாணவர் என்றும் வியாபாரிகள் என்றும் பொலீஸாரிடம் தெரிவித்தனர்.

அவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களா என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகின்றது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

(உ-3)

## முருங்கனுக்கு அருகே பொலீஸார் மீது தாக்கு

வவுனியா,ஜூலை3

மன்னார் முருங்கனில் செம்மாந்தீவு பொலீஸ் சாவடி மீது நேற்றுப் பிற்பகல் 3.45 மணியளவில் விடுதலைப்புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றும் மூன்று பொலீஸார் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதிக்கு விரைந்த விசேட அதிரடிப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அங்கு மோதல் இடம்பெற்றது.

அச்சமயம் அந்த பொலீஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள நானாட்டான் உதவி அரச அதிபர் அலுவலகத்தில் 150 பேருக்கு மேல் நிவாரணம் பெற சமுகமளித்திருந்தனர் என்றும் -

அவர்கள் நிலத்தில் படுத்து உயிர் தப்பியதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

அண்மையில் பதவி விலகிய

# வவுனியா செஞ்.அதிகாரிகள் விசாரணைக்கு அழைப்பு

வவுனியா, ஜூலை3

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியாக்கிளைத் தலைவர் மற்றும் செயலாளர் உட்பட ஐந்து பேரை விசாரணைகளுக்காக கொழும்புக்கு வருமாறு குற்றத்தடுப் புப்பிரிவு அழைத்துள்ளது.

வவுனியாக் கிளைத்தலைவர் எஸ். மார்க்கண்டேயர் செயலாளர் பி.சந்திரசேகரம்பிள்ளை ஊழியர் ஜெயராஜ் மற்றும் வாகனச்சாரதி பத்மநாதன் ஆகியோர் உட்பட ஐந்து பேரையே விசாரணைகளுக்காக கொழும்பு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளையின் தலைவர், செயலாளர் ஆகியோர் கடந்த வாரம் தமது பதவிகளை இராஜினாமாச் செய்திருந்தனர்.

இவர்களை கொழும்புக்கு அழைத்த இலங்கை செஞ்சிலுவை சங்க பொதுச்செயலாளர் புளத்சிங்கள கட்டாயப்படுத்தி அவர்களிடமிருந்து இராஜினாமா கடிதங்களைப் பெற்றுக் கொண்டதாகக் கூறப்படுகின்றது.

இதனை அடுத்தே தற்போது இவர்களை விசாரணைகளுக்கு கொழும்புக்கு வருமாறு குற்றத் தடுப்பு பிரிவு உத்தரவிட்டுள்ளது. (ஐ-6-164)

# பருத்தித்துறையில் இருந்து மானிப்பாய்க்கு பஸ்சேவை

வடமராட்சி, ஜூலை 3

பருத்தித்துறையிலிருந்து மானிப்பாய் நவாலிக்கு (பாதை இல: 766) பஸ்சேவை ஒன்று அடுத்தவாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறை, தொண்டமனாறு, உடுப்பிட்டி அச்சுவேலி, புத்தூர், புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம், மருதனார்மடம், மானிப்பாய் ஆகிய இடங்கள் ஊடாக இச்சேவை நடைபெறும். தினமும் காலை 6.30 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் பருத்தித்துறையிலிருந்து மானிப்பாய், நாவாலிக்கும் -

முற்பகல் 9மணிக்கும் பிற்பகல் 2.30 மணிக்கும் நவாலியிலிருந்து பருத்தித்துறைக்கும் - இச்சேவை இடம்பெறும்.

ஆறு வருடகால இடைவெளிக்குப் பின்னர் கடந்த 1996 ஆம் ஆண்டு குடாநாட்டில் பஸ்சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தற்போதுதான் இச்சேவை முதல் தடவையாக ஆரம்பிக்கப்படுகிறது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ மீள இயங்கத் தொடங்கிய பின்னர் ஆரம்பிக்கப்படும் ஆறாவது சேவையும் இதுவாகும்.

இச்சேவை மூலம் வடமராட்சி, வலிகாமம் கிழக்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் மேற்கு ஆகிய பகுதி மக்களுக்கான போக்குவரத்து வசதி மீண்டும் கிடைக்கவுள்ளது.

(ஐ-173)

# யாழ்.ஆஸ்பத்திரியில் 11 எழுதுநர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 3.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் எழுதுநர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 11 பேரின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள் ளன.

இவர்கள் கடந்த முதலாம் திகதி தொடக்கம் எழுதுநராக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களை உடனடியாக வைத்தியசாலைக்குச் சமுகமளித்து கடமையைப் பொறுப்பேற்குமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

* செல்வி எஸ்.பிரேமினி (பெரிய அரசடி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி)
* செல்வி எஸ்.சிவலோசனி (கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு)
* செல்வி கே. பவானி (ஆனைப்பந்தி, அல்வாய் தெற்கு)
* செல்வி எஸ்.எம்.துசீதா (பழைய வீதி, கோப்பாய் தெற்கு)
* செல்வி. வை. அனந்திதை (ஈஞ்சடி, சுதுமலை வடக்கு)
* செல்வி.கே.துஷ்யந்தி (19/2 ரயில் வீதி, கந்தர்மடம்)
* செல்வி எம்.ஏ.சுபாஜினி (சென் பீற்றேர்ஸ் வீதி, நவாலி தெற்கு)
* வி.இராசையா (அலுப்பந்தி பிள்ளையார் கோயிலடி கோப்பாய் வடக்கு)
* என். கணேந்திரன் ("அம்பிகை வாசா", சங்கானை மேற்கு)
* செல்வி எஸ். துஷ்யந்தி (இந்துக்கல்லூரி ஒழுங்கை, உரும்பிராய் வடக்கு)
* செல்வி எஸ். தயாரஞ்சினி (ராஜவீதி, நீர்வேலி வடக்கு)

(ஐ-9)

## ஆலோசனைக் கூட்டம்

வலிகாமம் தெற்கு, ஜூலை 3

மானிப்பாய் கிராமிய ஆதார வைத்தியசாலை ஒன்றை நிறுவுதல் பற்றிய ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலக் கல்லூரியில் இ.வல்லிபுரம் தலைமையில் நடைபெறஉள்ளது.

இக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக வலி.தெற்கு பிரதேச செயலர் நா. வேதநாயகனும் சிறப்பு விருந்தினராக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.இரவீந்திரனும் கலந்து கொள்கின்றனர்.

(ஐ-152)

## இல்லமெய்வல்லுநர் போட்டிகள்

மானிப்பாய் ஜூலை 3

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி இன்று சனிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு அதிபர் அ.நடராசா தலைமையில் மானிப்பாய் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கமும் சிறப்பு விருந்தினராக மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வி.பசுபதிப்பிள்ளையும் கலந்துகொள்வர்.

(ஐ-90)

* * *

வடமராட்சி, ஜூலை3

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் கல்லூரி மைதானத்தில் அதிபர் என்.குணசீலன் தலைமையில் நடைபெறும்.

யாழ். கல்விவலய ஆங்கில உதவிக்கல்விப்பணிப்பாளர் ஆர்.டி. அருமைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ஐ-173)

## நாவலன்கோவை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்; ஜூலை 3

தென் புலோலியூர் தமிழ்த்தாத்தா கந்த முருகேசனாரின் 'நல்லை நாவலன் கோவை' நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு புலோலி புற்றளை மகா வித்தியாலயத்தில் இளைப்பாறிய பிரதிக் கல்விப்பணிப்பாளர் வீ.எஸ். ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் வரவேற்புரையை யாழ். செயலக இணைப்பதிகாரி வீ.வீரபத்திரபிள்ளையும் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி என். சிவலிங்கராஜாவும் நிகழ்த்துவர்.

(ஐ-9-173)

# 80 ஆயிரம் கட்டடங்கள் சேதமுற்றதாக மதிப்பீடு

வலி.கிழக்கு, ஜூலை3

யாழ்மாவட்டத்தில் கடந்த கால இராணுவ நடவடிக்கை காரணமாக இதுவரை வீடுகள், வர்த்தக நிலையங்கள் உட்பட 80 ஆயிரம் கட்டடங்கள் அழிந்தும், சேதமுற்றுமுள்ளதாக அண்மையில் எடுக்கப்பட்ட செயலக புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் கடந்த மார்ச் மாதம் வரை எடுக்கப்பட்ட கணிப்பீட்டின்படி மொத்தமாக 79 ஆயிரத்து 307 வீடுகள் சேதமுற்றும் அழிந்தும் உள்ளன. இவற்றில் 45 ஆயிரத்து 587 வீடுகள் முற்றாக சேதமுற்றுள்ளன.

இதேவேளை-

இம்மாவட்டத்தில் 13 ஆயிரத்து 500 வர்த்தக நிலையங்கள் சேதமுற்றும் அழிந்தும் உள்ளதாக இப்புள்ளி விவரங்கள் மூலம் அறிய முடிந்துள்ளது. (ஐ-180)

# ச.ச.நிலைய சம்மேளனம் விரைவில் அமைப்பு

கொழும்புத்துறை, ஜூலை 3

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தை அமைப்பதற்காக பிரதேச மட்டத்தில் தற்சமயம் சமாசங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 15ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன் சகல பிரதேச சபைப் பிரிவுகளிலும் சனசமூக நிலையங்களின் சமாசங்கள் அமைக்கப்பட்டதும், யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தை அமைப்பதற்கான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள சகல சனசமூக நிலையங்களும் இதற்கு ஒத்துழைப்பு நல்கிச் சிறந்த ஒரு செயற்றிறன் மிக்க சம்மேளனத்தை அமைப்பதற்கு உதவுமாறு யாழ். மாவட்ட பிரதேச உள்ளூராட்சித் திணைக்களத்தின் தலைமைச் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி த.பாஸ்கரன் கோரியுள்ளார். (ஐ-30)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கம்மா நடராசா

அரியாலையூரை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி தங்கம்மா நடராசா அவர்கள் 02.07.1999 வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் அரியாலை சரஸ்வதி அம்பாள் ஆலய பரிபாலகர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து, மயில்வாகனம் (கட்டட ஒப்பந்தகாரர்), மாணிக்கம், கிருஷ்ண பிள்ளை, திருமதி மகாலட்சுமி ஐயாத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கவிஞர் அரியாலையூர் ஐயாத்துரை, திருமதி பறுவதம் மயில்வாகனம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று சனிக்கிழமை காலை 10.30 (இ.நேரம்) மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

*59,கலைமகள் வீதி,*
*அரியாலை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்
**ஐ. வரதராசா** (பேரமகன்)

(67127)

### மாரிமுத்து வேலுப்பிள்ளை

நவக்கிரி புத்தூரைப் பிறப்பிடமாகக் கொண்ட மாரிமுத்து வேலுப்பிள்ளை அவர்கள் 30.06.1999 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் திருமதி வேலுப்பிள்ளை சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும், வே.சந்திரசேகரம், வே.குணசேகரம், திருமதி ர.சரோஜா, திருமதி சி.மல்லிகா, வே.ஞானசேகரம்(பிரான்ஸ்), வே.ரவிசேகரம் (பிரான்ஸ்), செல்வி வே.சுசீலாதேவி(பிரான்ஸ்) வே.ஆனந்தன்(லண்டன்), செல்வி. வே.சுமித்திரா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

நவக்கிரி,
புத்தூர்.


தகவல்
**வே. சந்திரசேகரம்**
(மகன்)

(67128)




உபாலி தயாரிப்புக்களான கன்டோஸ் சொக்லேட் - ரொபி டெல்ரா ரொபி வகைகளை கம்பனி விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற நாடவேண்டிய இடம்

காட்சியறை:
குகன் கொமினிகேசன்
166 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 2027 & 2993



குகன் ஸ்ரோர்ஸ்
(யாழ் ஏக விநியோகஸ்தர்கள்)
180, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 2767

Delta

குறிப்பு:-
வியாபாரிகளே தங்கள் நலன் கருதி எமது குளிரூட்டப்பட்ட வாகனம் மூலம் நேரடியாகத் தங்கள் கடைகளுக்கு கவர்ச்சியான கழிவு விலையில் பொருள்கள் விநியோகிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

Delta

(சி-8078)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண நிலை குறித்து அழகான ஓவியம் வரைய வர்ணம் எடுத்துக் கொடுப்பவர்கள் உள்ளூரவர்களா?

## குடாநாட்டு மக்களின் மனநிலை பெரிதாக மாறிவருவதாகக் கணிப்பு

1995 ஒக்ரோபரில் வலிகாமத்தில் இருந்து பெரும் இடப்பெயர்வு இடம்பெற்றது. குடாநாட்டு மக்கள் ஒவ்வொருவரும் அதனை என்றும் நினைவில் கொள்ளுமளவுக்கு அவரவர் வாழ்க்கையில் ஏதோ ஒருவகையில் பாதிப்பை ஏற்படுத்திய இடப்பெயர்வு அது. பிள்ளைகளின் கல்வி, பெரியவர்களின் தொழில்வாய்ப்பு உட்பட பலதரப்பட்ட பாதிப்புக்கள், பல வகைஇழப்புகள், உடைமை அழிவுகள் அவரவரை ஆழமாகக் குத்தி, ஆற்றாது மனநிலையையே சீரறுக்கும் அளவுக்குப் பாதகமாகவும் பயங்கரமாகவும் இருந்தது வேறு.

அத்தகைய ஒரு பெரும் இடம்பெயர்வு நடைபெறாவிடில் ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொது மக்கள் அழிந்திருப்பர். ஆறுமாதம் அடுத்தவர் குந்தில் தங்கியிருந்தாலும் உயிருடன் திரும்பி வந்து வாழமுடிகிறதே என்ற கருத்துடையவர்கள் ஒருசாரார்.

"சூரியப்பிரகாசம்" இராணுவ நடவடிக்கை உக்கிரமாக நடைபெற்றதோ இல்லையோ, போரின் தன்மை எவ்வாறு இருந்திருப்பினும் தங்கள் வீடுகளில் தங்கியிருப்பதா அல்லது வெளியேறுவதா என்று முடிவு செய்யும் சுதந்திரத்தை மக்களிடம் பறித்து எல்லோரும் தென்மராட்சி, வடமராட்சிப் பக்கம் போகவேண்டும் என்று விடுதலைப்புலிகள் பலாத்காரப்படுத்தியது ஏற்றுக் கொள்ள முடியாதது என்று ஆத்திரப்பட்டவர்கள் இன்னொரு சாரார்.

ஆறு மாதங்கள் இடம்பெயர்ந்தவர்களாக இருந்துவிட்டு 1996 ஏப்ரல் கடைசி வாரத்தில் சொந்த இடங்களுக்குத் திரும்பியபோது, இங்கு வந்து இராணுவத்துடன் நிம்மதியாக வாழ முடியுமா, அட்டூழியம் செய்யமாட்டார்களா என்று சந்தேகம் கொண்டவர்கள் ஒரு தரப்பினர்.

இடம்பெயர்ந்த மக்களை வருமாறு அரசாங்கம் அழைக்கிறது. வசதிகள் செய்து தரப்படும், தேவைகள் நிறைவேற்றப்படும் என்று அரசாங்கம் வரவேற்கிறது. 1987க்கு முன்னர் அடக்குமுறை போட்ட இராணுவத்தினர் இப்போது அப்படியல்ல; நிறையவே மாறிவிட்டார்கள். குளிர்பானம், பிஸ்கட்தந்து அன்பாக, ஆதரவாக வரவேற்கிறார்கள். ஆகையால் அவர்கள் தொல்லை தரமாட்டார்கள்; எங்கள் பிள்ளைகளைக் கொல்லமாட்டார்கள்; அவர்களை நம்பலாம் என்று கருதிய வண்ணம் நாவற்குழிப்பாலத்தைக் கடந்து இந்தப் பக்கம் வந்தவர்கள் இன்னொருசாரார்.

வலிகாமம் மக்கள் ஆறு மாதப் "புலப்பெயர்வின்" பின்னர் தமது சொந்த இடங்களுக்குவந்து மூன்று வருடங்களும் இரண்டு மாதங்களும் - மொத்தமாக 38 மாதங்கள் - கடந்து ஓடிவிட்டன- பறந்து போய்விட்டன. அவர்கள் மட்டுமென்ன, தென்மராட்சி, வடமராட்சி, தீவகம் அடங்கிய யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் இப்போது வசதியாகவும் நிம்மதியாகவும் மன அமைதியுடனும் வாழமுடிகிறதா?

வசதியான, வளமான வாழ்வை மீட்டுத்தரப் போவதாகக் கூறிய அரசாங்கத்தின் உறுதிமொழிகள் நிறைவேற்றப்பட்டு விட்டனவா? மொத்தத்தில் குடாநாட்டு மக்கள் இயல்பு வாழ்க்கை வாழ முடிகிறதா? எவ்வித தடையும், தடங்கலும், தொல்லையும், தொந்தரவும் இல்லாத பாதுகாப்பான, நிம்மதியான வாழ்க்கையை வாழ முடிகிறதா? இல்லை; இல்லவே இல்லை என்பது தான் மிகப் பெரும்பாலான மக்களின் பதிலாக உள்ளது.

### உள்ளும் புறமும்

குறுமுனி

நம்பி வந்தோம் நாசம் செய்துவிட்டார்களே என்று காணாமற் போனோரின் பெற்றோர்கள் மனவேதனைப்படுகிறார்கள்; அழுது புலம்புகிறார்கள். அரசாங்கம் ஆமைவேகத்தில்தான் போகிறது இப்போதைக்கு விடிவு வரும் என்று சொல்வதற்கில்லை என்று ஏக்கம் தெரிவிக்கிறார்கள் ஏனையோர்.

செய்வது எதனையும் முழுமையாகச் செய்யவில்லை. அதனைத் தொட்டோம், இதனைத் தொட்டோம் என்று காட்டுவதற்காகச் செய்வதாகவே தெரிகிறது. அடிப்படை வசதிகள் கூட இன்னும் இல்லையே என்றும் ஏமாற்றம் கொண்டுள்ளார்கள் மக்களில் பெரும்பான்மையினர்.

### ஏமாற்றம்

அண்மையில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த பிரமுகர் ஒருவரும் அவ்வாறே ஏமாற்றம் தெரிவித்தார். அவரது ஏமாற்றம் வேறு வகையானது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து திரும்புவோர் கூறுவதைக் கேட்கும் போது இங்கு இயல்பு நிலை வந்துவிட்டதாகவே எண்ணத் தோன்றியது. ஆனால் இங்கு வந்து நேரில் பார்க்கும் போதுதான் உண்மை புரிகிறது. இயல்பு நிலை ஆகக்கூடியது ஒரு முப்பது வீதம்தான் வந்திருக்கிறது - திரும்பி உள்ளது - என்பது அவரது கணிப்பு. யாழ்ப்பாணத்தில் இரண்டு நாள்களைக் கழித்தபின்னர் அவர் வைத்த கணக்கு அது. ஆகக் குறைந்தது ஒரு வாரம் தங்கி நின்று பல இடங்களுக்கும் சென்று, பலரையும் சந்தித்து நிலைமையை நேரில் கண்டும், கேட்டும் உணர்ந்திருந்தால் அவரது கணிப்பு வேறாகவே இருக்கும்.

யாழ்ப்பாணத்துக்கு விசேட கவனிப்பின பேரில் ஏதேதோ எல்லாம் பெரிதாகச் செய்யப்படுவதாகவும், மக்கள் கஷ்டமின்றி, கவலையின்றி நிம்மதியாக வாழ்கிறார்கள் என்பதாகவும் அரசும், இங்கு வந்து போகும் அதிகாரிகளும் ஓவியம் வரைகின்றனர்.

அரசு அவ்வாறு வரைவதற்கு வர்ணம் எடுத்துக் கொடுப்பவர்கள் இங்குள்ள அரச உயர் அதிகாரிகள் என்ற குற்றச்சாட்டும் உண்டு. இங்குள்ள குறைபாடுகளை, தேவைகளை, தடங்கல்களை, தாமதங்களை எடுத்துச் சொல்வதற்கு உள்ளூர் அதிகாரிகள் முன்வருவதில்லை என்பதே அந்தக் குற்றச்சாட்டு.

உணவுப் பொருள்களைத் தாராளமாகக் கொண்டு வந்து நியாய விலையில் மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் பணி இன்னமும் சீராகவில்லை. இந்தா, அந்தா என்று கடந்த பல காலமாகச் சொல்லப்படுகிறதே அன்றி இன்னும் செயலாகவில்லை. குடாநாட்டு மக்களுக்கு அரிசி கிலோ ஒன்றுக்கு 38ரூபா முதல் 40ரூபா வரை விற்கப்படுகிறது. உணவுப் பொருள்கள் மட்டுமன்றி மருந்துவகைகள் உட்பட ஏனைய பலவும் கொழும்பு விலையைவிட சராசரி மூன்று மடங்கு மேலாகவே விற்பனையாகின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து மக்கள் வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்குச் சீரான, நிரந்தரமான பயணிகள் கப்பற் சேவையை நடத்தமுடியாமல் அரசாங்கம் இன்னமும் தடுமாறுகிறது. ஆறுமாதமா, ஒருவருடமா? மூன்றரை ஆண்டுகளாக இந்த முக்கிய விடயத்தைச் செயலாக்க முடியவில்லை என்றால் எந்த வெளிநாட்டுப் பத்திரிகையாளரும் நம்புவதாக இல்லை. அப்படியா! என்று மூக்கில் விரலை வைத்துவிட்டுப் போகிறார்கள்.

குடாநாட்டு மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதாக தொலைபேசி, மின்சாரம், வீதி திருத்தம், வீடு திருத்தம் என்று தொடங்கப்பட்டது உண்மையே. ஆனால் அவற்றில் எதுவுமே மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யுமளவுக்கு அவர்களுக்குத் திருப்தி அளிக்கும் அளவுக்கு நிறைவேற்றப்படவில்லை. போரால் அழிந்த பூமியில் குறுகியகாலத்தில் மக்களின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியாது என்பது ஒரு வாதமாக உள்ளது. குடாநாட்டைப் புதிதாகக் கட்டி எழுப்புவதற்கு- புனர்நிர்மாணம் செய்வதற்கு - நீண்ட காலம் தேவை என்பது சரியானதே. ஆனால் மக்களின் அடிப்படைத் தேவைகளை மூன்று வருடங்களாக நிறைவேற்ற முடியவில்லை என்றால், அதற்கும் முப்பது ஆண்டுகள் செல்லும் என்பதா அர்த்தம்?

இந்த வருட இறுதியில் ஜனாதிபதித் தேர்தலை அல்லது பொதுத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் அவசரப்படுகிறது. அதன் பொருட்டு யாழ்ப்பாண மக்களின் வாக்குகளைப் பெறலாம் என்ற ஆசையும் இருக்கலாம். செயற்றிட்டங்களின் வேகத்தை சற்று அதிகரிக்கக் கூடும். ஆனால் பூரணமான இயல்பு வாழ்க்கையை அதனால் கொண்டுவர முடியாது; கொண்டுவரமாட்டாது.

### முறிந்த யாழ்ப்பாணம்

இதனை நன்றாக முன்னறிந்த பிரமுகர் ஒருவர் யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலையை "முறிந்த யாழ்ப்பாணம்" என்று அண்மையில் வர்ணித்தார். யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கடந்த வாரம் கருத்தரங்கு ஒன்றை நடத்தியது. அங்கு உரையாற்றிய அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலரும் குடாநாட்டு மக்களின் அவல நிலையையும் மாவட்டத்தின் சமூக பொருளாதார நிலைமை நலிந்து, தேய்ந்துபோய் பெறுமானம் இன்றிக் கிடப்பதையும் தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டினார்கள். அவை பெரிதுபடுத்தல்கள் அல்ல; யதார்த்தமானவை, உண்மையானவை என்பதனை இங்கு வாழும் எவரும் ஒப்புக்கொள்வர் என்று எதிர்பார்க்கலாம்.

கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களைப் பார்ப்போம்:-

* யாழ்ப்பாணம் விடுவிக்கப்பட்ட பிரதேசம். அங்கு சிவில் நிர்வாகம் இயங்குகிறது. ஜனநாயகம் மீண்டுள்ளது. மக்கள் சந்தோசமாகவும் வளமாகவும் வாழ்கிறார்கள். - என்றெல்லாம் வெளி உலகத்துக்குப் பறைசாற்றி வரும் அரசும் அதன் ஊது குழல்களும் யாழ்ப்பாணத்தில் மக்கள் படும் அவலங்கள், அனுபவிக்கும் தொல்லைகளைக் கண்டு கொள்வதாக இல்லை.

* யாழ். மாவட்டத்தில் உற்பத்தித் தடை உண்டு. நடமாடக் கட்டுப்பாடு உண்டு. வெளி மாவட்டங்களில் இருந்து பாவனைப் பொருள்களைக் கொண்டுவருவதில் தடை உண்டு. இவை போன்று இன்னும் பல தடைகள், கட்டுப்பாடுகள் உண்டு. இவை வெளியில் தெரியாமல் பிரசித்தப்படுத்தப்படாமல் நடைமுறையில் உள்ள பிரகடனப்படுத்தப்படாத தடைகளாகும். 1996 ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ்ப்பாணம் மீது பிரகடனப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டிருந்தது. இப்போது பிரகடனப்படுத்தப்படாத தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான்.

* யாழ். குடாநாட்டில் மனித உரிமைகள் மதிக்கப்படுவதில்லை. மக்கள் உள்ளூர ஒரு விதமான பயப்பிராந்தியத்துடனேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

* மக்களின் வாழ்க்கைத்தரம் குறைந்து விட்டது. எதிர்காலம் உண்டா என்ற நம்பிக்கை இழந்த நிலையிலேயே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மொத்தத்தில் பொருளாதாரம் சீரழிந்துள்ளது.

குடாநாட்டில் நம்பிக்கையுடன் மீளக்குடியேறிய மக்களின் உரிமைகள் மெல்ல மெல்ல பறிக்கப்பட்டு வருகின்றன.

### இராணுவ நிர்வாகம்

* சிவில் நிர்வாகம் முழு அளவிலும் நடைபெறவில்லை. இராணுவ நிர்வாகமே மேலோங்கி நிற்கிறது. இதனால் எல்லாவற்றையும் மௌனமாக ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு யாழ்ப்பாண மக்கள் மாறி வருகின்றனர். உதாரணமாக குறிப்பிட்ட ஓர் இடத்தில் இராணுவக் காவலரண் உண்மையாகவே இல்லாவிட்டாலும் வீதியில் பனம்குற்றிகள், பீப்பா தகரங்களைக் கண்டால் சைக்கிளை விட்டு இறங்கிப் போகின்ற அளவுக்கு இவர்களது மனநிலை மாறிவிட்டது.

* குடும்பப் படம் எடுத்து படையினரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோரப்பட்டபொழுது அதனால் வரக்கூடிய பாதகமான விளைவுகளைத் தெரிந்திருந்தும், சட்டம் அதுவே என்று எண்ணி, அவ்வாறு செய்யாவிட்டால் "தண்டனை" கிடைக்கும் எனக் கருதி எல்லோரும் ஏற்றுக் கொண்டு தமது குடும்பப் படங்களை எடுத்துக் கொடுத்தனர், படையினரிடம் இவ்வாறு மக்கள் எது நடந்தாலும் தாங்கிக் கொள்ளும் தன்மையில் அது தமக்குத் தீமை விளைவிக்கும் எனப் புரிந்திருந்தும் பயத்தின் நிமித்தம் அனுசரித்துப் போகின்றனர்.

* மக்களின் இத்தகைய பிரச்சினைகள் பல குறித்தும் யாழ்ப்பாணம் வந்த சகல பிரமுகர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டது. எல்லோரும் இங்கு வந்து நிலைமையைப் பார்த்ததும் பிரச்சினைகள் பெரிதாக உள்ளன என்பதனை ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால கொழும்பு சென்றதும் மறந்து விடுகிறார்கள் என்றே தோன்றுகிறது.

* வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் வந்த பொழுது யாழ்ப்பாணத்தில் உள்ள சகல பிரச்சினைகளும் நேரில் எடுத்துச் சொல்லப்பட்டன. இது தொடர்பாக மகஜர்கள் மற்றும் கடிதங்கள் மட்டுமன்றி நூல்வடிவிலும் கையளிக்கப்பட்டது. இவற்றை எல்லாம் அறிந்து கொண்ட ஆளுநர் பிரச்சினைகளுக்கு இயன்றளவில் தீர்வு காண்பது என்பதில் உறுதியாக இருந்ததாக அவருடன் நெருங்கிய அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் கொழும்பு திரும்பிய பின்னர் மாறிவிடுவாரோ என்ற அச்சம் இல்லாமலில்லை.

* யாழ்ப்பாணத்தின் பிரச்சினைகளை அரச மேலிடத்திற்குச் சரியாக எடுத்துச் சொல்வதற்கு இங்குள்ள அரசின் மேலதிகாரிகள் அஞ்சுகிறார்களோ அல்லது சகல மக்களும் தங்களைப் போலவே கஷ்டம் இன்றி வாழ்கிறார்கள் என்று எண்ணுகிறார்களோ தெரியவில்லை. இந்த உயரதிகாரிகள் கொழும்புக்கு தவறான தகவல்களை வழங்கி வருகிறார்களோ என்று சந்தேகப்பட வேண்டி உள்ளது. எப்படியாயினும் இவர்கள் வழங்கும் தகவல்களை அரசு அப்படியே ஏற்றுக் கொள்கிறது - சீரணிக்கிறது.

### சர்வதேசதொண்டர் நிறுவனங்கள்

இந்தக் கருத்தரங்கில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிகளில் உள்ள சாதக பாதகங்கள் குறித்தும் விமர்சிக்கப்பட்டது. அத்துடன் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வெளிநாடுகள் நிதி உதவியை உத்தியோகபூர்வமாக அனுப்புவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது குறித்தும், சில மக்கள் நலன் திட்டங்களைச் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறவேண்டியது குறித்தும் கருத்தரங்கில் பலரும் கவலை தெரிவித்தார்கள்.

குடாநாட்டில் இப்போது மொத்தம் 12 உள்ளூர் அரச சார்பற்ற (தொண்டு) நிறுவனங்கள் இயங்குகின்றன.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், அகதிகள் புனர்வர்ழ்வு நிதியம்-83, வை.எம்.சீ.ஏ, சர்வோதயம், அறவழிப்போராட்டக்குழு, தென்னிய திருச்சபை, இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், ஊற்று, மக்கள் நலன்காக்கும் பிரிவு, மெதடிஸ்த திருச்சபை, மனித முன்னேற்ற நடுநிலையம், சமூக அபிவிருத்தி மன்றம் என்பனவே அவையாகும்.

குடாநாட்டில் பணியாற்றும் சர்வதேச அரச சார்பற்ற (தொண்டு) நிறுவனங்கள் வருமாறு; அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம், ஐ.நா.சிறுவர் கல்வி நிதியம், ஐ.நா.அபிவிருத்தித் திட்டம், சிறுவர் பாதுகாப்பு நிதியம், கெயர் நிறுவனம், போரூட், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, ஜி.ரி. இசற், பட்டினிக்கு எதிரான இயக்கம் என்பனவாகும்.

உள்ளூர் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களுக்கு அவை செயற்படுவதற்கு முட்டுக்கட்டை போட்டு விட்டு, "ஆசி" வழங்காதிருக்கும் அரசாங்கம் அதேவேளை, சர்வதேச தொண்டு நிறுவனங்களின் நிதியை வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை ஊடாகச் செய்ய முனைந்தது ஒவ்வாத செயல் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள், சர்வதேச தொண்டு நிறுவனங்கள் குறித்துக் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட விமர்சனங்களில் சிலவற்றைப் பார்ப்போம்.

* உள்ளூர் தொண்டு நிறுவனங்களுக்கு கட்டுப்பாடு விதித்துவிட்டு, சர்வதேச தொண்டு நிறுவனங்கள் எவ்வாறு உள்ளூர்த் தேவைகளைச் சரிவரத் தெரிந்து கொள்ள முடியும் என்ற கேள்வி எழுகிறது.

* உலக நிலையில் யாழ்ப்பாணம் சம்பந்தமான நோக்கு ஒருவிதமாக இருக்கும் போது, யாழ்ப்பாணத் தளநிலையில சர்வதேசத் தொண்டு நிறுவனங்கள் அரசாங்கத்தின் விருப்பத்திற்கு ஏற்பச் செயற்படுவது புரியாத புதிராக உள்ளது.

* முன்னரே ஆய்வு செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட திட்டங்களாக இல்லாமல் புனர்வாழ்வு அதிகாரசபை உடனடித் திட்டங்களாக முன்வைப்பது அரசியல் நோக்கங்கள் கருதியவையே. இவை பெரிதும் தோல்வியிலேயே முடிவடையும். அப்போது மக்களுக்காக சர்வதேச நாடுகள் வழங்கிய பணம் மக்களைச் சென்றடைவதற்கு முன்னரே கரைந்து விடுகிறது. இத்தவறு எங்கே உண்டானது என்பது எதுவும் தெரியாது.

* இத்தவறினால் பின்வரும் விளைவுகள் உண்டாகலாம்:-

1. உதவி வழங்கும் நாட்டிற்கு திட்டங்களின் தாக்கம்(Impect) பிழையானதாகவே முன்வைக்கப்படும்.

2. இப்பலவீனத்தைப் பயன்படுத்தி இம்மக்கள் மீது அரச இயந்திரம் கெடுபிடிகளை அதிகரிக்க வாய்ப்பு உண்டாகும்.

3. இது மக்கள் நிவாரணத்தையே எதிர்பார்க்கும் நிலையையும் தோற்றுவிக்கும்.

4. இதனால் மக்கள் தேவைகளைக் குறைநிரப்பும் பணியை மேற்கின் தனவந்தர்கள் நிறுத்தவும கூடும்.

* மக்கள் தங்கள் தேவைகளை சர்வதேச தொண்டு நிறுவனங்களிடம் நேரடியாகக் கூற முடியாது. அதற்கான வசதியும் இல்லை; அமைப்பும் இல்லை.

ஆனால் உள்ளூர் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகள் செய்யப்பட்டால் அவற்றில் பணிபுரிவோருக்கு மக்களின் தேவைகள்ளைக் கேட்டறியவும் கண்டறியவும் முடியும். அவர்களும் இப்பிரதேச மக்களில் அடங்குவர் என்பதால், மக்களுக்குப் பதில் சொல்லியாக வேண்டும் என்ற பொறுப்புடன் செயற்படுவர். அவர்கள் இங்கேயே வாழ்பவர்கள் ஆதலால், வாக்குறுதி ஒன்று செயற்பாடு இன்னொன்றாக இருக்கமுடியாது. ஆனால் சர்வதேசத் தொண்டு நிறுவன அதிகாரிகளுக்கு அத்தகைய பொறுப்பு இல்லை.

* சர்வதேசத் தொண்டு நிறுவனங்களில் அதிகாரிகளாகப் பணியாற்றும் உள்ளூர்க்காரர்கள் தங்களுக்கென "ஓர் உலகை" உருவாக்கி வாழ்வதாகவே தோன்றுகிறது. எமது மக்களுக்கும் இங்கு பணியாற்றும் மேலை நாட்டவருக்கும் ஒரு பாலமாக இருக்க வேண்டியவர்கள் அவர்கள். ஆனால் அவர்களோ இங்குள்ள ஒரு சிலரின் பலவீனத்தையும் பண்பற்ற செயல்களையும் மேற்கு அதிகாரிகளுக்குச் சுட்டிக் காட்டுவதில் தாம் லாபம் காண முயல்கிறார்கள்.

அதன் மூலம் யாழ்ப்பாணத் சமூகமே பண்பற்றது என்ற ஒட்டு மொத்தமான பிரமையை மேலைத் தேசத்தவர் மனதில் உண்டாக்கி விடுகிறார்கள். இதன் காரணமாக சர்வதேச தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்தைப் பற்றியும் யாழ்ப்பாணத்தவர்களைப் பற்றியும் தப்பான அபிப்பிராயம் கொள்கிறார்கள் - என்று தெரிவிக்கப்பட்டது.

இங்கு இயங்கும் சர்வதேச தொண்டு

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்கப்பட்ட நபர் விசாரணை

யாழ்ப்பாணம், ஜுலை 3

கொக்குவில் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கோப்பாய் பொலீசாரால் தாக்கப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளான நபர் கோப்பாய் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் கடந்த வியாழக்கிழமை நேரில் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

கல்திட்டி ஒழுங்கை, கொக்குவிலைச் சேர்ந்த ராஜதுரை நீதிராசா (வயது-25) என்பவரே தாக்கப்பட்டதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பதிகாரி எஸ்.ஸ்ரீதரன் இவரை கோப்பாய் பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றார்.


## பாராட்டி வாழ்த்துகிறோம்

29.05.99 **இல் வைகாசி விசாகப் பெருவிழாவில்,**

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை வைத்திய கலாநிதி திரு.சி.கதிரவேல்பிள்ளை அவர்களுக்கு, "ஞானபண்டித சேவா சுரபி" என்னும் விருதை வழங்கிக் கௌரவித்தமையைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

*பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.*

(C/8048)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வெள்ளிவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

நாடக அரங்கு
**1999-07-03,** சனிக்கிழமை காலை 9மணி

**நிகழ்ச்சி நிரல்**

தமிழ் வாழ்த்து

தொடக்கவுரை:
**கலாநிதி க.குணராசா(செங்கைஆழியான்)**
பதிவாளர்

வாழ்த்துரை –
**பேராசிரியர்.செ.பாலச்சந்திரன்**
கலைப்பீடாதிபதி

நாடக அரங்கு காலை 9.30
**சத்தியவான்-சாவித்திரி**
தயாரிப்பு –
**திரு.நா.விமலநாதன்**
யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற்கழகம்.

நாடக அரங்கு மாலை 2.30 – 4.30
**மயானகாண்டம்**
**கலைஞர் எம்.தைரியநாதன் குழுவினர்**

பிரவேசம் இலவசம்
ஆர்வலர் அனைவரும் வருக

(சி-8053)


## கந்தபுராண படிப்பு பூர்த்தி

வடமராட்சி, ஜுலை 3

தென்புலோலி தான்தோன்றி உபயகதிர்காம முருகன் ஆலயத்தில் நடைபெற்றுவரும் கந்தபுராணப்படிப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் திருக்கல்யாணப்படிப்புடன் நிறைவுபெறும். நாளைமறுதினம் திங்கட்கிழமை அன்னதானமும் அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை விளாத்திமடையும் இடம்பெறும். (ஐ-173)


## PHARMACIST COURSE IN JAFFNA

**(EXTERNAL PFARACIST `S EXAMINATION)**

* SRI LANKA MEDICAL COUNCIL ஆல் நடாத்தப்படும் பரீட்சைக்கான புதிய பாடத்திட்டத்திற்கு அமைய வகுப்புக்கள் நடைபெறும்.
* MEDICAL COUNCIL இல் பதிவு செய்வதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
* விரிவுரைகள் யாவும் சனி, ஞாயிறு நாள்களில் நடைபெறும்.
* விரிவுரைகள் ஆரம்பமாகும் திகதி 10 07-99 மாலை 2 மணி (S.L.T)
* விரிவுரைகள் நடைபெறும் இடம்.

**பொருளியற் கல்லூரி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
(பெருமாள் கோயில் அருகில்)

*மேலதிக விவரங்களுக்கு:-*

AMBIKA DISPENSARY,
CHAVAKACHCHERI.

JEGAN PHARMACY,
HOSPITAL ROAD, JAFFNA.

SAERAM PHARMACY,
KODIKAMAM ROAD, NELLIADY.

MEDILAND,
MANIPAY.
(Near the Anthoniar Church)
T.P. No:- 021-2943.

PAN PHARMACY,
SITHANKERNEY.

MEDI LAND,
MAIN STREET, CHANKANI.

*COURSE DIRECTOR*
SIVAGANANAPANDITHAN
(PHARMED ACADEMY)
COLOMBO.

JAFFNA LECTURER:- N. SIVABALAN

DIRECTOR:-
MR. K. P. R. NAVARATHNARAJAH.

(67094)


# சாரணர் பாசறை விழா

வலிகாமம் தெற்கு,ஜுலை3

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் வருடாந்த குருளைச் சாரணர், வெளிக்கள நாளும் சாரணர் பாசறை விழாவும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை ஐந்து மணி வரை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் குருளைச் சாரணர்கள், குருளைச் சாரணர் தலைவர்கள் கலந்து கொள்ளும் விளையாட்டுக்கள், பாட்டுக்கள், கைவேலை, அணி நடை, களிப்பூட்டும் நிகழ்வுகள் போன்ற பல நிகழ்ச்சிகள் இடம் பெறும். (ஐ-152)

## பரிசளிப்பு விழா

வலிகாமம்தெற்கு, ஜுலை3

இணுவில் மத்திய கல்லூரியின் கல்லூரித்தினமும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் இரண்டுமணிக்கு கல்லூரி சரஸ்வதி கலையரங்கில் நடைபெற உள்ளன.

அதிபர் துரைஎங்கரசு தலைமையில் நடைபெற உள்ள இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பிரதமவிருந்தினராக கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக இராமநாதன் நுண்கலைபீடத்தலைவரும் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்டவிரிவுரையாளருமான கலாநிதி சபா. ஜெயராசாவும், வலிகாமம் கல்விவலய பாட அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரனும் கலந்து கொள்கின்றனர்.

கௌரவ விருந்தினராக முன்னை நாள் அதிபர் மு.திருஞானசம்பந்த பிள்ளை கலந்து கொள்வார்.

திருமதி இராஜலட்சுமி பாலசுந்தரம்பிள்ளை பரிசு வழங்குவார். (ஐ-152)

## யாழ்ப்பாண நிலை...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனங்களுக்கு வரும் நிதி முழுவதும் குடாநாட்டு மக்களின் தேவைகளுக்கு மட்டுந்தான் பயன்படுத்தப்படுகிறதா என்ற கேள்வி நீண்ட நாள்களாகவே மக்களால் எழுப்பப்பட்டு வருகிறது. அதற்கு பதிலறிவதற்குப் பூனைக்கு மணி கட்டுவது யார் யாரிடம் கேள்வியைக் கேட்பது என்பது சிக்கலான பிரச்சினையாகிவிட்டது.

### முறைப்பாடுகள் அதிகரிப்பு

குடாநாட்டில் மனிதஉரிமை மீறல்கள் அதிகரித்து வருகின்றன. கடந்த ஜுன் மாதத்தில் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் மொத்தம் 69முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 63முறைப்பாடுகள் குறித்து விசாரணைகள் மேற்கொண்டு ஆணைக்குழு அதிகாரிகள் விவரங்களை அறிந்துள்ளார்கள்.ஆறு முறைப்பாடுகள் குறித்து எதுவும் தெரியவர வில்லை.

கடந்த மாதத்தில் மொத்தம் 10 பேர் காணாமற் போனதாக முறைப்பாடு செய்யப்பட்டது. எனினும் அவர்களில் ஒன்பது பேர் எங்கே உள்ளார்கள் என்ற விவரம் கண்டறியப்பட்டுள்ளது. ஒருவரைப் பற்றி எதுவித தகவலும் இல்லையாம். ஆனால் சிலர் படை முகாம் எதிலும் தடுத்து வைக்கப்படவில்லை என்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாலேயே முறைப்பாடுகளும் அதிகரிப்பதாக அறியப்படுகிறது. விடுதலைப் புலிகள் குடாநாட்டிற்குள் ஊடுருவி உள்ளதால் இத்தகைய கைதுகள் தவிர்க்கமுடியாதவை, குறைக்கமுடியாதவை என்று இராணுவத்தரப்பு தெரிவிக்கலாம்.

ஆனால் செம்மணிப் புதைகுழிகளில் சடலங்கள் புதைக்கப்பட்டன. அப்பாவிப் பொதுமக்கள் கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டார்கள் என்பதனை இரண்டு எலும்புக்கூடுகளின் கண்டுபிடிப்பு உறுதி செய்கிறது.

இதன் பின்னரும் படையினர் கண்டபடி கைது செய்வதில் ஈடுபடுவார்களாயின் அது மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தையும் இராணுவத்தினர்மீது வெறுப்பையும் உண்டாக்கும். அரசாங்கம் இது விடயத்தில் மக்கள் நலன் கருதும் நடவடிக்கைகளை எடுக்கத்தவறுமாயின் குடாநாட்டில் ஆக்கிரமிப்பு இராணுவம் ஒன்று நிலைகொண்டதாகக் கொள்வதில் என்ன தப்பு?

போரில் சமர்க்களத்தில் இருதரப்பு ஆயுதபாணிகளும் மோதும் போது ஒருபக்கத்தினரை அடுத்த பக்கத்தினர் கொல்வது வேறு அப்பாவிகளை, பொது மக்களை, நிராயுதபாணிகளை சட்டத்தை ஆயுதமாக்கிக் கைது செய்வதும் கொல்வதும் வேறு. இரண்டாவது அப்பட்டமான மனித உரிமை மீறல் அடக்குமுறை நடவடிக்கை.

எனவே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவோர் எண்ணிக்கை அதிகரிக்கும் போது, குடாநாட்டில் ஜனநாயகம் நிலவுவதாகவோ, நீதி நிலைநாட்டப்படு வதாகவோ, மனித உரிமைகள் பேணப்படு வதாகவோ பெருமை பேசமுடியாது.

தமிழ் மக்கள் அரசாங்கத்திடம் இருந்து தூர விலகிச் செல்லவே இந்த வேண்டாத நிலைப் பாடு வழி செய்யும்.


## ACTIVE MULTI-ANTENNA

**EUROMIND™**

பூஸ்ரர் தேவையில்லை!




உங்கள் டிவியில் அனைத்து அலைவரிசைகளையும் பல்தொழில் திறனுடைய தனியொரு அன்டெனா மூலம் தெளிவாக தங்குதடையின்றிக் கண்டுகளிக்கலாம்!

* VHF/UHF டிவி அலைவரிசைகள்
* FM ரேடியோ அலைவரிசைகள்
* மின்சாரத்தாலும் பற்றரியாலும் இயங்கக்கூடியது

யாழ்ப்பாணத்திற்கான மொத்த வியாபாரிகள் தேவை

மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு உண்டு

**UKAAYE**

**169, BODHIRAJA MAWATHA, COLOMBO -11**
(Gaswork Street, P...)
TEL : 075-370019 FAX : 075-370018



## ராஜா

**யாழ்ப்பாணம்**

**8 ஆம் திகதி வரை**

விஜய் – தேவயானி
ரம்பா, மணிவண்ணன்
மற்றும் பலர் நடித்த

**நினைத்தேன் வந்தாய்**

**10.30, 2.00, 5.00**

(சி-8038)



## லிபேட்டி

யா/அச்சுவேலி மகா வித்தியாலய அபிவிருத்திச் சங்க நிதிக்காக காட்சி

**03-07-99** சனிக்கிழமை
8.30 மணி
**பக்த அனுமான்.**
மாணவர்களுக்கு மட்டும

2.00 மணி
**சிவாஜி நடித்த**
**ராஜ ராஜ சோழன்**

(66667)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரதர் - பவள விழாச் சிறப்பிதழ்

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி

### சி.கணபதிப்பிள்ளை.

குழந்தைகள் மத்தியில் குழந்தையாய், அவர்க ளுக்கு ஏற்றவை செய்துவைத்த, நாவலர் பெருமானின் சரித்திரத்தை, குழந்தைகள் பருகும் முறையிற் பருக, எவ்வாறு பக்குவப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று வெகு காலத்துக்கு முன்னமே எண்ணிய ஒரே ஒருவர் வரதர்.

இப்பொழுதைய தூண்டுதல், அக்காலத்திலிருந் திருக்குமாயின், சிறுவர் சிறுமியரின் பருவங்களைப் பலகூறு செய்து, பருவத்துக்கு ஒருவராக, எத்தனையோ நாவலர் உதயமாகியிருப்பர்.

டாக்டர்

### மு.வரதராசன் (மு.வ).

இலங்கையில் உள்ள எழுத்தாளர்களுள், சமுதாயத் தொண்டர்களின் தொகை பெருகிவருகின்றது. வாழ்க் கையை உள்ளத்தால் உணர்ந்து, சிக்கல்களுக்கு மருந் தும் தேர்ந்து, தெளிந்து அவற்றைத் தம் கதைகளிற் படைத்துக் காட்டுவதில் அவர்கள் ஆர்வம் காட்டுகின் றனர்.

"கயமை மயக்கம்" என்ற இந்தச் சிறுகதைத் தொகுப் பின் ஆசிரியர் திரு.தி.ச.வரதராசன் (வரதர்) - இவ்வகை யான எழுத்துத் தொண்டு புரிந்துவருகிறார். இந்த வரி சையில் அமைந்துள்ள மாதுளம்பழம், வீரம், வெற்றி, புதுயுகப் பெண் ஆகிய சிறுகதைகளைக் கற்பவர்க்கு இது எளிதில் விளங்கும்.

மூதறிஞர், வித்துவான்

### க. சொக்கலிங்கம் M.A (சொக்கன்).

வியாக்கியான காரராகவோ, கதாப்பிரசங்கியாகவோ. ஆய்வு விற்பன்னராகவோ தலைகாட்டாது ஓர் ஆக்க இலக்கியகாரரின் கைவண்ணமாக வரதரின் "பாரதக் கதை" அமைந்துள்ளமையே அதன் தனிச்சிறப்பென லாம்.

நெளிவு சுளிவு இல்லாத நேரான நடை, வரதருக்குக் கைவந்தது. கதையின் ஓட்டத்தினை எவ்வகையிலும் தடைசெய்யாது, இடையிடையே தமது கருத்துக்களை யும் விமர்சனங்களையும் நாசூக்காகச் சொல்லும் பாணி நயம மிக்கது. தமது சிறுகதைகளிலே சமூகப் பிரச்சி னைகளை முன்வைக்கும் அதே துணிவினைப் பாரதக் கதைப் பிரச்சினைகளிலும் முன்வைப்பதிலும் வெளிப்ப டுத்தியுள்ள வரதர் பாராட்டுக்குரியவர். அவர் உள்ளத் திலே 'உண்மை ஒளி' உண்டு என்பதற்கு இவை நல்ல எடுத்துக்காட்டுக்கள்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர்
கலாநிதி

### எஸ். சிவலிங்கராஜா.

வரதருக்கு வயது எழுபத்தைந்து,
ஈழத்து நவீன தமிழ் இலக்கியத்தின்
வயதையும் வரதரின் வயதையும்
ஒப்புநோக்கலாம்......
புதுமையை அவாவி,
நவீனத்துவத்தை உள்வாங்கி,
எதிலும் சாதனை படைக்கத் துடித்த
இளைஞர் குழுவில்......
வரதர் ஒரு மைற்கல் மாத்திரமல்ல.
ஒரு சந்தி; ஒரு கைகாட்டி.
ஒரேநேரத்தில்
மைற்கல்லாகவும், சந்தியாகவும்
கைகாட்டியாகவும்
வாழும் + வாழ்ந்த
எழுத்தாளனே
இலக்கியவரலாறு ஆகிறான்.
வரதரின் வாழ்க்கை வரலாறு
ஈழத்து இலக்கிய வரலாற்றின்
ஒரு கால கட்டம்.
கடின உழைப்பு – அதில் ஒரு
கண்ணியம்;
படைப்பு ஆற்றல் – அதில் ஒரு
பண்பாடு;
பண்பாடே; படைப்பாகிய
படைப்பே பண்பாடாகிய
மரபின் அறாத் தொடர்ச்சி.
இத்தொடர்ச்சி,
நூறாண்டு காணவேண்டும்.

### சி.சிவசரவணபவன் (சிற்பி).

நாங்கள் அடிக்கடி பார்த்தும் கேட்டும் வரும் மனி தர்களை சிலரைத் தன் எழுத்தால் வரைந்து, அவர்கள் நினைக்கின்ற - சொல்கின்ற - செய்கின்ற - விரும்புகின்ற - வெறுக்கின்றவற்றுட் சிலவற்றைப் பொருத்தமாக இணைத்துக் கூறி தன் எழுத்தாற்றலாலும் சொல்லும் முறையாலும் "உண்மையல்ல; கற்பனைதான்" என்ற உணர்வு சிறிதும் எழாதவாறு தடுத்து, எம்மை அழவும் சிரிக்கவும் சிந்திக்கவும் செய்து, எம்முன்னே ஓர் ஒளியை யும் தெளிவையும் மலர்ச்சியையும் எழுச்சியையும் ஏற்ப டுத்துகின்ற ஒருவரை நல்ல, தரமான இலக்கியகர்த்தா என்று சொல்லலாம்; வரதர் என்றும் சொல்லலாம்.

மனித மனம் வெளுப்பதற்காக, மனிதப் பண்புகள் வளரவேண்டும் என்பதற்காக எழுதும் வரதர், சிறுகதைத் துறையில் ஒரு தனி "மூர்த்தி".



## வாழ்க்கையும் இலக்கியமும்

01.07.1924 - பிறப்பு
1928 - பொன்னாலை அ.மி.பாடசாலை,
மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை.
1938 - ஈழகேசரி மாணவர் கல்வி அநுபந்தம் முதற் கட்டுரை பிரசுரம்.
- "நாவல் கோன்" - சிறுவர்நூல் வெளியீடு.
1946-48 - மறுமலர்ச்சி மாத இதழ்.
- ஆனந்தன் மாத இதழ்.
1960 - கயமை மயக்கம் - சிறுகதைத் தொகுதி
தேன்மொழி - கவிதை இதழ்.
"புதினம்"வார இதழ்.
வெள்ளி வார இதழ்.
அறிவுக்களஞ்சியம் மாத இதழ்.
வாழ்க நீ சங்கிலி மன்ன
பாரதக் கதை.
யாழ்ப்பாணத்தார் கண்ணீர்.
வரதரின் பல குறிப்பு.
சிறுகதை எழுதுவோருக்கு பட்டறிவுக் குறிப்புகள்.
திருக்குறள் பொழிப்புரை.

கலாநிதி

### காரை.செ.சுந்தரம்பிள்ளை.

மூத்தவர்; அறிவில் அன்பில் முகிழ்த்தவர்; இலக்கி யத்தில் பூத்தவர்; புதுமை செய்யும் புகழினர், மறுமலர்ச்சி காத்தவர்; கருத்தில் ஊறிக் கனிந்தவர்; வரதர் என்னும் நேத்திரர்; வலிமை மிக்க நெஞ்சினர்; நீடு வாழ்க.

சிறுகதை, கவிதை, நாவல், திறனாய்வு, கட்டுரைகள் இறுக்கமாய் எழுதவல்ல இலக்கியகர்த்தா வாழ்வில் பெறுமதிமிக்க தொண்டு பெற்றதாய் மொழிக்குச் செய்து நறுமணம் வீசுகின்ற நல்லவர், வரதர் வாழ்க.

மலையக முன்னணி எழுத்தாளர்

### தெளிவத்தை ஜோசப்.

தமிழகத்தில் ஒரு புது இலக்கிய மதம் தோன்றக் காரணமாய் இருந்த மணிக்கொடியில் பங்காற்றியவர்கள் பலராக இருக்கலாம்! தமிழ்ச் சிறுகதையின் உருவ வளர்ச்சிக்கு, உணர்வு வளர்ச்சிக்கு, உள்ளடக்க வளர்ச் சிக்கு காலாய் நின்று களம் அமைத்துக் கொடுத்த மணிக் கொடியின் இயக்கச் சக்திக்கு உறுதுணையாய் நின்றவர் கள் பலராக இருக்கலாம். ஆனால் மணிக்கொடி என்ற துமே மனதில் தோன்றும் முதற்பெயர் பி.எஸ்.ராமையா என்பதே.

அதேபோல் ஈழத்திலும் 'ஈழத்துக்கென தனியான இலக்கிய மரபு' இருக்கிறது என்பதனை உணரச் செய்த மறுமலர்ச்சியின் தோற்றத்துக்கும் இயக்கத்துக்கும் உந்து சக்தியாக இருந்தவர்கள் பலராக இருக்கலாம் ஆனால் 'மறு மலர்ச்சி' என்றதுமே மனதில் எழும் முதற்பெயர் தி.ச.வரதராசன் என்பதே.

தமிழில் எதையாவது புதுமையாகச் செய்வதையே இலட்சியமாகக் கொண்டவர் வரதர்.

திரு.சோமகாந்தனை தொகுப்பாசிரியராகக் கொண்டு அவர் வெளியிட்ட 'வரதரின் பல குறிப்பு' ஈழத்துத தமிழ் இலக்கிய வெளியீட்டுத்துறையில் ஒருபாரிய முயற்சி யாகும்.

The Associated Newspapers of Ceylon வெளியிட்ட Ferglison's Directory போன்று தமிழில் வந்த பிரசுரம் இது ஒன்றே ஆகும். நான்கு வருடம் தொடர்ந்து வந்த பெருமையும் அதன் பின்னரும் இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்னும் சிறப்பும் வரதரின் பல குறிப்பிற்குண்டு. இதேபோல் மாணவர்களுக்கான அறிவுக்களஞ்சியமும் வரதரால் வெளியிடப்பட்டது.

பதினான்கு, பதினைந்து வயதில் எழுதத் தொடங்கி யதிலிருந்து ஈழத்து இலக்கியம் அதன் வளர்ச்சி அதன் செழுமை என்றே வாழ்ந்து வரும், இயங்கிவரும். திரு.வர தர் அவர்களுக்கு [illegible] இவ் வேளையில் அவருக்கு இன்னும் நீண்ட ஆயுளும் ஆரோக் கியமும் கிடைக்க வாழ்த்துவோம், பிரார்த்திப்போம்.

பேராசிரியர்
கலாநிதி

### கா.சிவத்தம்பி.

வரதர், ஈழத்துச் சிறுகதையாசிரியர்களுள் முக்கிய மான ஒருவர்; ஈழத்து நவீன தமிழக்கிய வரலாற்றின் ஒரு முக்கிய நிறுவனமாக விளங்கும் "மறுமலர்ச்சி" இயக்கத்தின் ஸ்தாபக அங்கத்தவர்களுள் ஒருவர்; ஈழத்துத் தமிழலக்கியத்தின் முக்கிய பிரசுரகர்த்தாக்க ளுள் ஒருவர்.

வரதர் பழைமைபேண்வாதியல்லர். சமூக வளர்ச்சிப் போக்கின் வரலாற்றுத் தாக்கத்தை உணர்ந்து கொள் ளும் திறன் அவரிடமுண்டு. இந்தத் திறன்தான் சமூக இயைபுள்ள ஓர் எழுத்தாளராக வரதரைத் தொடர்ந்து வைத்திருக்கின்றது என்று துணிந்து கூறலாம். ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றிலே விடுபட முடியாத முக்கியத் துவமுடையவராகத் திகழும் வரதர், ஈழத்துத் தமிழ் எழுத்தாளரிடையே மதிப்பு மிக்க 'மூத்தோன்' ஆக விளங்குகின்றார்.

யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப் பீடாதிபதி,
பேராசிரியர்

### அ.சண்முகதாஸ்.

எம்மிடையே வாழும் ஒரு மூத்த எழுத்தாளர் வரதர். ஆக்க இலக்கிய வல்லுநராக மட்டுமன்றி இலக்கிய மதிப்பீட்டாளராகவும் இலக்கிய வரலாறு கூறுபவராகவும் அவர் அமைகின்றார். அவர் எங்களுடைய இலக்கிய, கலை, பண்பாட்டுக் களஞ்சியம். 'மறு மலர்ச்சி'க்கால எழுத்தாளர்களில் ஒருவரான அவர் பல எழுத்தா ளர்களுடைய வரலாறுகளையும் பல எழுத்துக்களுடைய பின்ன ணிப் புலங்களையும் தன்னுள்ளே வைத்துள்ளார். அவற்றை நாம் பெற்றுப் பலன்பெற வேண்டும்.

மற்றவர்களுக்குப் பயன்பட வாழவேண்டுமென்ற எண்ணத்து டனே வரதர்ஐயா அவர்கள் வாழ்வதனாலேயே அவர் மகிழ்ச்சியு டனும் பெருந்தொகை நண்பர்களுடனும் நிறைவாக வாழ்கின்றார். அறிவுக் களஞ்சியம் போன்ற வெளியீடு மூலமாக பல மாணவர்க ளுக்கு உதவிவந்தார். அவர் மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்து பல பணிகள் ஆற்ற இறைவனை வேண்டுகிறேன்.

நடமாடும் வாசிகசாலை என விளங்கிய

### கனக செந்திநாதன்.

வாலிப உந்துதல்களுடன், காதலின் பலவகைக் கோலத் தையும், காமத்தையும் வைத்துச் சிறுகதைகளைப் படைத்துத் தமது எழுத்தினால், தி.ச.வரதராசன்(வரதர்) வாசகர்களை மயங்கச்செய்தார். இளம் எழுத்தாளர்களுக்கு உற்சாகமூட்டக் கூடியதாக மறுமலர்ச்சி, ஆனந்தன், தேன்மொழி (கவிதைப் பத்திரிகை), புதினம் ஆகிய பத்திரிகைகளைக் காலத்திற்குக் காலம் நடத்திப் பார்த்தவர். 'வாழ்க நீ சங்கிலி மன்ன!' என்னும் வரலாற்று நூலை எழுதியுள்ளார். வள்ளி, இலக்கிய வழி, மூன்றாவது கண், சிலம்பொலி ஆகிய நூல்களைத் தமது வர தர் வெளியீடுமூலம் வெளியிட்டு எழுத்தாளர்களை ஊக்குவித் திருக்கின்றார். அதிககால இடைவெளிக்குப்பின் காதல், கற்பு, வீரம் ஆகிய விடயங்களுக்குப் புரட்சிகரமான போக்கில் 'கரு' சமைத்துப் பழையபடியுந் தமது இடத்தைத் தாபித்து 'கயமை மயக்கம்' என்னுஞ் சிறுகதைத் தொகுதியை வெளியிட்டுள்ளார். 'மூர்த்தி மாஸ்டர்' பெரும்பாலான கதைகளிலும் நடமாடும் சுயபிம் பங்காட்டும் ஒரு பாத்திரமாகும்.

கலாநிதி

### க.குணராசா (செங்கை ஆழியான்).

வரதரது கதை சொல்லும் பாங்கும் சமூக நோக்கும் அவரது சிறுகதைகளைத் தனித்துவப்படுத்தியுள்ளன. இலக்கியத் தேடலுடன் கூடிய கலாபூர்வச் சித்திரிப்பு அவரது கதைகளிற் பரவி நிற்கும் - வரதரை ஒதுக்கி விட்டு ஈழத்துச் சிறுகதை வரலாற்றை எழுதிவிட முடி யாது.

ஈழத்து நவீன இலக்கிய வரலாற்றின் ஒரு முக்கிய புடிக்கல்லாக விளங்கிய மறுமலர்ச்சி இயக்கத்தின் பிதாமகர்களுள் "வரதர்" ஒருவர். அவர் வெளியிட்ட மறு மலர்ச்சி, ஆனந்தன், புதினம், வெள்ளி, அறிவுக்களஞ் சியம் ஆகிய சஞ்சிகைகள் ஈழத்து இலக்கியத்துக்குப் பெருமை சேர்க்கும் பல படைப்புக்களையும் படைப்பாளி களையும் தந்துள்ளன - வரதரை ஒதுக்கிவிட்டு ஈழத்து இலக்கிய வரலாற்றை எழுதிவிடமுடியாது.

ஈழத்துக் கவிதை வளர்ச்சிக்கெனத் "தேன்மொழி" என்றொரு கவிதைச் சஞ்சிகையை அவர் நடத்தியுள் ளார். ஈழத்தில் இன்று சிறந்து விளங்குகின்ற பல கவிஞர்களைத் தேன்மொழி இனங்காட்டியிருக்கிறது - வரதரை ஒதுக்கிவிட்டு ஈழத்து நவீன கவிதை வர லாற்றை எழுதிவிடமுடியாது.

### நா.சோமகாந்தன் (ஈழத்துச் சோமு).

ஈழத்தின் நவ இலக்கிய வளர்ச்சிக்கு வரதர் அவர் கள் ஆற்றிய முன்னோடிப் பணிகள் மிகவும் காத்திரமா னவை. புதுவேகங்கொண்ட புத்திலக்கியம் என்னும நதி வரதரின் "மறுமலர்ச்சி" யூடாகக் கிளம்பி, பின் பல தளங்களின் வழியாகப் பிரவாகித்துப் பொங்கிப் பரவிச் செழுமையூட்டி... சென்ற அரைநூற்றாண்டில் ஈழத்து இலக்கியப் பூங்காவில் அழகும் மணமும் மிக்க பல்லா யிரக்கணக்கான பலவண்ண மலர்கள் புஷ்பிக்கக் கார ணமாகிவிட்டது.

வரதரின் பல் சிறுகதைகள் நான்கு தசாப்தங்களின் பின்பும் வாசகர்களின் மனங்களில் நிலைத்து நிற்கின் றன. அவருடைய சிருஷ்டிக் கலையின் நேர்த்தி அத்த கையது. ஈழத்து எழுத்துலகில், நவீன கவிதையின் முன்னோடியும் அவரே. நல்லதொரு நாவலாசிரியர் என்பதையும் சென்ற ஆண்டில் நிரூபித்துவிட்டார். சிறு சிறு வசனங்களாலான அவருடைய கட்டுரைகள் சிந்த னைக்குச் சுவையானவை என்பதுடன் சுருங்கசசொல்லி விளங்க வைத்தல் என்பதற்கும் உதாரணமாக விளங் குவன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## தவறிவிட்டது

1995, இடம்பெயர்வின் போது எனது இலக்கியப் படைப்புக்களின் ஒட்டு கட்டுப்புத்தகங்கள், நான் எழுதிய சில நூல்களின் பிரதிகள் மற்றும் இலக்கியம சம்பந்தமான கோவைகள் என்பன சாவகச்சேரி, சரசாலையில் காணாமல் போய்விட்டன. (அச்சமயம் நான் கொழும்பில்). மேற்கண்டவைகள் மீளக்கிடைக்க உதவக் கூடியவர்கள் "பொ.சண்முகநாதன், சங்குவேலி தெற்கு, மானிப்பாய்." எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (67005)

## புறோயிலர்

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் (பாதிக்கோழி உட்பட) தினமும் சுத்தம்செய்து பெற்றுக் கொள்ளலாம். மிக நுட்பமான நிறுவை. அத்துடன் அடைமுட்டையும வாழைக் குட்டிகளும் உண்டு. தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரா வளவு)19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (66987)

இறைச்சிக்கோழி (Broiler), கல்பேட்ஸ் என்பன விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்புஇல: 40,கோயில் வீதி, யாழ்ப்பாணம். (66939)

Broiler இறைச்சிக்கோழிகள் தினமும் சுத்தம் செய்து மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: லக்கி, பலாலி றோட்: இல:-1, மதவடி லேன், திருநெல்வேலி. (67061)

## T.V.கள் விற்பனைக்கு

2030, 2060, 2032 மற்றும் 27" Sony, National ரீ.வி.கள் விற்பனைக்குண்டு. (மிகவும் மலிந்த விலையில்) S.சதாகரன் மூளாய் றோட், மத்தியூஸ்லேன்,சுண்டுக்குளி. (66978)

## ஆங்கிலம் விசேடமாக

O/L இல் Credit, Distinction, G.A.Q, பட்டப்படிப்பு ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். (B.Sc, London Inter ஆசிரியரால்) 85, சிவன் கோவிலடி, சிவன்கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (67050)

## விற்பனைக்கு

புதிய பனசொனிக் சிங்கிள் லைன் (ஜப்பான்) ரெலிபோன்கள், கசியோ ஸ்ரொப்வோச் விற்பனைக் குண்டு. தொடர்பு இல.12. கனகசபை அவனியு (யாழ்.இந்துக் கல்லூரி பின்புறம்) (சி-8073)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 39வயதுடைய பெண்ணுக்கு மணமகன் தேவை. பெண் உயரம் 5அடி, 2இல் செவ்வாய், சீதனம் தரப்படும். உள்நாட்டிலிருப்பவராகவும் ஆசிரியராகவும் இருந்தால் விரும்பத்தக்கது. சொந்தத் தொழில் புரிவோரும் தாரமிழந்தோரும் விண்ணப்பிக்கலாம். மணமகனின் குறிப்பு, குடும்ப விவரத்துடன் முழு விவரமும் அறியத் தரவும். விளம்பர இல: 901, மே/பா. 361,உதயன். கஸ்தூரியார் வீதி. (67060)

## தேனீ வளர்ப்பு

தேனீக்கூடுகளில் இருந்து தேன் எடுக்க உகந்தகாலம் இதுவாகும். தேனீக்களை பெட்டிகளிலும் குடியமர்த்தலாம். தொடர்பு கொள்க: 976, கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (67074)

## பொருளியல்

பேரினப் பொருளாதாரம், வெளிவாரி விளைவுகள், சர்வதேச வர்த்தகம், மாற்றுவீதம் ஆகிய நூல்கள் யாழ்ப்பாணநகரின் பிரபல புத்தக சாலைகளில் கிடைக்கும். ஆசிரியர் வே.கருணாகரன். (67080)

## மணமகள் தேவை

நெதர்லாந்தில் நிரந்தர தொழில் புரியும் 27 வயதை உடைய விருச்சிகராசியில் பிறந்த Sponser பண்ணக் கூடிய அழகிய மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. சீதனம் பேசித் தீர்மானிக்கலாம். தரகர் தேவையில்லை. தொடர்பு: 1.கனகசிங்கம், அல்லாரைவீதி, மீசாலை கிழக்கு, மீசாலை. 2. K.இராசமந்திரி, நுணாவில்மேற்கு,சாவகச்சேரி. (67056)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச்சேர்ந்த நகைக்கடை உரிமையாளர், 30வயது, கிரகபாவமுடைய, 5'5" உயரமுடைய மணமகனுக்கு மணமகள் தேவை விளம்பர இல: 902, மே/பா. உதயன் 361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம். (67068)

## வீடு விற்பனைக்கு

மீசாலை தெற்கில் புகையிரத நிலையத்திற்கும் புத்தூர் சந்திக்கும் இடையில் பிரதான வீதியில், 3 1/2 பரப்பில் உள்ள கல்வீடு, மலசலகூட, நல்ல தண்ணீர்க் கிணற்றுடனும் பல பயன்தரு மரங்களுடனும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த.சிவகுரு, மீசாலைதெற்கு, மீசாலை. (67042)

## மெய்வன்மைப் போட்டி

தென்மராட்சி,ஜூலை3

மட்டுவில் தெற்கு கலைமகள் மழலைகள் பூங்கா சிறுவர்களின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பூங்கா மைதானத்தில் செ.க.துரைரத்தினம் தலைமையில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மைவிருந்தினராக சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் மு.செ.சரவணபவவும் சிறப்பு விருந்தினராக டாக்டர் பே.பிலிப்ஸ்ஸூம் கலந்துகொள்வர். (இ-117)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 21-02-1919

மறைவு: 05-08-1996

திருமதி

### மாதவர் நாகம்மா

அன்புக்கினிய எங்கள் அம்மம்மாவே..! அன்பாக பாசமாக் எம்முடன் வாழ்ந்தீரே! பாதிதனிலே எம்மையெல்லாம் விட்டு பிரிந்தீரே! ஆண்டு மூன்று என்ன எத்தனை ஆண்டுகள் தான் சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும்.


உங்கள் ஆத்மா சாந்தி பெற பொன்னாலை நாராயணன் பாதங்களை வேண்டுகின்றோம்.

K. கிரிசாந்,
K. ரேணுசாந்
K. ஆரணி
(பேரமக்கள்)

பொன்னாலை,
சுழிபுரம்.

(67052)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 20 04 1977

உதிர்வு 03 07 1995

### துரைசிங்கம் உசாநந்தினி

அன்பு மகளே உசா!
ஆண்டுகள் நான்கு வேகமாய் பறந்ததம்மா
ஆறாது எம் கவலை அலை கடலாய் விரியுமம்மா!

குடும்பத்தினர்

இராஜவீதி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(C/8049)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் முத்துக்குமாரு நடராசா

(காணி அதிகாரி)

1999-06-03 அன்று கடமை நேரத்தில் இறையடி சேர்ந்த அன்னாரது ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திப்பதுடன், அமரரின் பிரிவால் துயருறுகின்ற குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரதேச செயலரும்,
[illegible]

பிரதேச செயலம்,
கரவெட்டி.

(சி-8045)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜோர்ஜியாவில்

## ஆங்கில மொழியில் மருத்துவக் கல்வி

(ஜோர்ஜிய அரச மருத்துவ பல்கலைக்கழகம்)

தகுதியும் வசதியுமிருந்தும் மருத்துவக் கல்வியை மேற்கொள்ள முடியாத மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்.

1. ஜோர்ஜிய அரச மருத்துவ பல்கலைக்கழகம் முற்றிலும் ஆங்கில மொழியிலேயே போதனை.
2. ஸ்ரீலங்கா அரச மருத்துவ சபையாலும் (S.L.M.C) உலக சுகாதாரநிறுவனத்தாலும் (W.H.O) பிரித்தானிய மருத்துவ சபையாலும்(B.M.C) அங்கீகரிக்கப்பட்டது. ரஷ்யாவிலும் அதன்பொது நலவாய நாடுகளிலும் ஆங்கிலமொழிப் போதனை (English Mediem) பல்கலைக்கழகங்களுள் சிறந்த முன்னோடியானது.
3. மற்றயவற்றைவிட குறைந்த கட்டணம்.
4. 5வருடத்தில் (M.B.B.S) 7வருடத்தில் M.D.
5. ஸ்ரீலங்கா மருத்துவபீட பாடவிதானங்களோடு ஒன்றினைவான பாடவிதானம்.
6. சிறந்த நூல்நிலைய வசதி (Lending Library).
7. சிறந்த பேராசிரியர்கள் / விரிவுரையாளர்கள்.
8. குறைந்த வாழ்கைச்செலவு. சிறந்த காலநிலை.

MR.S.Thiagarajah
109/5, Kalanithissa M.W,
Wanavasala,
Kelaniya.
T.P. 074-818180

(67078)

## மிற்சுயி (MITSUI) அட்லஸ்(ATLAS)

## சிமெந்து விற்பனை

ரோக்கியோ சிமெந்து கம்பனியின் மிற்சுயி(MITSUI) அட்லஸ் (ATLAS) சிமெந்துகள் சில தினங்களில் விற்பனைக்கு வருகின்றன. உங்கள் ஓடர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

இவை அனைத்தும் பொதிசெய்யப்பட்ட சில தினங்களில் இங்கு விற்பனைக்கு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

விவரங்களுக்கு:-

**ஜெசிபா ஏஜென்சி**

**132, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C/8065)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில்: 03-10-1934

விண்ணுலகில்: 24-06-1997

அமரர்

### தாமு சங்கரப்பிள்ளை

திதி: 03-07-1999 (ஆனிமாத அபரபட்ஷ பஞ்சமி)

அன்புத் தெய்வமே! எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே! பண்பின் சிகரமே, பாசத்தின் உறைவிடமே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஈராண்டு மறைந்ததே. ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் என்றும் உங்கள் நினைவு எம் இதயங்களை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

"லிங்கபவனம்"
கரணவாய் மத்தி,
கரவெட்டி.

(66915)

## அதிரடி அரங்கு

குடாநாட்டின் பல பிரதேசங்களில் வீட்டிலிருப்போரா குடும்பமாய் படம் பிடித்து பிரதியை ஒப்படைக்க வேண்டும் என அவ்வப்பகுதி படையினரால் வற்புறுத்தப்படுவது பலத்த சர்ச்சையைத் தோற்றுவித்திருப்பது நாம் அறிந்ததே. அப்பாவித் தமிழ் மக்களை சீற்றமுற வைத்திருக்கும் உத்தரவு இது. இது ஒரு புறமிருக்க, இந்த விடயத்திலும் தட்டிச்சுத்தப் பார்க்கும் ஓர் உள்ளூர் உத்தியோகத்தர் அணி குறித்து பல முறைப்பாட்டுக் கடிதங்கள் வந்த வண்ணம் உள்ளன.

படம் பிடிப்பதற்கு ஆட்களை ஒழுங்குபடுத்தும் கிராமசேவையாளர்கள் சிலர் அதன் மூலம் கொழுத்த 'கமிஷன்' பணம் சம்பாதிப்பதாக முறைப்பாடு செய்யப்படுகிறது.

சில இடங்களில் படம் பிடித்து பிரதி செய்து கொடுக்க அறுபதுரூபா கட்டணம். சில இடங்களில் அதற்கு எழுபது ரூபா. கிராமசேவையாளரின் 'கொமிஷன்' தொகைக்கு ஏற்ப 'ரேட்' மாறுபடுகின்றது. சில கிராம சேவையாளர்கள் தாங்களே கமரா ஒன்றை எடுத்து வந்து, பிலிமை 'லோட்' செய்து, படம் பிடிக்கத் தெரியாத கற்றுக்குட்டிகளைத் தேடிப்பிடித்து அவர்கள் கைகளில் அந்தக் கமராக்களைக் கொடுத்து நிழல்படம் என்ற பெயரில் நிழல் போல் ஆள்கள் தெரியக் கூடியதாகப் படம் எடுத்து முக்காவாசிப் பணத்தைச் சுருட்டிக் கொள்கின்றார்கள்.

இத்தகைய கிராமசேவையாளர்களின் சுத்துமாத்து படைத்தரப்புக்கு மணந்ததை அடுத்து பல இடங்களில் அவர்கள் துருவித்துருவி விசாரணைகளை நடத்துவதாகத் தெரியவந்துள்ளது.

* * * *

'அதிரடி அரங்கு' பகுதிக்கு வாராந்தம் பல டசின் கணக்கில் வாசகர்களின் கடிதங்கள் வந்து குவிவது வழக்கம். பல கடிதங்களில் விடயம் இருக்கும். சுவையான தகவல்களும் கிட்டும்.

அண்மைக்காலமாக வரும் கடிதங்கள் பலவற்றில் ஒரே மாதிரியான விடயங்கள் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

யாழ் குடாநாட்டில் அரச அலுவலகங்கள், திணைக்களங்கள், கல்வி, உயர்கல்வி நிறுவனங்கள் போன்றவற்றில் உயர் பதவிகளில் இருக்கும் அதிகாரிகள் போன்றோரின் 'லீலைகள்' குறித்துத்தான் இக்கடிதங்களில் பிரஸ்தாபிக்கப்படுகின்றன.

ஊர் முழுவதும் அடிபடும் கதையை ஏன் 'மின்னல்' அமுக்கப்பார்க்கின்றார்? அவரும் இத்தகைய 'லீலை'களுக்கு உடந்தையா? என்றெல்லாம் கோபத்துடன் கேள்விக்கணை தொடுக்கும் வாசகர்களின் கடிதங்கள் பலப்பல.

வெறும் கதைகளை வைத்து எதையும் எழுத்தில் கொண்டுவர முடியாது. திட்டவட்டமான ஆதாரங்கள் இல்லாமல் - வெறும் ஊகம், சந்தேகம் ஆகியவற்றின் அடிப்படையில் - யாரையும் சுலபமாகக் களங்கப்படுத்தி விடமுடியாது; களங்கப்படுத்தக்கூடாது.

அதற்காக மறைவில் அதிகாரிகள் புரியும் லீலாவிநோதங்களை பத்திரிகைகள் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் என்பதல்ல.

வெறும் கடிதங்களில் 'மின்னல்' மீது குற்றச்சாட்டு சுமத்துவதை விடுத்து உரிய ஆதாரங்களுடன் - சாட்சியங்களுடன் - தொடர்பு கொள்வது தான் சிறந்தது.

யாழ்ப்பாணத்தில் முன்னணி வகிக்கும் டாக்டர் ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு அவர் தன்னைக் கெடுக்க முயன்றார் என இடம், காலம் குறிப்பிட்டு ஒரு பெண் கடிதம் எழுதியிருந்தார். சம்பவம் உண்மையானால் அது கண்டிக்கப்பட வேண்டியது; உரியவர் தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் வெறும் கடிதத்தை வைத்துக் கொண்டு பத்திரிகை அந்தப் பாதிப்புக்கு நிவாரணம் எதனையும் பெற்றுத் தரமுடியாது!

சரி. என்ன ஆச்சுது நமது உயர் அதிகாரிகளுக்கு? பலரின் பெயர் இப்படி 'ரிப்பேர்' ஆகிவிட்டிருக்கின்றதே. சட்டம், ஒழுங்கு சீர்குலைவு அவர்களுக்கு வாய்ப்பாகி விட்டதா?

'பனை மரத்தின் கீழிருந்து பால் குடித்தாலும் கள்ளு' என்பார்கள். இது நம்மத்தியில் உள்ள பல அதிகாரிகளுக்கு விளங்குவதில்லை. யாரோ சாப்பிட்டு விட்டுப்போட்ட வாழைப்பழத்தின் தோலை எடுத்து தமக்குப் பக்கத்தில் வைத்துக் கொண்டு இருப்பதால் வாழைப்பழம் சாப்பிட்ட குற்றம் அவர் மீதல்லவா விழுகின்றது? இப்படியும் சில அதிகாரிகள்.

எப்போது திருந்தப்போகின்றார்களோ?

* * * *

விடுதலைப் புலிகள் குறித்தும் தலைவர் பிரபாகரன் குறித்தும் தென்னிலங்கை மற்றும் வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் அவ்வப்போது பல செய்திகளை வெளியிடுவது வழக்கம். அவை சில சமயங்களில் பரபரப்பையும் வியப்பையும் கூட ஏற்படுத்துவனவாகவும் இருப்பதுண்டு. அந்த வகையில் ஒரு செய்தி:-

நேற்று முன்தினம் கொழும்பில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா மண்டபத்தில் 'மெஸ்மெரிஸம்', 'ஹிப்னாடிஸம்' ஆகியவை சம்பந்தமான நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. இந்தத்துறையில் மிகவும் திறமைசாலியான கலாநிதி நெவில் டி சில்வா நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார். நிகழ்ச்சியின் முடிவில் தமது ஹிப்னாடிஸ திறமை மூலம் சுமார் ஐம்பது பார்வையாளர்களை ஆழ்ந்த மயக்க நிலைக்கு அவர் ஆளாக்கிக் காட்டினார்.

ஹிப்னாடிஸம், ஆழ்நிலைத் தியானம் போன்றவை மூலம் நோய்களைக் குணப்படுத்த முடியும் என்றும், ஞாபகசக்தியையும், சரீர பலத்தையும் அதிகரிக்கச் செய்யவும், மருத்துவர்களால் கைவிடப்பட்ட நோய்களுக்குப் பரிகாரம் தேடவும் முடியும் என்றும் குறிப்பிட்ட கலாநிதி சில்வா, இந்த விஞ்ஞானத்தை தலைவர் பிரபாகரன் நன்கு கற்றுத் தேர்ந்தவர் என்றும் கூறினார். பல வருடங்களுக்கு முன்னர் இத்துறை தொடர்பாக யாழ்ப்பாணத்தில் விஞ்ஞானக் கண்காட்சி ஒன்றைப் பிரபாகரன் ஒழுங்கு செய்திருந்தார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரபாகரனுக்கு ஹிப்னாடிஸம் தெரியுமோ தெரியவில்லை. ஆனால் அவருக்கு மக்களை நன்கு கவரத் தெரிகின்றது என்பது மட்டும் உண்மை. தமிழ் மக்கள் அவரின் பின்னால் அணிவகுத்து நிற்பதே அதற்குச் சாட்சியல்லவா?

–மின்னல்.

# நுவரெலியாவில் பதற்றம் ஏற்படுத்திய 'கிபிர்' விமானம்

கொழும்பு, ஜூலை3

மத்திய மலைப்பிரதேசத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த விமானப் படையின் 'கிபிர்'சுப்பசொனிக் விமானம் ஒன்றில் இருந்து வெளியான பெரும் வெடியோசை மற்றும் தீச்சுவாலை காரணமாக நுவரெலியா பிரதேச மக்கள் பீதியடைந்தனர்.

கடந்த செவ்வாயன்று இச்சம்பவம் இடம்பெற்றது.

வெடியோசையை அடுத்து அந்த விமானம் ஹக்கல பாதுகாக்கப்பட்ட காட்டுப்பகுதிக்குள் வீழ்ந்திருக்கலாம் என அஞ்சிய கிராமவாசிகள் உடனடியாக அதுபற்றி நுவரெலியா பொலீசாருக்கு அறிவித்தனர். அதனையடுத்து பொலீசார் அந்த வனப்பிரதேசத்தில் தேடுதல் நடத்தினர். எனினும் விமானம் அப்பகுதியில் காணப்படவில்லை.

பின்னர் விமானப்படை தலைமையகத்துடன் தொடர்பு கொண்டபோது விமானத்துக்கு ஆபத்து எதுவும் நேரவில்லை என்பது தெரியவந்தது.

விமானத்தில் இருந்து வெளியான தீச்சுவாலையினால் அப்பகுதியில் காட்டு மரங்கள் சில எரிந்தன. (ஐ-8)

### பஸ் சேவை ஸ்தம்பிதம்

நெடுந்தீவு, ஜூலை 3.

நெடுந்தீவில் சேவையில் ஈடுபடும் ஒரேயொரு பஸ் வண்டியும் அதன் வில்லுத்தகடு உடைந்து பழுதடைந்ததால் சேவை ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இதனால் நோயாளர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-111)

யாழ்.மீனவர்களுக்கு ஐ.நா.உதவியுடன்

# கட்டுமரம் தயாரிப்பதற்கான மரங்கள் கப்பல் வசதி இன்றி கொழும்பில் தவம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

கப்பலில் இட ஒதுக்கீடு கிடைக்காத காரணத்தினால் யாழ்ப்பாணத்திற்குக் கட்டுமரங்கள் கட்டுவதற்கெனக் கொண்டு வரப்பட வேண்டிய அல்பீசியா மரங்கள் கொழும்புத் துறைமுகத்தில் நீண்ட காலமாக வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர்களுக்கு 75 கட்டு மரங்களை வழங்குவதற்கு முன்னோடியாக ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தினால் வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திடம் 18 லட்சம் ரூபா கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த சமாசத்திற்கென தென் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட மேற்படி மரங்களை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவர கப்பலில் இட ஒதுக்கீடு கிடைக்காத காரணத்தினால் கொழும்புத்துறைமுகத்தில் நீண்ட நாள்களாக அவை முடங்கிக் கிடக்கின்றன.

இதனால் ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தின் கடற்றொழிலாளர்களுக்கான கட்டுமரம் வழங்கும் திட்டத்தை நிறைவேற்ற முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக இத்திட்டத்திற்குப் பொறுப்பான அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசத்தினால் இதுவரையும் ஒன்பது கட்டு மரங்கள் மட்டும் ஐ.நா.அபிவிருத்தி திட்டத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன. (ஐ-5-173)

### ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஜூலை 3.

யாழ். பரியோவான் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் 83 ஆவது வருடாந்த ஒன்றுகூடலும் பொதுக் கூட்டமும் இன்று சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு கல்லூரியின் பீற்ரோ ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கல்லூரி மாணவர்களுக்கும் கல்லூரி பழைய மாணவர்களுக்குமிடையே கிரிக்கெட், உதைபந்தாட்ட போட்டிகளும் இடம்பெறவுள்ளன. (ஐ.9)

### கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

ஊர்காவற்றுறை புளியங்கூடல் இத்தன் முத்து விநாயகர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8மணி முதல் 9 மணிவரை நடைபெறும்.

இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.57 மணி தொடக்கம் 4.27 மணி வரை கிரியைகள் ஆரம்பமாகி நடைபெறும். (ஐ-9)

### கட்டுத்துவக்கு வெடித்து இருவர் காயம்

யாழ்ப்பாணம். ஜூலை 3

வன்னியில் அக்கராயன் பகுதியில் 'கட்டுத்துவக்கு வெடித்து இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்தார்கள்.

செல்வகுமார் (வயது 20) இந்திரன் (வயது 20) ஆகிய இருவருமே அக்கராயன் நான்காம் கட்டைப்பகுதியில் வேட்டைக்குச் சென்ற சமயம் கடந்த செவ்வாய்க்கிழமை கட்டுத்துவக்கு வெடித்து படுகாயமடைந்தனர்.

இவர்கள் இருவரும் அக்கராயன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-9)

### பாலர் விளையாட்டுவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 3

ஞானக்குழந்தை இல்ல பாலர் பாடசாலையின் நான்காவது ஆண்டு பாலர் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் பாடசாலை ஆசிரியர் செல்வி தமயந்தி இலங்கநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வித் துறை விரிவுரையாளர் திருமதி ஜே.இராசநாயகம் கலந்துகொள்வார். (ஐ-9)

### சுகாதார பணிமனைக்கு புதிய கட்டடம்

திருநெல்வேலி ஜூலை 3.

நீண்டகாலமாக வாடகை கட்டடத்தில் - இடநெருக்கடிக்கு மத்தியில் - இயங்கி வரும் யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனைக்கு மூன்று மாடிக் கட்டடம் நிறுவப்படவுள்ளது.

இதன் ஆரம்ப கட்டமாக கீழ் மாடிக்கட்டடத்தை இவ்வருடத்தில் நிறுவுவதற்கு கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சு 25 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

யாழ். சுகாதாரத் திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியம் இயங்கிய கட்டடம் அகற்றப்பட்டு அக்காணியில் இப்புதியமாடிக் கட்டடம் நிறுவப்படவுள்ளதாக யாழ் சுகாதாரத் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். இக் கட்டடத்தை அமைக்கும் வேலைகள் கட்டட நிர்மாணத் திணைக்களத்தினால் தனியார் ஒப்பந்தக்காரரிடம் வழங்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது. (ஐ-135)

### மதிப்பீடு

வலி.கிழக்கு, ஜூலை 3

யாழ். மாவட்டத்தில் தமது சொந்த இடங்களுக்குச் சென்று குடியமர முடியாத நிலையில் இதுவரை 21 ஆயிரம் குடும்பங்களைச்சேர்ந்த 60 ஆயிரம் மக்கள் உள்ளனர்.

இவர்களில் [illegible] வலி.வடக்கு, [illegible] கிளாலி போன்ற இடங்களைச் சேர்ந்தவர்கள். (ஐ-180)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



யாழ்- சிறுப்பிட்டியை பிறப்பிடமாகவும்
யாழ் - வீமன்காமத்தை வாழ்விடமாகவும் கொண்டு
வீளங்கிய

**அமரர் ஆசைப்பிள்ளை கதிரவேல்**
(குணசிங்கம்)
(ஓய்வு பெற்ற லிகிதர் - கச்சேரி, யாழ்ப்பாணம்)

மலர்வு: **06-03-1933** மறைவு: **02-07-1995**

**திதி: 03-07-1999**

ஆண்டு நான்கு சென்றிடினும் அழியாத சித்திரமாய் நெஞ்சில் நிறைந்துவிட்ட தெய்வமே! அன்புத் தெய்வமே எங்கள் குடும்பத்தலைவரே! உம் ஆத்மா சாந்தி அடைய இறைவன் பாதத்தில் எம் அஞ்சலியைச் செலுத்தி ஆறுதல் அடைகிறோம்.

உம் நினைவால் வாடி நிற்கும்.

**அன்புக் குடும்பத்தினர்**
**புவனேஸ்வரி**
(மனைவி) (பிரான்ஸ்)
பிள்ளைகள்:
றஜீவன் (லண்டன்),
யசோதன்(பிரான்ஸ்),
யசோதா (பிரான்ஸ்),
றஜிதா (லண்டன்).

முகவரி:
வீமன்காமம்,
தெல்லிப்பழை.

தகவல்:
**செ. இராஜேஸ்வரன்** (இராசன்),
(மைத்துனர்)
கோண்டாவில்.

(67100)

## காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி கோவில்

## மஹோற்சவ விஞ்ஞாபனம

**குகனேயச் செல்வர்காள்,**

நிகழும் பிரமாதி வருஷம் ஆனி மாதம் 19 ஆம் நாள் (03-07-1999) சனிக்கிழமை துவஜாரோகணத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று 13-07-1999 ஆம் திததி செவ்வாய்க்கிழமை பூங்காவனத்துடன் நிறைவுபெறும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகிறோம்.

கிரியாவிவரம:

**03-07-99** சனிக்கிழமை பகல் 12.00மணி **துவஜாரோகணம்.**
**09-07-99** வெள்ளிக்கிழமை பகல் 1.00மணி **கார்த்திகை -உற்சவம், வேட்டைத்திருவிழா.**
**10-07-99** சனிக்கிழமை இரவு 7.00மணி **பெரிய சப்பறம்.**
**11-07-99** ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00மணி **இரதாரோகணம்.**
**12-07-99** திங்கட்கிழமை பகல் 12.00மணி **தீர்த்தோற்சவம்.**
**13-07-99** செவ்வாய்க்கிழமை இரவு 7.00மணி **பூங்காவனம்.**

குறிப்பு: ஆலய உற்சவ நாள்களில் யாழ்-காரைநகர் போக்குவரத்து வசதிகள் உண்டு.

**களபூமி இந்து இளைஞர் மன்றம்**
**திக்கரை.**

(67106)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச தரப்பு

# எம்.பிக்கள், அமைச்சர்கள் வெளிநாடு செல்லத் தடை

## ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, ஜூலை 3

சகல அமைச்சர்களும் முக்கிய அரச நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தவருட இறுதிவரை வெளிநாடு செல்வதைத் தவிர்க்க வேண்டும் என்று ஜனாதிபதி அறிவுறுத்தியுள் ளார் எனத் தெரியவந்துள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் நடை பெற்ற சமயம் இந்த அறிவுறுத்தலை ஜனாதிபதி விடுத்தார் என்றும்-

அவசரதேவைக்கு தமது அனு மதி பெற்று வெளிநாடு செல்லலாம் என்று ஜனாதிபதி கூறியுள்ளதாகவும்-

சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரி வித்தார்.

இந்தவருட இறுதியில் ஜனாதி பதித் தேர்தலை நடத்த வசதியா கவே இந்த அறிவுறுத்தலை ஜனாதி பதி விடுத்துள்ளார் என செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன. (இ-3)

## அருள்நெறி விழா

யாழ்ப்பாணம், ஜூலை3

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணை யுடன் நடத்தப்படவுள்ள அருள்நெறி விழா எதிர்வரும் 11ஆம் திகதி காலை 8.00 மணிமுதல் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற இருக்கின்றது. (உ-3)


## வெள்ளிவிழா அழைப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் 25 ஆவது வருட நிறைவுநாள் நிகழ்வுகள் 04.07.1999 நாளை ஞாயிறு தினம் கொண்டாடப்படுகின்றது. நிகழ்வுகள் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி பி.ப.5 மணிவரையும் இடம்பெறும். ஒன்றிய முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், அவர்களது பெற்றோர், அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள் அனைவரும் இந்நிகழ்வுகளில் கலந்து இதுவரை எம்மை வழிநடத்திய இறைவனுக்கு நன்றி கூறி, தொடர்ந்தும் வழிநடத்த இறையாசீர் வேண்டவும், இந்நாளில் எம் மகிழ்வில் எம்மோடு இணைந்து கொள்ளவும் மிகவும் அன்புடன் அழைக்கின்றோம்.

**விழா முதல்வர்:**

**அதிவந்தனைக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை** அவர்கள்.
(யாழ். ஆயர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்)

**பிரதம விருந்தினர்:**

**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை** அவர்கள்.
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.)

**இயக்குநரும், செயற்குழு உறுப்பினரும்.**
**கத்தோலிக்க மாணவர் ஒன்றியம்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

(67141)



யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை

## இல்லம் மெய்வல்லுநர் போட்டி 1999

**காலம்:** 03.07.1999 இன்று சனிக்கிழமை பி.ப.1.30 மணி
**இடம்:** யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி மைதானம்
**தலைவர்:** திரு.அ.நடராசா (அதிபர்) அவர்கள்

❁ பிரதம விருந்தினர் ❁
**திரு.க.தனபாலசிங்கம் அவர்கள்**
(கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய்)

❁ சிறப்பு விருந்தினர் ❁
**திருமதி வி. பசுபதிப்பிள்ளை அவர்கள்**
(அதிபர், யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி)
தங்களை அன்புடன் அழைக்கின்றோம்

**அதிபர், ஆசிரியர்கள்,**
**மாணவர்கள், பெற்றோர்கள்**

(67140)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் .இராமையா

எமது கல்லூரி ஆசிரியர் இ.ஜெகதீஸ்வரன் அவர்களின் அன்புத்தந்தையார் காலமானதையிட்டு இன்று நடைபெறும் 31ஆம் நாள் நினைவுநாளில், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிராத் திப்பதுடன் அவரின் குடும்பத்தனருக்கு எமது ஆழ்ந்த அநுதா பங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

**ஆசிரியர் கழகம்,**
கொக்குவில் இந்துக்கல்லூரி,
கொக்குவில்.

(C-8079)

## 133ஆவது நாள் நினைவஞ்சலி



மலர்வு 10/03/1926

உதிர்வு 11/02/1999

### திருமதி கந்தவனம் சற்குணம்

எங்களை அன்பாகவும் பண்பாகவும் உறக்கமின்றிக் காத்த அன்பு அம்மாவே! உங்கள் திடீர் மறைவையிட்டு உங்கள் நினைவாக அல்லும் பகலும் அழுது புலம்புகின்றோம். அம்மா நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் நாங்கள் உங்களை விட்டுப் பிரியமாட்டோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"அம்பிகைவாசம்"
சங்கத்தார்வயல்,
இயக்கச்சி.
தற்போதைய முகவரி:-
செல்வபுரம்,
பளை.

**அப்பா, பிள்ளைகள்,**
**மு.தனபாலசிங்கம்**

## தொண்டர் ஆசிரியர் கைது

யாழ்ப்பாணம்,ஜூலை3

கொக்குவில் பகுதியில் 13வயது மாணவி ஒருவருடன் பாலியல் தொடர்பு வைத்திருந்ததாகக் கூறப் படும் - இளைஞனான - தொண்டர் ஆசிரியர் ஒருவர் நேற்று யாழ்.நீதிமன் றத்தில் பொலீஸாரினால் ஆஜர் செய் யப்பட்டார்.

மேற்படி தொண்டர் ஆசிரியரை இம்மாதம் 16ஆம் திகதிவரை தடுப்புக் காவலில் வைத்திருக்குமாறு யாழ். மேலதிக நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் உத்தரவிட்டார். (உ-5)

## உறுப்பினரே இராஜினாமா

யாழ்ப்பாணம், ஜூலை3

வல்வெட்டித்துறை நகர சபையின் உறுப்பினர் சந்திரசேகரம் குணசேக ரம் தமது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

சபையின் உபதலைவர் சுப்பிர மணியம் சந்திரசேகரம் தமது பத வியை இராஜினாமாச் செய்யவில்லை என்றும் -

உறுப்பினரான சந்திரசேகரம் குண சேகரமே பதவி விலகினார் என்றும் - ரெலோ வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

## மட்டு நகரில் குண்டு மீட்பு

மட்டக்களப்பு, ஜூலை3

மட்டக்களப்பு நகரில் மணிக்கூட் டுக் கோபுரத்துக்கு அருகில் உள்ள ரெலிக்கொம் நிறுவன தொலைபேசி 'கபின்' பெட்டியிலிருந்து நேற்றிரவு குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

பின்னர் அந்தக் குண்டு செயலி ழக்கச் செய்யப்பட்டது. (உ-21)

## றோட்டறி ஆதரவில் மேசைப் பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை3

யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழாவை ஒட்டி பல்கலைக்கழக விளையாட்டு அவை, யாழ்.றோட்டறிக் கழகம் மற்றும் 'உதயன்' நிறுவனம் ஆகியவற்றின் ஆதரவுடன் நடத்தும் மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நாளை பிற்பகல் 3 மணிக்கு பல்கலைக்கழக விஞ்ஞான மாணவர் பொது அறையில் நடை பெறும்.

யாழ் பல்கலைக்கழக புவியியற் றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ. அன்ரனிராஜா பிரதமவிருந்தினராகவும், யாழ்.றோட்டறிக் கழகத்தின் தலை மைப் பதவியை பூர்த்தி செய்யும் றோட்டேறியன் அ.பஞ்சலிங்கம், புதி தாகத் தலைமையை ஏற்கவிருக்கும் றோட்டேறியன் கே.ஸ்ரீபதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (உ)

## மடு உற்சவம் பூர்த்தி

மடுத் தேவாலயத்தில் நேற்று வருடாந்த உற்சவம் மிக அமைதியாக இடம்பெற்றது.

குறைந்த எண்ணிக்கையான பக் தர்களே உற்சவத்தில் பங்கு கொண் டனர்.

கடந்த பதினொரு வருடங்களின் பின்னர், இம்முறை தமிழ்,சிங்களம், லத்தீன் ஆகிய மொழிகளில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. (உ-3-164)


எமது புதிய
ஐங்கரன் ஒறிஜினல்
வெளியீடு!

* **விஜய் சுப்பர் ஹிட்ஸ்**
விஜயின்
திரைப்படப் பாடல்கள்
**புதிய CD வெளியீடு**

**சுமன், நிரோஷா..**
* என்னோடு மோதாதே
**நிழல்கள் ரவி, செந்திலின்**
* பொம்பளைங்க சமாச்சாரம்
**நாகார்ஜுனின்**
* சத்திரிய தர்மம்.

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.

(சி-8080)



**நாகம்ஸ்**
**சுன்னாகம்**
கவர்ச்சித் தென்றல்
**பிரசாந்த்**
உலக அழகி
**ஐஸ்வர்யா**
**நாசர்**
நடித்த
**ஜீன்ஸ்**
(தமிழ்)
காட்சிகள் 11.00 2.30
(புதிய நேரம்) (67132)


யாழ்.பிரதேச செயலர் பிரிவில்

# 489 குடும்பங்களுக்கு 5,000 ரூபா கொடுப்பனவு

வலி.கிழக்கு, ஜூலை3

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்வுக் கொடுப்ப னவான 5ஆயிரம் ரூபா 489 குடும் பங்களுக்கு வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கொடுப்பனவைப் பெறுபவர் கள் தமது கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு வங்கிகள் ஊடாக பணத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

ஏனையோருக்கும் கட்டம் கட்ட மாக வெகுவிரைவாக இக்கொடுப்ப னவை வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரி வித்தார். (ஜ-180)


## சாவகச்சேரி இந்துக்கல்லூரி

**கிரிக்கெட் அபிவிருத்திக் குழு**

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

28-06-1999 அன்று யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி கிரிக்கெட் அபிவிருத்திக் குழுவால் நடத்தப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற இலக்கங்கள்:

1 ஆம் பரிசு - 8271
2 ஆம் பரிசு - 7018
3 ஆம் பரிசு - 5802

ஆறுதற் பரிசு பெற்ற இலக்கங்கள்:-

| | | | |
|---|---|---|---|
| !) 5450 | 2) 2000 | 3) 2718 | 4) 3250 |
| 5) 8990 | 6) 8114 | 7) 4071 | 8) 4066 |
| 9) 6367 | 10) 7389 | | |

**அபிவிருத்திக் குழு,**
சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

(67130)


# மரண அறிவித்தல்கள்

## எம்.எஸ்.கே.புவனேஸ்வரன் (மாம்பழம்)

(பழைய மாணவன்,கொக்குவீல் இந்துக்கல்லூரி)

எம்.எஸ்.கே.புவனேஸ்வரன் 30.6.99 இல் காலமானார்.

அன்னார் தாவடி பிரபல சுருட்டுத்தொழிலதிபர் காலஞ்சென்ற எம்.எஸ் கந்தையா, திருமதி கந்தையா ஆகியோரின் புதல்வனும் தங்கராணியின் அன்புக்கணவரும் கல்யாணி, திபாலினி, ஜலக்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, தையல்நாயகி ஆகியோரின் அருமை மருமகனும் செல்லத்துரை, மகேஸ்வரி, சுப்பிரமணியம், மகேஸ்வரன்(கணக்காளர், இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்), மகாலிங்கம்(பொறியியலாளர்,பாஹ்ரெயின்), முத்துலிங்கம்(வியாபாரி), மோகனதாஸ்(ஆசிரியர், கொக்குவில் இந்துக்கல்லூரி), காலஞ்சென்ற நித்தியானந்தன்,காலஞ்சென்ற சண்முகநாதன்(சச்சி), இராஜேஸ்வரி, கௌரி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற P.M. இராசரத்தினம், பரமேஸ்வரி, ரஞ்சனா, செல்வராணி, அருந்ததி, சசிகலா, ஸ்ரீகணேசன்(பரணி குறூப்), சுந்தரமோகன்(ஜேர்மனி), திருமதி இ.சரஸ்வதிதேவி (கொழும்பு), திருமதி ஈ.சந்திராதேவி(கொழும்பு), செ.திருநாவுக்கரசு(கொழும்பு றெஸ் ரோறன்ற், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01.07.99 இல் தாவடியில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தாவடி தெற்கு,
கொக்குவில்.

**தகவல்.**
தாய்,மனைவி
பிள்ளைகள்

(67137)

## சிங்காரவேலாயுதம் யாழினி

புதுவீட்டு ஒழுங்கை, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட சிங்காரவேலாயுதம் - பிறேமா தம்பதியினரின் செல்வப் புதல்வி யாழினி 1.7.99 வியாழக்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் சின்னத்துரை பவளக்கண்டு, காலஞ்சென்ற செல்வரத்தினம், திருமதி பூரணம் ஆகியோரின் பேர்த்தியும் வேலினியின் அன்பு அக்காவும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

69,Lower st,
Adrews Place,
Mutwal,
Colombo-15.

**தகவல்:-**
தம்பு சின்னத்துரை

(67138)

## திருமதி கணபதிப்பிள்ளை யோகம்மா

புங்குடுதீவு நாலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை யோகம்மா காலமானார்.

அன்னார் முருகேசு - தங்கம்மா ஆகியோரின் அன்பு மகளும் பொன்னம்பலம் - தெய்வானை ஆகியோரின் அன்பு மருமகளும் கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பூபாலசிங்கம், காந்திமதி ஆகியோரின் அன்புத்தாயாரும் குகவரதலிங்கம்(புங்.ப.நோ.கூ.சங்க ஊழியர்) அவர்களின் அன்பு மாமியாரும் நவராஜ், நந்தினி, நளினி, நர்மதா, நிரஞ்சனா, அனுசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சிவபாக்கியம், கனகம்மா, குணமணி, கந்தையா, செல்லம்மா, இராமலிங்கம், மனோன்மணி, குமரேசு ஆகியோரின் அன்புச் சகோதரியும் குமாரசாமி, மகாலிங்கம், சிவசம்பு, பொன்னம்மா, சுப்பிரமணியம், அன்னபூரணம், நல்லையா, நல்லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகன் கோயில் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

**தகவல்:**
குகவரதலிங்கம்
(மருமகன்)

(67136)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03-07-1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
சஞ்சிகை

## துஷா ஒப்ரிசன்ஸ்



கண் பரிசோதித்து வெளி நாடுகளிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட கண்ணாடிகளை வழங்குபவர்கள்.

**துஷா ஒப்ரிசன்ஸ்**

544, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சஞ்சீவி 03-07-1999

## கருத்துக் கலசம்

மேரா

### தொண்டு

*அன்பர் பணி செய்ய எனை*
*ஆளாக்கி விட்டுவிட்டால்*
*இன்பநிலை தானேவந்து*
*எய்தும் பராபரமே*

*-தாயுமானவர்-*

சித்தத்தைச் சுத்தி செய்ய வல்லது சேவை. அது அகங்காரத்தை அகற்றும். எந்த உயிரையும் தன்னுயிர் போல மதிக்கும் பெருநிலைக்கு உயர்த்த வல்லதும் சேவையே.

சேவை என்பது தொண்டினையே குறிக்கும். தொண்டு பிரதியுபகாரம் கருதாமல், தெளிந்த மனதுடன், மனம் விரும்பிச் செய்வதாகும். ஆன்மீகத்தொண்டு, அறத்தொண்டு, சமூகத்தொண்டு என்று தொண்டு பல வகைப்படும்.

ஆன்மீகத் தொண்டு செய்வதற்குத் தெய்வ சிந்தனை அவசியம்; அதுவே ஆன்மீக நாட்டம் ஆகிறது. அது இல்லாதவர்கள் கடவுளுக்கோ அல்லது இறையடியார்களுக்கோ தொண்டு செய்வது கடினம்.

ஆனால் மக்களுக்குச் செய்யப்படும் சேவை - தொண்டு- இறைவனுக்குச் செய்யப்படும் சேவையாகக் கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு மனிதனிடத்தும் இறைவன் உறைகின்றான் என்ற அடிப்படையில் மக்கள் சேவை மகேஸ்வரன் சேவை என்று ஆகுகிறது.

அடுத்தவனும் மனிதன்; அவனுக்கு உதவுவதன் மூலம் - தொண்டு செய்வதன் மூலம் - இறைவனுக்குச் சேவை செய்வது போலாகிறது. மக்கள் சேவை செய்பவனுக்கு மனத் தூய்மையும் பிறர் நலன் பேணும் மனப்பாங்கும், மனப்பக்குவமும் இன்றியமையாதவை.

ஆனால் இன்றைய காலத்தில் சமூகத் தொண்டு செய்யப்புறப்படுபவர்களில் கணிசமானோர் பிறர் நலன் பேணுவதைவிட சுயநலன் பேணுவதற்கு முயல்வதையே காணமுடிகிறது. தமது புகழ், பதவிகளைப் பேணுவதற்காகப் பலரும், பணம் தேடுதல், மோசடி செய்வதற்குகென்று இன்னொருசாராரும் "சமூகத் தொண்டர்" ஆகிறார்கள். இந்தப் போலிகளால் உண்மையான தொண்டர்களும் சந்தேகத்துடன் பார்க்கப்படுவது உண்டு.

தன்னலம் கருதாது, பிரதி உபகாரம் எதிர்பார்க்காது, தூய்மையான மனதுடன் நலிந்து போனவர்களுக்கு - நொந்து போனவர்களுக்கு - பின்தங்கி நிற்பவர்களுக்கு - உதவுபவனும் பணிவிடை செய்பவனுமே உண்மையான தொண்டன் - சேவையாளன்.

ஒருவன் மற்றவனுக்கு உதவும் போது - சமூகத்துக்கு உளப்பூர்வமாக, உண்மையாக தொண்டாற்றும் போது - அந்தத் தொண்டு அவனுக்கும் பெருவாழ்வு தரும்.

மனிதாபிமானம், மனித நேயம் உள்ள எவரும் அடுத்தவனுக்கு உதவும், தொண்டு செய்யும் இயல்பு உடையவனே. அந்த இயல்புடன் உண்மையும் நேர்மையும் சேர்ந்தாலே அவன் தொண்டனாவான்.

அடுத்தவன் கஷ்டத்தை,துன்பத்தை, தான் அனுபவிப்பது போல உணர்ந்தவனால் மட்டுமே முழுமையான தொண்டு செய்ய இயலும்.

சமூகத் தொண்டர்கள் என்று தமக்குத்தாமே பட்டம் சூட்டிக் கொள்பவர்களை,விளம்பரப்படுத்துபவர்களை உண்மையான தொண்டனாகக் கருத இயலாது. நல்ல தொண்டன் தனது பணியைத் தனக்குப் புகழ் சேர்க்கப் பயன்படுத்தமாட்டான்.

விளம்பரமயமாகி உள்ள இக்காலத்தில் உண்மையான தொண்டனை இனங்காணத் தகுதியானவர்கள் மக்களே. அவர்கள் தமக்குள் பேதமின்றி இனங்காண்பவர்கள் மட்டுமே உண்மையான தொண்டர்கள். ஒருவரை மாறி அடுத்தவர் முதுகு சொறிவதால் உண்மையான தொண்டர்களாகி விட முடியாது.

# 'நான்' என்றால் யார்?

ஒருதேசத்தில் ஒரு ராஜா. அந்த மன்னன் பெயர் மாலின்ட்(Malind).

அந்த தேசத்தில் பெரிய துறவி ஒருவரும் இருந்தார்.அந்தத் துறவியின் பெயர் நாக்சேன் (Nagsen).

'அந்த துறவி நமது அரண்மனைக்கு வந்து ஆசீர்வாதம் செய்தால் நன்றாக இருக்குமே!' என்று அந்த மன்னன் நினைத்தான்.

உடனே அவன் தூதுவன் ஒருவனை அழைத்து, துறவியை அழைத்துக் கொண்டு வருமாறு கூறினான். ஒரு தேரையும் அனுப்பினான்.

தூதுவன் சென்று துறவியைப் பார்த்தான்.

"நாக்சேசன் துறவியாரே! எங்களுடைய மன்னர் தங்களைத் தரிசிக்க விரும்புகிறார்.... நான் தங்களை அரண்மனைக்கு அழைத்துப் போவதற்காகத்தான் வந்திருக்கிறேன்!"என்று தெரிவித்தான்.

அதற்கு அந்தத் துறவி கூறினார்.

"நீ விரும்பினால் நான் வருகிறேன். ஆனால் தயவுசெய்து என்னை மன்னித்துவிடு. இங்கே. 'நாக்சேன்' என்று ஒருவரும் கிடையாது. அது வெறும் ஒரு பெயர்தான்.



## நாக்சேன் துறவியார் செய்த ஞான ஆராய்ச்சி!

அது ஒரு தற்காலிகமான முத்திரைதான்.... வேறொன்றுமில்லை!" என்றார்.

'இது என்ன... இவர் வித்தியாசமான ஆளாக இருக்கிறாரே!' என்று அவரை அழைத்துப்போக வந்த தூதுவன் நினைத்தான்.

அதன்பிறகு ராஜா அனுப்பிய தேரில் ஏறி துறவி அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்.

அவருக்காக அரண்மனை வாசலில் காத்துக் கொண்டு நின்றிருந்த மன்னன் ஓடி வந்து -

"நாக்சேன் துறவி அவர்களே! நான் உங்களை அன்புடன் வரவேற்கிறேன்!" என்று வணங்கியபடி கூறினான்.

இதைக் கேட்டதும் அந்தத் துறவி சிரிக்க ஆரம்பித்தார்.

மேலும் அவர், "நாக்சேனுக்கு நீங்கள் கொடுக்கும் மரியாதையை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் 'நாக்சேன்' என்ற பெயருடைய யாரும் இங்கே இல்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! என்றார்.

அதைக் கேட்டதும் மன்னனுக்கு ஒன்றும் புரியவில்லை.

ஆகவே அவன், "துறவியாரே... நீங்கள் புதிர் போட்டுப் பேசுகிறீர்கள் என்று நினைக்கிறேன். நீங்கள்... நாக்சேனாக இல்லையானால்... என்னுடைய அழைப்பை இப்போது ஏற்றுக்கொண்டிருப்பது யார்? இந்த வரவேற்புக்குப் பதில் சொல்லிக் கொண்டிருப்பது யார்?" என்று வினவினான்.

உடனே அந்தத் துறவி பின்னால் திரும்பிப் பார்த்தார்...அவர் ஏறி வந்த தேர் அங்கே நின்றுகொண்டிருந்தது.

"இதுதானே நான் ஏறி வந்த தேர்?"என்று கேட்டார்.

"ஆமாம்!" என்றார்கள்.

"அதில் பூட்டியிருக்கும் குதிரைகளை அவிழ்த்துவிடுங்கள்" என்றார் துறவி.

அவர் சொன்னதுபோல் குதிரைகளை அவிழ்த்து விட்டார்கள்.

துறவி அந்தக் குதிரைகளைக் காட்டி, "இதுதான் நான் ஏறி வந்த தேரா?" என்றார்.

"இல்லை. இது குதிரை... இது எப்படி தேர் ஆக முடியும்?" [illegible]

"சரி... குதிரையை [illegible] கொண்டு போங்கள்... அது பூட்டியிருந்த நுகத்தடியை எடுங்கள்" என்றார் துறவி.

அவர் சொன்னது போல் நுகத்தடியை எடுத்தார்கள்.

துறவி,"இந்த நுகத்தடிதான் தேரா?" என்றார்

"இல்லை!" என்றார்கள்.

பிறகு துறவி அதன் சக்கரங்களைக் கழற்றும்படி கூறினார்.

இப்படியே துறவி, தேரின் ஒவ்வொரு பகுதியாகப் பிரித்து எடுக்கச் சொல்லி....,

"அதுதான் தேரா?" என்று கேட்டுக் கொண்டே வந்தார்.

"இது தேர் இல்லை...அது தேர் இல்லை" என்று அருகில் இருந்தவர்கள் பதில் சொல்லிக் கொண்டே வந்தார்கள்.

கடைசியில் ஒவ்வொன்றாக எல்லாவற்றையும் பிரித்து எடுத்ததற்குப் பிறகு அங்கே ஒன்றுமே இல்லை!

அப்போது அந்தத் துறவி கேட்டார்:

"இப்போது உங்களுடைய தேர் எங்கே போயிற்று...? அதிலிருந்து எடுத்த ஒவ்வொரு பகுதியும், 'இது தேர் இல்லை... இது தேர் இல்லை... என்று சொல்லிவிட்டீர்கள்... அப்படியானால் தேர் எங்கே? அது இப்போது எங்கே இருக்கிறது?" என்று கேட்டார்.

மன்னன் முழிக்க ஆரம்பித்தான்.

இப்போது அந்தத் துறவி சொன்னார்:

"தேர் என்று தனியாக ஒன்றும் கிடையாது....அதுபோலவே 'நான்' என்று தனியாக நமக்குள்ளேஒன்றும கிடையாது! நம்முடைய உறுப்புகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக அகற்றிப் பாருங்கள்..... கடைசியிலே ஒன்றும் இருக்காது. அன்பு என்பது இந்த ஒன்றுமில்லாத தன்மையில்தான் பிறக்கிறது. இந்த ஒன்று மில்லாத தன்மைதான் கடவுள்!" என்று துறவி சொல்லி முடித்தார்.

## துடிப்பு!

*ஆரார்தான் அன்றிங்கே யமனிடத்தில் 'தீட்சை' பெற்றார்*
*வேறாரும் வந்திதற்கு விருத்தியுரை சொல்வாரோ?*

*காணாமல் போயிருந்த கனகாம்பரம் எல்லாம்*
*சேயாகித் செம்மணித்தாய் வயிற்றில்தான் சேர்ந்தனவோ?*

*தோண்டும் குழிகளிலே தோன்றிவந்த எலும்புகளே.....!*
*தாண்ட பிறர்சரிதம் தாங்களேனும் சொல்லீரோ?*

*வேண்டிவேண்டி, 'மகஜர்போட்டு'.....'மலர்கள் மீளும்' என்றிருந்த*
*மூன்றாண்டு நம்பிக்கை நிர்மூலம் ஆகிடுமோ?*

*இடிவீழ்ந்தாற் போலெரிந்தோம்! இரண்டெலும்புக் கூடெடுத்தோம்!!*
*கொடுமைகளை கேட்டறிந்தோம்: உறவுகளை மீட்போமோ?*

*'வருவார்', 'வருவான்' என் றெதிர்பார்த்த விழிகள் வந்து*
*சிறுஎலும்பை இனங்காட்டி சிதறிஅழல் தான் விதியோ?*

*எல்லாம் முடிந்ததுவோ? இன்னும் தொடர்கதையோ?*
*உள்ளே பதறுகையில் உலைமூட்ட மனம்வருமோ?*

*அப்பாவிகள் பலரும் அடங்கிவீழ்ந்த 'திருக்குழிகள்'*
*எப்பகுதியில் இன்னும் எரிமலைபோல் மறைந்துளதோ?*

*சந்திகளில், மூடுண்டகிணறுகளில், சமாதியான*
*செந்தமிழர் சேதிகளைத் திசைதிக்கு அறியாதோ?*

*ஊமைகளும் குரலெடுக்க உலகநீதி தலைநிமிர*
*[illegible] வெளிப்பு வந்திடுமோ? நின்றிடுமோ?*

-அருணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த முனையாக மாறும் பள்ளமடுச்சந்தி

வன்னியின் மேற்கு நிலப்பரப்பில் மன்னார் - பூநகரி வீதியில் - பள்ளமடுச்சந்தியைக் கைப் பற்றுவதற்காகப் படையினர் தீவிரசண்டையில் ஈடுபட்டுள்ளனர். அதை முறியடிப்பதற்காக விடுத லைப்புலிகளும் கடுமையாக மோதவருகின்றனர்.

குடாநாட்டுக்கான தரைப்பாதையைத் திறப் பதற்காக அரசுப்படைகள் தற்போது மேற் கொண்டுவரும் நடவ[illegible] களில் மிகக் க[illegible]ான [illegible] பிடித்து வருகின்[illegible]

[illegible] நாட்டுக்கு தரைவழிப்பாதை ஒன் [illegible] பொதுமக்கள் ஐக்கிய முன்னணி [illegible] து ஆட்சிக்காலத்தில் மூன்று ஆண்டுகளாக முயன்று வருகிறது. இதற்காக 'சத்ஜெய' (I,II), 'ஜெயசிகுறு', 'ரிவிபல', ரண கோஷ (I,II,III,IV) எனப் பெயர்கள் இடப்பட்ட பெரும்படை நடவடிக்கைகள் வன்னிப் பெரு நிலப்பரப்பு ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்சமயம் 'ரணகோஷ' (போர்க் கோஷம்) நட வடிக்கையின் நான்காவது கட்டத்தின் இரண் டாவது பகுதியாக பள்ளமடுவை நோக்கிப் படை யினர் முன்னேறிவருகின்றனர்.

'ஜெயசிகுறு' (வெற்றி உறுதி) நடவடிக்கை யின்போது கண்டிவீதியில் மாங்குளம் பகுதியைக் கைப்பற்ற முயன்றபோது படையினர் சந்தித்த பெரும் எதிர்ப்பைப் போன்றே தற்போது மன்னார் - பூநகரி வீதியில் 15 ஆவது மைல் கல்லில் அமைந்துள்ள பள்ளமடுச் சந்தியைக் கைப்பற்று வதற்கான நகர்வின்போதும விடுதலைப் புலிக ளின் கடும்எதிர்ப்பைப் படைகள் சந்தித்துள்ளன.

'போர்க்கோஷம்' படையினர் இந்த சந்தியைக் கைப்பற்றுவார்களேயானால் அது மன்னார் - பூநகரில் வீதியில் இருந்து வடக்கே பூநகரிநோக் கிய படையெடுப்பில் முதலாவது வெற்றியாக அமைந்துவிடும் எனப் பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதை உணர்ந்துதான் புலிகள் இந்த நகர்வை நிறுத்தக் கடுமையாக மோதி வருகின்றனர்.

அத்துடன் பள்ளமடுச்சந்தியைக் கைபற்று வதன் மூலம் படையினர் தமது முன்னணி நிலை களில் இருந்து மேற்கே நகர்ந்து புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மல்லாவி நகரைக் கைப் பற்றுவதற்கும் வாய்ப்பு அதிகரிக்கும். மூன்று முறிப்பிலும், வன்னிவிளாங்குளத்திலும் தற்சம யம் படையினர் அமைத்துள்ள முன்னணிப் பாது காப்பு அரண்களில் இருந்து கிட்டிய தொலை விலேயே மல்லாவி அமைந்துள்ளது. பள்ளமடுச் சந்தியில் பலமான முன்னணி நிலைகளை அமைப்பதன் மூலம் அங்கிருந்து வடக்கே பூந கரிக்கான நகர்வை ஆரம்பிக்கலாம். அதற்கு முன்னர் மல்லாவி - துணுக்காய் பகுதிகளுக்கும் படையினர் நகரலாம்.

பள்ளமடுச் சந்தியில் இருந்து பூநகரி நோக் கிச் செல்லும் வதியில்வெள்ளாங்குளம் வரையான பகுதி இருபுறமும் இடையிடையே பரந்த தரவை வெளிகளைக் கொண்டது. எனவே இந்த வீதி யில் முன்னேறுவது படையினருக்கு வாய்ப்பாக அமையலாம். வெள்ளாங்குளத்தை அடைவதா யின் பள்ளமடுச்சந்தியில் இருந்து கள்ளியடி, கட்டாடிவயல், இலுப்பைக்கடவை ஆகிய சந்தி களைக் கடக்க வேண்டும். ஷெல் தாக்குதல் களை அடுத்து இந்த இடங்களில் இருந்து பொது மக்கள் வெளியேறிவருகின்றனர். ஆனால் பள்ள மடுச்சந்தியை எட்டுவதற்கு முன்னரே படையி னர் சந்தித்துள்ள இழப்புகளை நோக்கும் போது இந்தப் பாதையில் ஆமை வேகத்திலேனும் முன் னேறப் படையினரைப் புலிகள் அனுமதிக்கமாட் டார்கள் போல் உள்ளது.

பூநகரி வீதியில் வடக்கு நோக்கிய நகர்வில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக பள் ளமடுச்சந்தி உள்ளது. எனவேதான் எதிர்ப்பின்றிப் படையினர் அப்பகுதியைக் கைப்பற்றுவதைப் புலிகள் அனுமதிக்கவில்லை.

பள்ளமடுச்சந்தியைப் படையினர் கைப்பற்று வார்களாயின் 'போர்க் கோஷம்' நடவடிக்கையின் மேற்கு நோக்கிய நகர்வு அத்துடன் முடிவுக்கு வரும். இரணைஇலுப்பைக்குளம் முதல் மடு, பெரியமடுப் பகுதிவரை புலிகள் எதிர்ப்புக்காட் டாததால் இலகுவாகப் படையினர் காடுகளுக்குள் நகர முடிந்தது. இந்தப் பெரிய நிலப்பகுதியை கைவிட்டுப் புலிகள் வெளியேறிச் சென்றமை வன்னிப் படைத்தலைமைக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

இராணுவத் தந்திரோபாயம், மற்றும் அரசியல் காரணங்களுக்காக புலிகள் இந்தப் பிரதேசத் துக்குள் படையினரை முன்னேற அனுமதித் துள்ளனர்.

இக்காலப்பகுதியில் பெரியதொரு தாக்கு தலுக்கு தமது படையணிகளைப்த் தயார் செய் வதிலும், ஆட்சேர்ப்பு நடவடிக்கையைத் தீவிர மாக்குவதிலும் ஆயுதங்களைச் சேகரிப்பதிலும் புலிகள் பிஸியாகச் செயற்பட்டுள்ளனர். அதே வேளை கேந்திர முக்கியத்துவம் இல்லாத வன் னியின் தென்மேற்கு நிலப்பரப்பில் தமது நட வடிக்கையில் தொடர்ந்து பிஸியாக ஈடுபட படை யினரைப் புலிகள் அனுமதித்துள்ளனர்.

இது புலிகளின் ஒரு தந்திரோபாயம்.

அடுத்து மடு தேவாலயப் பகுதிக்குள் படை யினரை அனுமதித்ததன் மூலம் கிறீஸ்தவ சமூ கத்தினரின் கசப்புணர்வை சம்பாதித்துக் கொள் ளும் இக்கட்டு நிலையை அரசுக்கு ஏற்படுத்து வதில் புலிகள் அரசியல்ரீதியில் வெற்றிகண் டுள்ளனர்.

மற்றொரு கோணத்தில் பார்த்தால் பாதுகாப்பு முக்கியத்துவம் இல்லாத பரந்தநிலப்பரப்பில் படையினரைத் தொடர்ந்து நகரவிட்டு அவர்களின் செறிவை ஐதாக்கி - அணிபிரியச்செய்து - பலத்தைக் குறைத்து - கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு முனை வரும்வரை எதிர்ப்புக்காட் டாமல் பொறுத்திருக்க புலிகள் முடிவு செய்திருக் கலாம்.

இதுவே புலிகளின் தந்திரோபாயமாக இருந் திருப்பின் புலிகள் எதிர்கொள்ளவேண்டிய கேந் திர முக்கியத்துவம் வாய்ந்த முனையைப் படை யினர் நெருங்கிவிட்டனர் என்பது தெரிகிறது. பள்ளமடுச்சந்தியே அந்தமுனை ஆகும். இப்பத் தியை எழுதும்வரை அந்த முனையில் கடும் சண்டை நடைபெற்றுவருகிறது. இந்தச் சண்டை யில் இரு தரப்பும் பலத்த இழப்புக்களை சந்தித் துள்ளன.

தற்போதைய வன்னி களநிலைவரத்தை உன்னிப்பாக அவதானித்தால் போரின் தீவிரமான கட்டம் இனிமேல்தான் உருவாகப்போகின்றது என்பது தெரியும்.

வன்னியில் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் புலிகள் பெரும் ஆட்சேர்ப்பு நட வடிக்கையை கடந்த ஏப்ரல் முதல் ஆரம்பித்துள் ளனர். அத்துடன் சகலருக்கும் போர்ப்பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றையும் ஆரம்பித்துள்ளனர்.

சுமார் 30ஆயிரம் பேரைக் கொண்ட துணைப் படை ஒன்றை புலிகள் அமைத்துள்ளதாகப் புல னாய்வு அறிக்கைகள் அரசை எச்சரிக்கை செய் துள்ளன.

ஆட்டிலறிப் பலம் மற்றும் வான், கடற்படைப் பிரிவுகளுடன் கூடிய ஒரு பெரும் மரபுப் படை யணியை அமைப்பதை நோக்கமாகக் கொண்டே புலிகள் இந்த திட்டங்களைச் செயற்படுத்தி வரு வதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

சுமார் மூன்று மாதகாலமாகப் படையினர் மேற்கொண்ட 'போர்க் கோஷம்' நடவடிக்கை மூலம் ஆயிரம் சதுரகிலோமீற்றருக்கும் அதிக மான நிலப்பிரதேசத்தை மீட்க முடிந்தாலும் இந் நடவடிக்கையால் புலிகளுக்கு சிறு சேதத்தைத் தானும் ஏற்படுத்த முடியவில்லை. படையினரை முன்னேறவிட்டு இழப்புக்களைத் தவிர்த்துக் கொண்ட புலிகள் இக்காலப்பகுதியில் தங்கள் படை வலிமையைப் பெருக்குவதிலும் பொதுமக் களைப் போருக்குத் தயாராக்குவதிலுமே கண் ணாக இருந்துள்ளனர்.

ஆனால் 'போர்க் கோஷம்' நடவடிக்கைமூலம் படையினருக்கு கிடைத்த இராணுவரீதியான வெற்றியை மதிப்பிட்டால் எதிரிக்கு இழப்புக் களை ஏற்படுத்தாமல் பரந்த நிலப்பிரதேசத்தைக் கைப்பற்றி தமது முன்னரங்க நிலைகளை விரி வுபடுத்த முடிந்துள்ளது என்பதைத்தவிர குறிப் பான வெற்றிகள் என்று கூறுவதற்கு எதுவும் இல்லை. ஆனால் இந்நடவடிக்கையின் வெற்றி இனிமேல் வடக்கே பூநகரி நோக்கி நகர்வதைப் பொறுத்தே அமையும்.

'வெற்றி உறுதி' நடவடிக்கையுடன் ஒப்பிட் டால் குடாநாட்டுக்கான தரைவழிப்பாதை ஒன் றைத் திறப்பதற்கு சாதகமான நிலையை 'போர்க் கோஷம்' நடவடிக்கை மூலம் ஏற்படுத்த முடிந் துள்ளது.

'போர்க் கோஷம்' மூலம் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் தற்சமயம் பெரும் எண்ணிக்கையான படையினர் நிலை கொண்டுள்ளனர். தமது பிடிக் குள்வரும் பிரதேசத்தின் அளவு விரிவடைந்து வருவதால் அப்பகுதிகளைப் பாதுகாப்பதிலும், நிர்வகிப்பதிலும் பல நடைமுறைப் பிரச்சினை களைப் படையினர் எதிர்நோக்கவேண்டிஉள்ளது. அதேவேளை புலிகளைப் பொறுத்தவரை அவர் களது கட்டுப்பாட்டில் உள்ள நிலப்பகுதி ஒடுங்கி வருகிறது. அதனால் அப்பகுதிக்குள் அவர்களின் செறிவும் பலமும் குவிகின்றது. இது தற் போதைய படைநடவடிக்கைகளினால் ஏற்பட்டு வரும் கவனத்துக்குரிய களநிலை மாற்றங்களா கும். புலிகள் தமது படையணிகளை குறிப்பிட்ட நிலப்பகுதிக்குள் குவித்து வைத்துள்ளனர். ஆனால் படையினரைப் பொறுத்தவரை அவர்க ளது அணிகள் பிரிந்து, பரந்து, ஐதாகி வரு கின்றன. இந்நிலை புலிகளுக்கே பெரிதும் சாத மாகிவருவதாக ராணுவ விமர்சகர் ஒருவர் கூறி யுள்ளார்.

போராளிகளையும், பொதுமக்களையும் அணி திரட்டி ஒரு பெரும் மரபுப் படையணியை தயார்ப் படுத்தியுள்ள புலிகள் எந்நேரமும், எந்த ஒரு முனையிலும் பெரும் தாக்குதல் ஒன்றைத் தொடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.ஆனை யிறவுப் படைத்தளம் அல்லது மாங்குளம், ஒட்டு சுட்டான் படைநிலைகள் புலிகளின் தாக்கு தலுக்கு இலக்காகலாம் எனப் படையினர் எதிர் பார்க்கின்றனர். ஆனால் புலிகளின் பெரும் தாக் குதல் ஒன்று இடம்பெறுகின்றபோது குறிப்பிட்ட கால அவகாசத்துக்குள் அந்த முனையில் மேல திக படையணிகளைத் திரட்டமுடியாதநிலையை தற்போதைய களநிலைவரம் படைத்தரப்புக்கு ஏற்படுத்தி இருக்கிறது.

மாங்குளம் பகுதியில் அல்லது ஒட்டுசுட்டான் பகுதியில் புலிகள் தாக்கினால் மேற்கில் நிலை கொண்டுள்ள 'போர்க் கோஷம்' துருப்பினரை திடீ ரென அணிதிரட்டி அங்கு அனுப்ப முடியாது. அதேபோன்று ஆனையிறவுத் தளத்தைப் புலி கள் தாக்கினாலும்கூட குடாநாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இருந்து படையினரைப் பெருமளவில் அங்கு அனுப்பமுடியாத நிலையே இருப்பதாக அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

பள்ளமடுச்சந்தியைப் கைப்பற்றிய பின்னர் 'போர்க் கோஷம்' நடவடிக்கை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு அதன்பின் புதிய பெயரில் அங்கிருந்து பூநகரி நோக்கி வடக்கே புதிய படை நடவடிக்கை ஆரம்பிக்கப்படலாம் என்றும்-

அவ்வாறன்றி 'போர்க் கோஷம்' என்ற பெயருடனேயே படைநடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெறும் என்றும் -




## மறுபக்கம்

### வார விமர்சனம்

நல்லூர் தாஸ்

பாதுகாப்பு வட்டாரங்களில் இருவேறு எதிர் பார்ப்புக்கள் நிலவுகின்றன.

ஜூலை மாதம் தொடங்கிவிட்டது. ஈழப்போரில் முக்கிய சம்பவங்கள், தாக்குதல்கள் இடம்பெற்று வருவதால் இந்த மாதம் முக்கியத்துவத்துடன் எதிர்கொள்ளப்படுவது வழக்கம். நாளை மறு தினம் 5 ஆம் திகதி கரும்புலிகள் தினமாகும். எதிர்பார்க்கப்படும் புலிகளின் பெரும்தாக்குதல் இந்த மாதத்தில் இடம்பெறலாம் என்பதால் அடுத்துவரும் தினங்களில் படையினா மிக உஷா ராகவே இருப்பர்.

புலிகளின் பெரும் தாக்குதல் தாமதமடை வதற்கு அரசியல் ரீதியான காரணங்களும் இருக் கலாம். சர்வதேச மத்தியஸ்த முயற்சிகளுக்கு ஆதரவுதிரட்டுவதற்காக தற்போது ஐரோப்பாவில் தங்கியிருக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அங்கு மேற் கொள்ளக்கூடிய முயற்சிகளை புலிகள் இங்கு நடத்தும் பெரும் தாக்குதல் பாதிப்பதாக அமை யலாம். எனவே புலிகளின் பெரிய தாக்குதல் எதுவும் உடனடியாக நடப்பதற்கு வாய்ப்பில்லை என்று சில அரசியல் வட்டாரங்களில் நம்பப் படுகிறது. *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தியோகம் புருஷ லட்சணமா? அல்லது மனைவி லட்சணமா?

**நல்லூர். ஜி.காந்தன்.**
ஆண்கள்,பெண்களைப பாராட்டுவதுஏனோ..?
☺**'நீ அழகான பறவை. உனது குரல் இனிமையானது. எனவே ஒரு பாட்டுப்பாடு' என்று நரி காகத்திடம் ஏன் கேட்டதோ அதற்காகத்தான்.**

**இடைக்காடு. ஆர்.சுந்தர்.**
பெண்களுக்கு அவசியமானது எது? புன்னகையா? பொன்னகையா?
☺**புன்னகைதான் அவசியம். ஆனால் பொன்னகையைக் கண்டால்தான் புன்னகையே வருகின்றதே?**

**வரணி. வசந்தன்.**
இந்தியாவில் எம்.ஏ.படித்தவர்கள் சோற்றுக் கடையில் நிற்கின்றார்களே?
☺**இங்கு சோற்றுக் கடையில் நிற்க வேண்டியவர்கள் எம்.ஏ.படித்திருக்கின்றார்களே!**

**சுன்னாகம். ஐ.குமார்.**
மனைவிக்கு விசுவாசமாக - நன்றியாக - வாழும் கணவனை நாய்க்கு ஒப்பிடலாமா?



☺**அதை விடுங்கள். கணவனை நாய் படாப் பாடாகப்படுத்தும் மனைவியை எதற்கு ஒப்பிடலாம்?**

**யாழ்ப்பாணம். சாரதா.**
முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முடியாது என்கிறார்களே?
☺**நவீன ஆடையில் சிலரைப் பார்க்கும் போது அது சரியாகத்தான்படுகின்றது.**

**கொக்குவில். சுமதி.**
எனது கணவருக்குத் தேநீர் கூடப் போடத் தெரியாதே?
☺**தேநீரை விடப் பிரமாதமான சங்கதிகளைப் போடத் தெரிந்திருப்பார். அது போதாதா உங்களுக்கு?**

**கட்டுடை. சிவன்.**
Pen Friends சிலர் பின்னர் Bed Friends ஆக மாறிய கதை உங்களுக்குத் தெரியுமா?
☺**(எழுது)கோல் வலுவுள்ளது**

**பளை. சூரியா.**
கம்போடியாவில் நீண்ட கூந்தல் உள்ள பெண்களை பேய் பிடிக்கும் என்ற வதந்தி பரவியதை அடுத்து அங்கு பெண்கள் தங்கள் கூந்தல்களை கட்டையாக வெட்டுகின்றார்களாமே?
☺**இங்கு சில பெண்கள் சைக்கிளில் வரும் நாய்கள் தங்களைப் பிடிக்கும் என்று அஞ்சி, தங்களை நவீன கராட்டி வேங்கைகள் போல் காட்டுவதற்காக கூந்தலை வெட்டுகின்றார்களே!**


**சங்கானை. வாரிதி.**
'கழுதைக்குத் தெரியுமா கற்பூரவாசனை' என்பதன் பொருள் விளங்கவில்லையே?
☺**சில கழுதைகள் வீட்டில் கற்பூர வாசனை இருக்க வெளியில் அழுக்குப் பொதி சுமப்பதைப் பார்த்த பின்னும் இது விளங்கவில்லையா?**

**பளை. ம.கனகையா.**
ஒருவரில் ஒருவர் சந்தேகப்படும் - கணவன் - மனைவியின் வாழ்க்கை எப்படியிருக்கும்?
☺**எரிமலை போன்றது. எப்போது வெடிக்கும் என்று சொல்ல முடியாததாக இருக்கும்.**

**இருபாலை. பஞ்சு.**
சமான்களை ஏன் பதுக்கின்றார்கள்?
☺**பதுக்கும் சமான்களுக்குத்தானே பவிசும், மவுசும் அதிகம்.**

**மல்லாகம். கம்ஷிகா.**
'பாலுக்கும் காவல்; பூனைக்கும் தோழன்' என்று யாரை அழைக்கலாம்?
☺**தங்காய்! என்னவென்றாலும் தமிழ்க் குழுக்களை நீர் இப்படி கிண்டல் செய்யக் கூடாது.**

**அராலி. வி.தயா.**
பஞ்சு மெத்தைக்கு அஞ்சும் ஆண்கள் இருக்கின்றார்களா?



☺**மிஞ்சும் பெண்களைக் கண்டால் கொஞ்சாமல் கெஞ்சும் - அஞ்சும் - துஞ்சும் - தலையணைக்குள் தஞ்சம் கொள்ளும் - ஆண்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்!**

# பஞ்சு மெத்தைக்கு அஞ்சும் ஆண்கள் இருக்கிறார்களா?

**தானே....!**

**நீராவியடி. சத்துரு.**
காவி கட்டிய சாமியை நம்பலாமா?
☺**அவரின் மஞ்சள் காவி போல மனமும் மங்கலமானதாக இருந்தால் நம்பலாம். மங்கலாக இருந்தால் கூடாது.**

**தாவடி. ஞானம்.**
வீட்டுக்குள் மனைவி மீது நாய் போலறு பாயும் கணவன்மார் வெளியில் நாகரிக மிக்கவர்கள் மாதிரி நடிக்கின்றார்களே!



☺**வீட்டுக்குள் மனைவி அடைத்து வைத்திருப்பார். நாய் கூட்டுக்குள் இருந்தால் குலைக்கும். வெளியில் விட்டால் ஓடித் திரியும்!**


**யாழ். ஜோ.ஜெஸ்ரின்.**
உத்தியோகம் பார்க்கும் அலுவலகப் பெண்கள் சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாள்களில் சட்டை போட்டு வேலைக்கு வருகின்றார்களே?
☺**நீர் சரியான குறும்புக்காரர் போங்கள். அதுவும் வேண்டாம் என்கிறீரா? அதற்கும் விடுமுறை வழங்கும்படி கேட்பது மகா தப்பு ஸார்!**

**யாழ். பி.தியாகரூபன்.**
வித்தூ! ஆண்கள் நடப்பது அழகா? பெண்கள் நடப்பது அழகா?
☺**ஆண்களுக்கு நடை அழகு. பெண்களுக்கு நடையே அழகு.**

**மானிப்பாய். எஸ்.பிரவீணா.**
வித்துவான் ஸார்! முற்றவெளி பலருக்கு பலவாறு பயன்படுகின்றதாமே?
☺**அதன் பெயரை 'முத்தம் + வெளி' என்று புரிந்து கொண்டு விட்டார்கள் போலும்.**

**கொட்டடி. க.ராஜன்ஸ்.**
"கோல் எடுத்த பிள்ளை குருட்டுப்பிள்ளை" என்ற பழமொழி இக்காலத்திற்குப் பொருந்துமா?
☺**முன்பின் கண்டிராத வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு இலங்கையிலிருந்து 'கோல்' எடுத்து காதல் புரியும் பொம்பிளையை குருட்டுப்பிள்ளை என்று கூறுவது தவறா?**

**அராலி. ஜனகன்.**
பத்துமாதம் சுமந்து பெறும் பெண்மையை இகழலாமா?




☺**பெத்த பின் சுமக்கும் ஆண்மையை ஒதுக்கலாமா?**

**சுருவில். ஆர்.கஸ்தூரி.**
சில குடும்பங்களில் பிள்ளைகளின முன்னால் கணவன் - மனைவி சண்டைபிடிக்கின்றார்களே?
☺**பிள்ளை முன்பு சண்டைபிடித்து மதிப்பைக் கெடுக்கக்கூடாது. சண்டை பிடிக்கத்தான் வேண்டுமென்றால் பிள்ளைகள் உறங்கியபின் தொடங்கலாம்.**

**சீரணி. நிஷா.**
நான் திருமணம் செய்ய விரும்புகின்றேன். உங்கள் ஆலோசனை என்ன?
☺**தானே விரும்பி தண்டனையை ஏற்பவர்கள் துணிச்சல்காரர்கள்தான்.**

**யாழ். நகுலன்.**
தைரியமான பெண் பிள்ளையா, நோஞ்சலான ஆண் பிள்ளையா வீட்டுக்குத் தேவை?
☺**'ஆண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளையாக இருக்கவேண்டும்' என்பது முதுமொழி.**

**நீர்வை. கமல்.**
திருமணம் வரை சிரித்திருக்கும் காதலர்கள் திருமணத்தின் பின் அழுவதேன்?
☺**'கொள்ளும்வரைக் கொண்டாட்டம்; கொண்டபின்திண்டாட்டம்' என்பது இதைத்தானே!**

**மல்லாகம். ராணி.**
'ஆழம் தெரியாமல் காலை விடுவது' என்கிறார்களே. அது என்ன?
☺**'கிணற்று ஆழமும் கயிற்று நீளமும் பார்க்க வேண்டும்' என்கிறார்களே அதுதான்!**

**நல்லூர். சிவா.**
சில வாலுகள் எந்நேரமும் வீதிகளில் சைக்கிளில் அலைகின்றனவே?
☺**'நாய்க்கு வேலையும் இல்லை;நடக்க நேரமும் இல்லை' என்பார்களே. அதுதான். 'போக்கற்ற நாய்க்கு போனதெல்லாம் வழிதானே!'**

**மணற்றறை. பாப்பா.**
வித்துவான் மாமா! நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். இதை அவளுக்குத் தெரிவிக்க உதவுவீர்களா?
☺**நீங்கள் அழைக்கும் உறவுமுறை வேலையையா என்னைச் செய்யச் சொல்லுகிறீர்கள்? நீங்களே பார்த்துக் கொள்ள வேண்டிய விடயம் இது பாப்பா!**

# வித்துவான் பதில்கள்

**அரியாலை. ம.சஞ்சீவ்.**
அன்று ஆள்பாதி, ஆடைபாதி. இன்று...?
☺**இன்று உடை கால்; உருவம் முக்கால்.**

**ஏழாலை. மாலா.**
உத்தியோகம் புருஷ லட்சணமா? மனைவி லட்சணமா?
☺**பெண்கள் வேலைக்குச் சேரும் வேகத்தைப் பார்த்தால் 'உத்தியோகம் மனைவி லட்சணம்' என்பது போலவும், 'சமையல் புருஷன் லட்சணம்' போலவும் எனக்குப் படுகின்றது.**

**மட்டுவில். ரவி.**
'வித்துவான் ஐயா! நீங்கள் புரிந்த மிகப் பெரிய குற்றம் எது? அதற்காக நீதிமன்றம் சென்றீரா?
☺**திருமணம் செய்ததுதான் நான் செய்த மிகப்பெரிய குற்றம். நீதிமன்றம் செல்லாமலேயே அதற்கு ஆயுள்தண்டனை தந்து விட்டார்களே!**


**யாழ். இ.முத்தையா.**
திருமணம் செய்யத் தரகர் தேவைதானா?
☺**தேவைதான். ஆனால் சில தரகர்கள் தங்கள் லாபத்துக்காகப் புழுக்குத்தல் மாம்பழங்களையும் விற்றுத்தள்ளி விடுகின்றார்களே?**

**நவாலி. ரி.ரமணனன்.**
காதலனின் பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்து பதில் கூறக் காத்திருக்கும் காதலி குறித்து......?
☺**விவகாரமான காதலிதான். பரீட்சையில் சித்தி என்றால் காதல் பரீட்சையிலும் 'பாஸ்'. பரீட்சையில் கோட்டை விட்டால் காதலுக்கும் 'பெப்பே'! காதலனுக்கும் 'பெப்பே'!!**

**கொக்குவில். டி.அனுடா.**
வீட்டில் மனைவிக்குப் பயந்து வாழும் ஆண்களை என்ன செய்யலாம்?
☺**பாவம். அவர்கள் (என்போன்ற) (அப்)பாவிகள். விட்டுவிடுங்கள்!**

**யாழ். வாணன்.**
வித்தையா! நீர் கணித மேதையாமே! சின்னக் கணக்கொன்று கூறுகிறேன். பட்டென்று விடை சொல்வீரா? மூன்றில் ஒன்று போனால் என்ன வரும்?
☺**சோடி மிஞ்சும்!**

**ஊரெழு. வெஸ்லி.**
வித்தையா! நீர் ஆணழகன் போட்டியில் பங்குபற்றினால் எப்படியிருக்கும்....?



☺**உம் ஆசையைக் கெடுப்பானேன் என்று பகல் கனவு கண்டு பார்த்தேன்.**

**கொக்குவில். நாகேஸ்.**
"குருவே! சித்திபெற என்ன வழி"
☺**"சித்தப்பாவைக் கல்யாணம் செய்து கொள்ளச்சொல்"**

## இந்தவார ஜோக்

ஒரு சந்தேகப் பேர்வழியான கணவன் வெளியூருக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். தனது நம்பிக்கைக்குரிய நண்பனை அழைத்து "என்னுடைய மனைவியை வீட்டில் வைத்துப் பூட்டியிருக்கிறேன். சாவியை நீ பத்திரமாய் வைத்திருந்து நான் வந்தவுடன் தர வேண்டும். நான் உன்மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறேன் என்பது உனக்கே தெரியும்" என்று சொல்லி விட்டு வெளியூருக்கு விடைபெற்றுச் சென்றான்.

அவன் ரயில் நிலையத்தைச் சென்றடைவதற்குள் மூச்சு வாங்க அவனைத் துரத்திப் பிடித்த அவனது உயிர் நண்பன் "சாவியை மாற்றிக் கொடுத்துவிட்டாய். இந்தச்சாவி உன் வீட்டுப் பூட்டைத் திறக்கவில்லையே!" என்றான்.

# பெண்களுக்கு அவசியமானது எது? புன்னகையா? பொன்னகையா?

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# துடுப்பாட்டம் அன்றும் இன்றும்

-கோபி-



ஷேன் வோண்

**23**

பாகிஸ்தானிய வீரர்களுக்குக்கிடைத்த வரவேற்பைப பாருங்கள்! ரொம்பப் பாவம் அவர்கள். திறமையுடன் உழைத்து இறுதியாட்டம் வரை முன்னேறினார்கள். இறுதியாட்டத்தில் எதிர்பாராத தோல்வி. ஆவலுடன் காத்திருந்த ஆதரவாளர்களுக்கு சோகமும் ஆத்திரமும் ஏற்படுவது நியாயந்தான். அதற்காக இப்படியா வரவேற்பது?

பாகிஸ்தானிய அணியைக் கைவிட்டது துடுப்பாளர்கள்தான் என்று எண்ணத் தோன்றுகின்றது. ஏனெனில் பாகிஸ்தானிய பந்தாளர்கள் சிறப்பாகவே பந்துவீசினர். பாகிஸ்தானியர்கள் மட்டுமல்ல, ஏனைய நாட்டுப் பந்தாளர்களும் சிறப்பாகவே பந்துவீசினர். காரணம் இங்கிலாந்தின் மைதானங்கள் பந்தாளர்களுக்குச் சாதகமானவை. அந்த மைதானங்களில் எட்டப்பட்ட சில

**சக்லேய்ன் முஷ்ராக்**



பிறப்பு :1976 டிசம்பர் 29 லாகூரில்
ஆட்டம் : வலதுகை துடுப்பாளர் Offbreak பந்தாளர்.
முதல் ஆட்ட பிரவேசம்:1992 - 93
டெஸ்ற் பிரவேசம் :1995 இலங்கைக்கெதிராக.
ஒரு நாள் ஆட்டங்கள் :108
இலக்குகள் :204

சாதனைகளைப் பற்றி இனிப் பார்ப்போமே.

## பந்தாளர் சாதனைகள்

இந்த உலகக் கிண்ணத் தொடரிலே நியூசிலாந்தின் ஜியொ.:.ப் அலொட்டும் (Geoff Allot), ஆஸ்திரேலியாவின் ஷேன் வோணும் தலா இருபது இலக்குகளை வீழ்த்தியமை ஓர் உலகக் கிண்ணச் சாதனையாகும். இதன் முன் இந்தியாவின் பின்னி (83), ஆஸ்திரேலியாவின் மக்டேமொட் (87), பாகிஸ்தானின் வசீம் அக்ரம் (92) ஆகியோர் தலா பதினெட்டு இலக்குகளை வீழ்த்தியமையே உலகக்கிண்ணச் சாதனையாக இருந்து வந்தது. இலங்கையின் டி மெல் 1983 தொடரில் பதினெட்டு இலக்குகளை வீழ்த்திய போதும் பதிவுப் புத்தகத்தில் தவறாகப் பதிவொன்று மேற்கொள்ளப்பட்டமையால் அவர் பதினேழு இலக்குகளை வீழ்த்தியதாகவே கருதப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஷேன் வோண் இறுதியாட்டத்திலே இலக்குக் காப்பாளர் மொயின்கானை ஆட்டமிழக்கச் செய்த போது ஒருநாள் போட்டிகளின் வரலாற்றிலே இருநூறு இலக்குகளை வீழ்த்திய ஒன்பதாவது பந்தாளரானார். அது ஷேன் வோணின் 125ஆவது ஆட்டமாகும். ஷேன்வோணின் முன்னர் 200 இலக்குகளை வீழ்த்திய ஒரேயொரு ஆஸ்திரேலியர் மக்டேமொட்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இருநூறு ஒருநாள் இலக்குகள் என்ற சாதனையை நிகழ்த்திய ஏழாவது மற்றும் எட்டாவது பந்தாளர்களான டொனால்ட், சக்லேய்ன் ஆகியோரும் இந்த உலகக்கிண்ணத் தொடரிலேயே அச்சாதனையை எட்டினர்.

டொனால்ட் சிம்பாப்வேக்கு எதிரான தெரிவுப் போட்டியில் தன் இருநூறாவது இலக்கினை வீழ்த்தினார். சக்லேய்ன் முஷ்ராக் தென்னாபிரிக்காவிற்கெதிரான சிறப்புச் சுற்றுப்போட்டியில் ஜேக்கஸ் காலிஸை வீழ்த்தித் தன் இருநூறாவது இலக்கினைப் பெற்றார். டொனால்ட் தன் 117ஆவது போட்டியிலும் சக்லேய்ன் தன் 104 ஆவது போட்டியிலுமேயே இருநூறு இலக்குகளை எட்டினர்.



டொனால்ட்

ஆஸ்திரேலியாவின் போல் ரெய்.:.பெல் பாகிஸ்தானுக்கெதிரான தெரிவுப் போட்டியில் - தன் 87 ஆவது ஆட்டத்தில் நூறாவது இலக்கினை வீழ்த்தினார். மேலும் இங்கிலாந்தின் டறன் கோஹ் கென்யாவுக்கெதிரான தெரிவுப் போட்டியில் - தன் 62ஆவது ஆட்டத்தில் - நூறாவது இலக்கினைப் பெற்றார். இதே சாதனையை நியூசிலாந்தின் கிறிஸ் கெயின்ஸ் சிம்பாப்வேக்கு எதிரான சிறப்புச் சுற்று ஆட்டத்தில் எட்டினார். அது கெயின்ஸின் 107 ஆவது ஆட்டம். கெயின்ஸ் துடுப்பெடுத்தாடலில் இரண்டாயிரம் ஓட்டங்களைத் தாண்டியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த உலகக் கிண்ணத் தொடரின் முடிவில் ஒருநாள் போட்டிகளின் முன்னணித் துடுப்பாளர்கள், பந்தாளர்களின் விவரத்தை அட்டவணையில் பார்த்துக்கொள்ளுங்கள்.

இவ்விடத்தில் சற்றுத்தரித்து இந்த கட்டுரைத் தொடர் நடந்து வந்த பாதையினைத் திரும்பிப் பார்த்தால்.....

துடுப்பாட்டத்தின் தொடக்க வரலாறோடு ஆரம்பித்து ரெஸ்ற் போட்டிகள், ஒரு நாள் போட்டிகள், சாதனைகள், ஆட்டக்காரர்கள், உலகக் கிண்ண விவரங்கள்... எனத் தொடர்ந்து இதோ இருபத்தி மூன்றாவது வாரத்திற்கு வந்துவிட்டோம்.

நம்மவர்கள் வயது, பால் வித்தியாசமின்றித் துடுப்பாட்டத்தை இரசித்தாலும் பலருக்கு துடுப்பாட்டம் ஆடப்படும் விதம் பற்றித் தெளிவாகத் தெரியாமலிருக்கிறது. எனவே ஆடப்படும் விதம் பற்றி அறிந்து கொள்ள தொடர்ந்து படியுங்கள்.

## கிரிக்கெட் என்பது...

கிரக்கெட் என்கிற துடுப்பாட்டம் ஒரு மைதான விளையாட்டு. பொதுவாகத் தலா பதினொரு வீரர்களைக் கொண்ட அணிகள் இரண்டுக்கிடையில் ஆடப்படுவது. துடுப்பாட்டத்திற்குத் தேவையான அடிப்படைச் சாதனங்கள் இரண்டு. ஒன்று - பந்து; மற்றையது - மட்டை.

பந்து ஒரு தக்கை முறுக்குநூலினால் இறுக்கமாகச் சுற்றப்பட்டு அதன் மேல் தடித்த தோற்கவசமிடப்பட்டு உருவாக்கப்படுகிறது. அது ஐந்தரை முதல்ஐந்தேமுக்கால அவுன்ஸ் நிறையுடைதாக இருக்கும். பொதுவாகச் சிவப்பு அல்லது வெள்ளை நிறமானது. மட்டை வில்லோ மரத்திலிருந்து உருவாக்கப்படுகிறது. துடுப்பு வடிவினதாக உள்ளது. அதனாற் தமிழிற் துடுப்பு எனப்படுகிறது. இத்துடுப்பு ஏறத்தாழ 38 அங்குல நீளமுடையதாகவும் 4.25 அங்குல அகலமுடையதாகவுமிருக்கிறது.

துடுப்பாட்ட மைதானம் நீள்வட்டத்தை யொத்த வடிவினது. 137மீ. x 152மீ. முதல் 160மீ. x 168மீ. அளவானது மைதானத்தின் நடுவில் மைதானத்தின் குறுகிய எல்லைகளுக்குச் சமாந்தரமாக Pitch எனப்படும் ஒரு செவ்வக பிரதேசம் உள்ளது. இப்பகுதி புல் அகற்றப்பட்ட நன்கு இறுக்கமாக்கப்பட்ட தரையாகும். நமது உள்ளூரில் சிறந்த Pitch தயாரிப்பதில் சிரமமிருப்பதால் Matting எனப்படும் (கயிற்றுப்பாய்) Pitch ஆகப் பயன்படுகிறது.

Pitch இன் இரு அந்தங்களில் ஏறத்தாழ 66 அடி இடைத்தூரத்தில் இலக்குகள் நடப்படுகின்றன. இலக்குத் தடிகள் 28 அங்குல உயரமானவை. முதலாவது - மூன்றாவது தடிகளுக்கிடையில் 9 அங்குல இடைவெளி இருக்கத்தக்கவாறு மும்மூன்று இலக்குத் தடிகள் நடப்பட்டு இருபக்கத்திலும் இலக்குகள் உருவாக்கப்படுகின்றன. இத் தடிகளின் மேல் வைக்கப்படும் சுமார் 4 3/8 நீளமான மரக்கட்டைகள் Bails எனப்படுகின்றன.

இலக்குகள் 8.8 அடி நீளமான Bowling Crease எனப்படும் வெண்ணிற கோடுகளின் மத்தியில் நடப்படுகின்றன. இந்த Bowling Creaseக்குச் சமாந்தரமாக இலக்கிலிருந்து கிட்டத்தட்ட நான்கு அடி தூரத்தில் Popping Crease எனப்படும் கோடுகள் வரையப்படுகின்றன. இந்த Popping Crease துடுப்பாளரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தப் பயன்படுகின்றன.

ஆட்டம் ஒரு Popping Crease இனுள் நிற்கும் துடுப்பாளருக்கும் எதிர்ப்பக்க Popping Crease இலிருந்து பந்து வீசும் பந்தாளருக்குமிடையிலேயே நடைபெறுகிறது. அது பற்றித் தொடர்ந்து வாசியுங்கள்.

## ஆடப்படும் விதம்

துடுப்பாட்டத்தில் முதலில் ஓர் அணி துடுப்பெடுத்தாடும் போது மற்றைய அணி பந்துவசிக் களத்தடுப்புச் செய்கின்றது. ஓர் அணி துடுப்பெடுத்தாடும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் ஒரு Innings எனப்படுகிறது. பாரம்பரிய துடுப்பாட்டம் பொதுவாக இவ்விரண்டு இனிங்ஸ்களைக் கொண்டதாக அமைகிறது. இப்போது ஒரு நாள் போட்டிகள் மட்டுப்படுத்தப்பட்ட ஒவ்வொரு இனிங்ஸைக் கொண்டதாக உள்ளன.

முதலில் எந்த அணி துடுப்பெடுத்தாடுவது என்பதை இரு அணிகளின் தலைவர்களும் மைதானத்தில் நாணயத்தைச் சுண்டி பூவா தலையா பார்ப்பதன் மூலம் தீர்மானிக்கின்றனர். துடுப்பெடுத்தாடும் அணியின் இரு துடுப்பாளர்கள் ஒவ்வொரு Crease க்கும் ஒருவராக நின்று கொள்கின்றனர்.

எதிரணியினர் ஓர் இலக்குப் பக்கத்திற்கு ஒரு பந்தாளரையும் மற்றைய இலக்குப் பக்கத்திற்கு ஓர் இலக்குக் காப்பாளரையும் அனுப்புகின்றனர். ஏனைய ஒன்பது வீரர்களும் மைதானத்தின் வெவ்வேறு பகுதிகளில் களத்தடுப்பில் ஈடுபடுத்தப்படுகின்றனர். பந்தாளர் பந்துவீச ஒரு துடுப்பாளர் அதனை எதிர்கொள்வார். பந்து துடுப்பாளரைத் தாண்டிச் செல்லும் பட்சத்தில் அது மைதானத்திற்கு வெளியே செல்வதை இலக்குக் காப்பாளர் தடுக்கிறார். அவர் வேகமாக வரும் பந்தினைத் தடுப்பதற்கு வசதியாகக் கையுறைகளை அணிந்திருப்பார்.

இரண்டு நடுவர்கள் ஆட்டத்தைக் கட்டுப்படுத்துகின்றனர். தொழிநுட்பம் பெரு வளர்ச்சியடைந்துவிட்ட இந்நாளில் தொலைக்காட்சியின் உதவியுடன் தீர்மானங்களை எடுக்க மூன்றாவது நடுவரொருவரும் காணப்படுகிறாரெனினும் அவர் மைதானத்தினுள் இருப்பதில்லை. ஒரு நடுவர் பந்துவீசும் பக்கத்தின் இலக்கின் பின் நின்று கொள்கிறார். மற்றையவர் துடுப்பாளரின் Leg திசையில் ஏறத்தாழ 30 யார் தூரத்தில் நிற்பார்.

### முன்னணி ஒருநாள் பந்தாளர்கள்

| நாடு | வீரர் | இலக்குகள் |
|---|---|---|
| பாகிஸ்தான் | வசீம் அக்ரம் | 386 |
| பாகிஸ்தான் | வக்கார் யூனிஸ் | 285 |
| இந்தியா | கபில்தேவ் | 253 |
| இந்தியா | ஜவகல் ஸ்ரீநாத் | 232 |
| இந்தியா | அனில் கும்ளே | 232 |
| மே.இ.தீவுகள் | கேட்லி அம்ப்ரோஸ் | 220 |
| மே.இ.தீவுகள் | கொட்னி வோல்ஷ் | 217 |
| தெ.ஆபிரிக்கா | அலன் டொனால்ட் | 206 |
| பாகிஸ்தான் | சக்லேய்ன் முஷ்ராக் | 204 |
| ஆஸ்திரேலியா | மக்டேமொட் | 203 |
| ஆஸ்திரேலியா | ஷேன் வோண் | 202 |
| ஆஸ்திரேலியா | ஸ்ரீவ் வோ | 190 |
| பாகிஸ்தான் | இம்ரான் கான் | 182 |

பந்தாளர்கள் ஓடிவந்து தன் கால் Popping Crease ஐத் தாண்டாதவாறு பந்து வீசுகிறார். அவரது பந்து வீச்சு பெரும்பாலும் இலக்கினைக் குறிவைத்து அமையும். பந்து வீசுதல் பெரும்பாலும் வேகப் பந்து வீச்சு, சுழல் பந்து வீச்சு எனும் இரு வகைகளுள் அடங்குகின்றது.

பந்து வீச்சினை எதிர்கொள்ளும் துடுப்பாளர் அதனைத் தடுத்தாடுவார். அல்லது அதனை அடித்து விட்டு எதிர்ப்பக்க Popping Crease பகுதிக்கு ஓடிச்செல்ல மற்றைய துடுப்பாளர் இந்தப் பக்கம் ஓடிவருகின்றார். அவ்வாறு ஒரு தடவை கடக்கும் போது ஓர் ஓட்டம் பெறப்படுகிறது.

அடிக்கப்படும் பந்து எல்லைக் கோட்டினைக் கடந்தால் ஓடாமலேயே ஓட்டங்கள் கிடைக்கின்றன. மட்டையிற்பட்ட பந்து பின்னர் தரையினைத் தொடாமலேயே எல்லைக் கோட்டினைக் கடந்தால் ஆறு ஓட்டங்களும் தரையைத் தொட்டபின் கடந்தால் நான்கு ஓட்டங்களும் கிடைக்கின்றன. இது தவிர பந்தாளர் முறை தவறிப் பந்து வீசும் போதும் மேலதிக ஓட்டங்கள் கிடைக்கின்றன. பந்து துடுப்பாளரின் உடலிற்பட்டுத் தெறித்துச் செல்லும் போதும் இலக்குக் காப்பாளரைத் தாண்டிச் செல்லும் போதும் ஓடப்படும் ஓட்டங்களும் அணியின் எண்ணிக்கையிலேயே சேர்க்கப்படுகின்றன.

ஓர் ஓட்டத்தைப் பெற்றுத் துடுப்பாளர்கள் பக்கம் மாறியபின் மற்றைய துடுப்பாளர் பந்தினை எதிர்கொள்ள ஆட்டந்தொடரும். ஒரு பந்தாளர் ஓர் இலக்குப் பகுதியிலிருந்து தொடர்ச்சியாக ஆறு தடவைகள் பந்து வீசுதல் ஒரு 'ஓவர்'. அதாவது பந்துப் பரிமாற்றம் எனப்படுகிறது. ஒரு பந்துப்பரிமாற்றம் முடிந்த பின்னர் இலக்குக்காப்பாளர் இடம்மாறி இன்னொரு பந்தாளர் மற்றைய இலக்குப் பகுதியிலிருந்து பந்து வீசுவார்.

துடுப்பாட்டத்தில் துடுப்பாளரின் நோக்கம் ஓட்டங்களைப் பெறுவதாகவும் பந்தாளரின் நோக்கம் துடுப்பாளர் ஓட்டம் பெறுவதைக் குறைக்கச் செய்து அவரை ஆட்டமிழக்க வைப்பதாகும்.

ஒரு துடுப்பாளர் பல விதங்களில் ஆட்டமிழக்கலாம். வீசப்படும் பந்து நேரடியாக இலக்கினை வீழ்த்துவது ஒரு விதம். மட்டையிற்பட்ட பந்து நிலத்தைத் தொடமுன் ஒரு களப்பணியாளர் அதனைப் பிடித்தாலும் (Catch) துடுப்பாளர் ஆட்டமிழப்பார்.

மேலும் பந்தினை அடித்து விட்டு ஓடும் துடுப்பாளர் தன்னை அல்லது தன் மட்டையினைப் Popping Crease இனுள் வைக்க முன்னர் தடுப்பாளர் ஒருவர் பந்தினை எடுத்தெறிந்து இலக்கினை வீழ்த்தினால் துடுப்பாளர் 'ரண் அவுட்' ஆவார். ரண் எடுக்க முயற்சிக்காத சமயத்தில் துடுப்பாளரை இலக்குக் காப்பாளர் பிறரொருவரது உதவியுமின்றித் தானே 'ரண் அவுட்' ஆக்கினால் அது 'Stumping' எனப்படுகிறது. சுழல் பந்தாளர்கள் பந்துவீசும் போது துடுப்பாளர்கள் கிறீஸிற்கு வெளியே சென்று தாக்கி ஆடும் வேளைகளிலேயே பெரும்பாலும் Stump முறையில் ஆட்டமிழக்க நேரிடுகிறது.

பந்தினை எதிர்கொள்ளும் போது துடுப்பாளர் மட்டையினாலோ அல்லது தம் உடலின் பகுதியொன்றாலோ இலக்குத் தடிகளை வீழ்த்தினால் அவர் Hit Wicket முறையில் ஆட்டமிழப்பார்.

மேலும் துடுப்பாளரைப் பொறுத்தவரை அவரின் 'Leg' இலக்குப் பக்கமாக அல்லாமல் மற்றைய பக்கத்தில் விழும் ஏதேனும் பந்து வீச்சின் போது, பந்து நேரடியாக இலக்கில் படக்கூடியதாக இருப்பதை துடுப்பாளரின் துடுப்புக்கு முன்னதாக அவரின் உடல் தடுத்து, பந்தைத் திசை மாற்றுமாயின் துடுப்பாளர் LBW(Leg before Wicket) என்ற முறையில் ஆட்டமிழந்ததாக நடுவரால் அறிவிக்கப்படுவார்.

இதைவிட துடுப்பாட்ட விதிகள் மீறப்படும் சில சந்தர்ப்பங்களிலும் துடுப்பாளர் ஆட்டமிழக்க நேரிடுகிறது. பந்தாளரினால் வீசப்படும் பந்தினைக் கையினால் தடுத்து நிறுத்துதல், அடிக்கப்பட்ட பந்தினைத் தடுப்பாளரொருவர் பிடிக்க முயலும் போது அவருக்கு வேண்டுமென்றே இடையூறு விளைவித்தல் போன்றன அவற்றுள் சில. இவற்றையெல்லாம் தாண்டி ஒரு துடுப்பாளர் தன் தனிப்பட்ட எண்ணிக்கையை 100ஐ எட்டச் செய்வது ஒரு பெருமையான விடயமாகக் கொள்ளப்படுகிறது.

ஓர் அணி பத்துத் துடுப்பாளர்கள் ஆட்டமிழக்கும்வரை தொடர்ந்து ஆடலாம். அதன் பின் எதிரணி துடுப்பெடுத்தாடும்.

ஒரு நாள் போட்டிகளில் குறித்த பந்துப் பரிமாற்றங்களுள் அதிக ஓட்டங்களைப் பெறும் அணிக்கு வெற்றி வழங்கப்படுகிறது.


ஏனைய போட்டிகளில் இரு இனிங்ஸ்களில் மொத்தமாக அதிக ஓட்டங்களைப் பெறும் அணிக்கு வெற்றி கிடைக்கிறது. இனிங்ஸ்களைப் பூர்த்தியாக்கப் போதிய காலஅவகாசம் கிடைக்காத ஆட்டங்கள்,வெற்றி தோல்வி வழங்கப்படாமல் (Draw) முடிவடைகின்றன.

சரி. துடுப்பாட்டம் ஆடப்படும் விதம் பற்றி இவ்வாரம் அறிந்தீர்கள். அடுத்த வாரம் அறியப் போவது? அதிர்ச்சியா மகிழ்ச்சியா? பொறுத்தவர் பூமியாள்வார் அல்லவா!

(தொடரும்)

### முன்னணி ஒரு நாள் துடுப்பாளர்கள்

| நாடு | வீரர் | ஆட்டங்கள் | ஓட்டங்கள் | 50கள் | 100கள் |
|---|---|---|---|---|---|
| இந்தியா | மொஹமட் அஸாருதீன் | 323 | 9109 | 57 | 7 |
| மே.இ.தீவுகள் | டெஸ்மண்ட் ஹெயின்ஸ் | 238 | 8648 | 57 | |
| இலங்கை | அரவிந்த டி சில்வா | 259 | 8093 | 56 | |
| இந்தியா | சச்சின் டெண்டுல்கர் | 218 | 8054 | 43 | 22 |
| இலங்கை | அர்ஜுனா ரணதுங்கா | 269 | 7454 | 49 | 4 |
| பாகிஸ்தான் | ஜாவெட் மியன்டாட் | 233 | 7381 | 50 | 8 |
| பாகிஸ்தான் | சலீம் மலிக் | 289 | 7169 | 47 | 5 |
| மே.இ.தீவுகள் | விவியன் ரிச்சட்ஸ் | 187 | 6721 | 45 | 11 |
| ஆஸ்திரேலியா | மார்க் வோ | 191 | 6636 | 42 | 12 |
| பாகிஸ்தான் | சாயிட் அன்வர் | 180 | 6540 | 30 | 17 |
| ஆஸ்திரேலியா | அலன் போடர் | 273 | 6524 | 39 | 3 |
| மே.இ.தீவுகள் | ரிச்சி ரிச்சட்சன் | 224 | 6248 | 44 | 5 |
| ஆஸ்திரேலியா | [illegible] | [illegible] | [illegible] | 37 | 2 |
| பாகிஸ்தான் | [illegible] | [illegible] | 6164 | 33 | 10 |
| பாகிஸ்தான் | இன்சமாம் உல் ஹக் | 192 | 6121 | 43 | 6 |
| ஆஸ்திரேலியா | டீன் ஜோன்ஸ் | 164 | 6068 | 46 | 7 |
| ஆஸ்திரேலியா | டேவிட் பூன் | 180 | 5964 | 37 | 5 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிதிவெடிகளினால் பாதிப்புறுவோருக்கு அவயவங்கள் வழங்கும் ஜெய்ப்பூர் நிறுவனம்

**யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனத்தின் 12 ஆவது நிறைவையொட்டி யாழ் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் திருமதி. தி. யோகநாதன் வரைந்த இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**


ஜெகமெல்லாம் போற்றிட ஜெய்ப்பூர் பாத சேவைக்கு 12 ஆண்டுகளை முழுமையாக அர்ப்பணித்த மனநிறைவில் இன்று நாம் நிற்கிறோம். 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் உள்நாட்டு யுத்தத்தினால் அங்கங்களை இழந்து பரிதவித்த ஊனமுற்றோருக்கு அங்கப் புனரமைப்புச் செய்ய அன்றைய யாழ். அன்னையர் முன்னணியினதும், கொழும்பு நட்புறவுச் சங்கத்தினதும் 'நோராட்' (NORAD) அமைப்பினதும் கூட்டு முயற்சியினால் உருவாக்கப்பட்டதே யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக் கால் திட்டம்.

யுத்த நெருக்கடிகள், பொருளாதார வசதிக்குறைவுகள், அரச சட்ட கெடுபிடிகள், போக்குவரத்துச் சிரமங்கள், கட்டுப்பாடுகள் என்பனவற்றுக்கு மத்தியில் எதிர்நீச்சல் போட்டு இந்த 12 ஆண்டு காலப்பகுதியில் நாம் 1841 பேருக்கு செயற்கைக் கால்களை பொருத்தியுள்ளோம். அதில் அதிர்ச்சியான விடயம் என்னவென்றால் இந்தத் தொகையினரில் நோய்க்காரணிகள், விபத்துக்கள் என்பவற்றால் கால் பொருத்த நேரிட்ட 368 பேரைத் தவிர்த்து எஞ்சிய 1473 பேரும் போர் வன்முறைகளினாலேயே கால்களை இழந்து செயற்கைக்கால் பொருத்தப்பட்டவர்கள். அதிலும் 983 பேர் மிதிவெடிகளில் சிக்கியே கால்களை இழந்தவர்கள் என்பதுதான்.

செயற்கைக் கால்களைப் பொருத்தியவர்களில் பொருளாதார நிலையில் மிகவும் தாழ்ந்தவர்களாகிய 261 பேருக்கு நாம் அவர்கள் சுயதொழில் வாய்ப்பில் ஈடுபட்டுத் தங்களுக்கும் தங்கள் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கும் கணிசமான அளவு வருவாயை ஈட்டிக் கொடுக்கும் வகையிலாக கிட்டத்தட்ட ஐந்தரை லட்சம் ரூபாவை வட்டியில்லாத சுழற்சி முறையிலான கடனாகக் கொடுத்துள்ளோம். கல்வி பயிலும் - கால் பொருத்திய - மாணாக்கருக்கு நாம் உதவிப் பணமாக மாதம் 250 ரூபா வீதம் வழங்கி வருகின்றோம். இதனால் பயனடையும் மாணவரின் தொகை 44 ஆகும்.

இலங்கையில் மிதிவெடி அவலங்கள் சம்பந்தமாக நடத்தப்பட்ட மதிப்பீடு ஒன்றின்படி மிதிவெடிகளினால் கால்களைப் பறிகொடுத்தோரின் தொகையில் 30 சதவீதத்தினர் யாழ். குடாநாட்டுக் குடிமக்களே எனத் தெரிய வருகின்றது. அத்தோடு 1996ஆம் ஆண்டு நடுப்பகுதிக்குப் பின்னரே (அதாவது 1995ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் புலம்பெயர்ந்த மக்கள் யாழ். நகரில் மீளக் குடியேறிய பின்) மிதி வெடிகளின் கொடூரத்தாண்டவம் உச்சக்கட்டத்திற்கு வந்தமை எமை நாடிவந்த - கால் இழந்தவர்களின் எண்ணிக்கையிலிருந்து புலனாகிறது. மாதம் பத்துப் பேர் மிதிவெடிகளால் கால்களை இழந்திருக்கிறார்கள் என்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. இன்னமும் மிதிவெடிகளில் சிக்கிப் பலர் கால்களை இழக்கிறார்கள் என்று செய்திகள் வெளிவந்த வண்ணமே இருக்கின்றன. போக்குவரத்து வசதியின்மை மற்றும் மனவிரக்தி, அறியாமை என்பன போன்ற காரணங்களால் எமது சேவைகளை நாடிவராதோர் சமூகத்தில் இன்னும் பலர் இருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட அல்லது கால் துண்டிக்கப்பட்ட நிலையில் வைத்திய வசதி பெறு முன்னர் மரணத்தை தழுவியோர் இன்னும் சிலர்.

மனிதர்களை முடமாக்கும் அல்லது மரணத்தை ஏற்படுத்தும் வெடிகளை நாம் 7 வகையாக வகுக்கலாம். இவற்றுள் நிலத்துள் முழுமையாகவோ அன்றிப் பகுதியாகவோ புதைக்கப்பட்டுள்ள வெடிகளையே நாம் நிலக்கண்ணி வெடிகள் என்கின்றோம். இவை ஒரே நேரத்தில் பலருக்குப் பாரதூரமான விளைவுகளை உண்டாக்கும். காலினால் மிதித்தால் அல்லது ஆயுதங்களினால் தட்டுப்பட்டால் வெடிக்கும் வெடிகளை நாம் மிதிவெடிகள் என்கிறோம். மிதித்தல், கொத்துதல் போன்ற செய்கைகளின்போது இவை வெடித்துச் சிதறி விரல்களை இழக்க வைக்கும. பாதத்தை துண்டிக்கும். சிலவேளைகளில் அந்த இடத்திலேயே முழுக் காலையுமே பலியெடுக்கும். உடல் முழுவதும் காயங்களை ஏற்படுத்தி உயிரையே காவு கொள்ளும். கண் பார்வையைப் பாதிக்கும். அல்லது குருடாக்கும். கேட்கும் சக்தியைக் குறைக்கும். அல்லது செவிடாக்கும்.



இந்தக் கொடிய வெடிவகைகளை இராணுவத்தினரும், போராளிகளும் தங்களுடைய சுயபாதுகாப்புக்காகவும் தங்களைத் தாக்க வருகின்ற எதிரிகளை அழிக்கும் அல்லது முடமாக்கும் எண்ணத்துடன் நிலத்தில் புதைத்து வைக்கின்றார்கள். இந்த வெடிகள் பெரும்பாலும் பாதுகாப்பு அரண்கள், அணைகள், பதுங்கு குழிகள், இராணுவமுகாம்கள் ஆகியவற்றை அண்மித்த பகுதிகளிலேயே புதைக்கப்பட்டிருக்கும். அத்தோடு மரங்களுக்கு கீழும், வீதியோரங்களிலும், கிணற்றடி, வீட்டு வாசல், வயல்வெளிகள், தோட்டங்கள் என்பன போன்ற இடங்களிலும் எதிராளிகளின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கங்களுடனும் புதைக்கப்பட்டுள்ளதை அறியக் கூடியதாய் இருக்கின்றது.

யுத்தம் நடந்த பிரதேசங்களில் இருந்து வெடிகளைப் புதைத்தவர்கள் விலகிச் செல்லும்போது தாங்கள் விதைத்த வெடிகளை அழித்து விட்டுச் செல்வதில்லை பாதுகாப்புக் காரணங்களைக்காட்டி புதைத்த இடங்கள் சம்பந்தமான வரைபடங்களையும் விட்டுச் செல்வதில்லை. தங்கள் வீடு வாசல்களைப் பார்க்கவும், சந்தர்ப்ப சூழ்நிலைகள் சாதகமாக இருக்கும்போது மீளக்குடியமரவும் செல்லும் அப்பாவிப் பொதுமக்களே பெரும்பாலும் மிதி வெடிகளில் மிதித்து கால்களை இழக்கின்றார்கள். கால்நடைகளும் உணவுதேடி அலையும்போது வெடிகளில் மிதித்து கால்களை இழக்கின்ற பரிதாபமும் கொடுமை.

இலங்கையில் மட்டுமன்றி உலகில் உள்நாட்டுச் சண்டைகள் மற்றும் இனக்கலவரங்கள் நடைபெறும் பல நாடுகளில் லட்சக்கணக்கான மக்கள் இக்கொடிய ஆயுத வெடியால் உயிரிழந்த அல்லது முடமாகிய பரிதாப நிலை, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்கான சேவைகளை ஆற்றி வரும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் (ஐ.சி.ஆர்.சி) கவனத்தை ஈர்த்தது.

1995 ஆம் ஆண்டளவில் நிலக்கண்ணிவெடிகள் தடுக்கப்படவேண்டும் என்ற சுலோகத்துடன் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவும் செம்பிறைச் சங்கமும் ஒன்றிணைந்து மிதிவெடிகளுக்கு எதிரான பிரசாரங்களை ஆரம்பித்தன. பொதுசன அபிப்பிராயத்தின் உந்துதலும், பல்வேறு தனியார் அமைப்புக்கள் சர்வதேச நிறுவனங்கள், அரசாங்கங்கள், அரசசார்பற்ற அமைப்புக்கள் ஆகியவற்றின் கூட்டுறவும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் மிதிவெடிகளுக்கு எதிரான ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்குப் பக்கபலமாய் அமைந்தன.

மாநாடுகள், வட்டமேசை உரையாடல்கள், விளம்பர உத்திகள்புள்ளிவிவர சேகரிப்புக்கள், விசேட ஆய்வுகள், அனுபவ அறிக்கைகள் என பலவழிகளின் மூலம் மிதிவெடிகளின் நாசகரமான பின் விளைவுகள் எடுத்துக்காட்டப்பட்டன.

உலகில் கிட்டத்தட்ட 12க்கும் 15க்கும் இடைப்பட்ட நாடுகளில் - குறிப்பாக ஆபிரிக்க, மத்திய கிழக்கு, ஆசியநாடுகளில் - இத்தகைய மனித இழப்புக்கள் மிகவும் மோசமாக இருந்தன. பத்துக்கோடி நிலக் கண்ணிகள் நாள் வருடாந்தம் சுமார் 24 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இறந்தனர் அல்லது முடமாயினர் என அறிக்கைகள் தெரியப்படுத்தின. செஞ்சிலுவைச்

## பன்னிரண்டு ஆண்டுகால உன்னத சேவை பூர்த்தி

சர்வதேசக் குழுவின் செயற்கைக்கால் உற்பத்திப் பட்டறைகளில் மட்டும் 1979 -1998 ஆண்டு காலப்பகுதியில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் செயற்கைக் கால்கள் உற்பத்தி செய்யப்பட்டன. மிதி வெடிகளினால் மிகவும் பாதிக்கப்பட்ட பலநாடுகளில் செயற்கைக் கால்களைத் தயாரிக்கும் தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டு அரசுகளுக்கும் சமூகசேவை ஸ்தாபனங்களுக்கும் புனர்வாழ்வுப் பணிகளுக்குமாக ஒப்படைக்கப்பட்டன. நவீன பொலிபுறொப்பைலீனிலான கால்களை உருவாக்க பலருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த வகையில்தான் யாழ்.ஜெய்ப்பூர் செயற்கைக் கால் திட்டத்திற்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் கால் பொருத்தும் நிபுணர் ஒருவரின் சேவை கிடைத்துள்ளது. இவரின் பரந்த அனுபவத்தாலும் தொழில்நுட்ப வல்லமையினாலும் எமது திட்டம் பலவகையில் நன்மையடைய வாய்ப்புக்கள் உண்டு.

மிதிவெடிகளின் இராணுவ ரீதியிலான பலன்களைவிட மனித இழப்புக்களே பன்மடங்கு அதிகம் என ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது.யுத்த அரங்குகளில் கடமை புரிந்த பல சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் கூட இதனை ஏற்றுள்ளார்கள். உயிரிழப்பு, அங்கஇழப்பு என்பவற்றோடு சமூக, பொருளாதார, உளவியல் ரீதியாகவும் மக்கள் பாதிப்படைந்து சமுதாயத்தில் பல புதிய பிரச்சினைகள் உருவாகியுள்ளன. விவசாயத்திற்கும் தோட்டத்திற்கும் பயன்பட்ட பல விளைநிலங்கள் பயனற்றுப்போய் இருக்கின்றன. பல குடும்பங்கள் தங்கள் வருவாய்களை இழந்து தவிக்கின்றன. வாழ்க்கைச் செலவும் கூடிக் கொண்டே போகின்றது. அங்கப்பாதிப்புள்ள ஒரு மனிதனின் குடும்பத்தில் மருத்துவச் செலவுகளும் கூட. அதோடு மகிழ்ச்சின்மை, விரக்தி, தேவையற்ற பயப்பிராந்தி, மனக்குழப்பம், தனிமை என்பன போன்ற உணர்வுகள் நிலவுவதும் சர்வசாதாரணம்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரோடு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம், யுனிசெவ், போன்ற நிறுவனங்களும் நிலக்கண்ணிகளை தடை செய்யும் பணியில் தீவிரமாகப் பங்குபற்றி வருகின்றன.




மிதிவெடிகளின் உற்பத்தி, சேகரிப்பு, கைமாற்றம், பாவனை என்பவற்றை உள்ளடக்கிய சர்வதேச தடை உடன்படிக்கை ஒன்றை ஒட்டாவாவில் (கனடா) நிறைவேற்றுவதில் அவை வெற்றியும் ஈட்டியுள்ளன.பல நாடுகள், இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. இன்னும் சில நாடுகள் உடன்படிக்கையை வரவேற்றாலும் தங்கள் நாடுகளில் நிலவும் போர்ச்சூழ்நிலை காரணமாக உடன்படிக்கையில் கைச்சாத்திடவில்லை. இன்னும் சில நாடுகள் உடன்படிக்கைக்கு எதிராக உள்ளன.

ஒருபுறத்தில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியிலுள்ளோரால் ஒரு லட்சம் கண்ணிகள் அகற்றப்படுகின்ற நேரத்தில் மறுபுறத்தில் இருபது முதல் ஐம்பது லட்சம் கண்ணிவெடிகள் புதிதாக புதைக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு பத்துக்கோடிக்கு மேற்பட்ட அளவில் கண்ணிவெடிகளை அரசும் போராளிகளும் களஞ்சியப்படுத்தி வைக்கின்றனரென்றும் தெரியப்படுத்தப்படுகிறது. புதைத்தலும் களஞ்சியப்படுத்தலும் இலங்கையிலும் நடைபெறுவது கண்கூடு. இலங்கை அரசு கண்ணிவெடித் தடைக்கு ஆதரவான கருத்தை வெளியிட்டுள்ளதாயினும் உடன்படிக்கையில் கைச்சாத்திடவில்லை.

கண்ணிவெடி, மிதிவெடி என்பவற்றை அகற்றுவது மிகவும் சிக்கலான ஒரு செயல். நீண்டகாலங்கள் எடுக்கும். உயிரபாயம்கூட உண்டு. பொருள்செலவும் கூடுதலானது. புதிதாக வெடிகள் புதைக்கப்படாத பட்சத்தில் இருக்கின்ற வெடிகளை அகற்றவே ஆயிரம் வருடங்கள் வரை செல்லும் என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது என்றால் நிலைமையைச் சற்று யோசித்துப் பாருங்கள்.

யாழ்ப்பாணத்தில் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் வெடிகளை அகற்ற இரண்டுமுதல் இரண்டரை வருடகாலம் எடுக்கும் எனவும் 12 வீத நிலப்பரப்பில் அவை புதைக்கப்பட்டிருப்பதாகவும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு இந்த மிதிவெடிகளை அகற்றும் பணிக்கு 35 கோடி ரூபா செலவாகும் எனவும், மேலதிகமாக மூன்றரை கோடிரூபா வாகன, தகவல், தொடர்பு சாதனங்கள், கருவிகள், அலுவலக தேவைகள் என்பவற்றிற்குச் செலவாகும் எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் சமாதானம் ஏற்பட்டு போர்க்கொடுமை முற்றும் அழிந்தால்தான் புதிய இழப்புக்கள் ஏற்படுவதைத் தடுக்கலாம். ஆனால் இழப்புகளுக்கு ஆளானோருக்கு ஜெய்ப்பூரின் சேவை வாழ்நாள் முழுவதும்தேவை. கால் இழந்து செயற்கைக் காலில் நடமாடும் சிறுவர்களுக்கு அவர்கள் வளரவளர புதிய செயற்கைக் கால்கள் வருடமொன்றுக்கு ஒன்று வீதம் தேவைப்படும். வளர்ந்தோருக்கு 2 முதல் 3 வருடங்களுக்கு ஒரு முறை புதிய கால் தேவைப்படும்.

நடுவில் பழுது பார்ப்புகள் செய்ய வேண்டிவரும். நோய், வயது காரணமாக செயற்கைக்கால்கள் பொருத்தியும் நெடுந்தூரம் நடக்க முடியாதவர்களுக்கு முச்சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகளின் உதவிகள் தேவை. அவர்களில் ஏழைகளுக்கு எமது தொழிற்பயிற்சி உதவிகள், சமூக மறுவாழ்விற்கான பொருளாதார உதவிகள் தொடர்ந்தும் தேவை.

எனவே ஜெய்ப்பூரின் சேவை நீண்ட தொடர்கதைபோல் சென்று கொண்டிருக்கப் போகின்றது. சேவைக்கு நாம் தயங்கவில்லை. ஆனால் அதற்கான நிதியும் தேவையல்லவா? வெளிநாட்டு உதவிகள் தொடர்ந்தும் கிடைக்கும் வாய்ப்புக்கள் உள்ள போதிலும் அவற்றில் முற்றாகத் தங்கியிருக்க முடியாது. எம் மத்தியில் உள்ளவர்களும் எமது சேவைகளின் பரிமாணங்களை உணர்ந்து எமது திட்டத்திற்கு நிதியுதவி அளிப்பதை நாம் பெரிதும் எதிர்பார்க்கின்றோம். நாம் கேட்காமலே எமக்கு நிதியுதவி செய்து எம்மை ஊக்குவிக்கும் கொடையுள்ளம் கொண்டோரும் எம் மத்தியில் உளர். எமக்கு நிதியுதவி செய்த அனைவரும் உடல் ரீதியாகவும், சமூக, பொருளாதார ரீதியாகவும் பயனடைந்தோர் நெஞ்சங்களிலும் எமது நினைவிலும் என்றும் நிறைந்திருப்பர்.

வாசகர்களே! மதிவெடிகளின் கொடூரங்களினாலும் மற்றும் இயற்கை காரணிகளினாலும் விதிவசத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கி அவர்களின் சமூக மறு வாழ்விற்கும் ஒளிமயமான எதிர் காலத்திற்கும் வழிகாட்ட நாம் வழங்கும் சேவைகளுக்கு உதவிக் கரம் நீட்டுங்கள். எம்மோடு இணையுங்கள் என்று ஜெய்ப்பூர் திட்டத்தினராகிய நாம் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.



ஜெய்ப்பூர்க் காலுடன் நடக்கப் பயிலும் ஒருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுருதிகள் தவறலாம்

"நீளநினைந்தடியேன் உன்னை நித்தலும் கைதொழுவேன்...."

தாத்தாவின் கணீரென்ற குரல் காலைப்பொழுதிற்கு புனிதம் சேர்த்துக்கொண்டிருந்தது. நீள நினைவதேன்? நினைத்து கைதொழுவதேன்? பக்தியா? பக்தி சுயநலத்தினுள் புதைந்திருப்பது தெள்ளத்தெளிவாய்த் துலங்கிற்று. தருவன சொல்லி வரம்தரக் கேட்டு வேண்டுகின்ற மரபு. மனிதன் கடவுளையும் மனிதத்துவத்தினுள் புதைகின்ற பலவீனம் ஏன்? ஏன் தெய்வீகத்தைத் தெய்வீகமாகப் பார்ப்பதற்கு இவர்களுக்கு முடியவில்லை?

நான் - ஸ்வர்ணகரன்தான் - சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். தாத்தாவின் ஒரே பேரன். வாலிப வயதில் காலடி பதிக்கின்ற என்னைப் பற்றித் தான் தாத்தாவின் பிரார்த்தனைகள்



பெரும்பாலும் இருப்பது வழக்கம். இன்றும் கூட... அதோ ப்ாருங்களேன் அவர்தான் சொல்லிக்கொண்டிருக்கிறார்:- "சுவாமிநாதா... சுந்தரவடிவேலா... நீதானப்பா என்ர பேரனுக்கு நல்ல புத்தியைக் குடுக்கவேணும்... கருணைக் கடலே... கார்த்திகேயா..." தொடரும் முருகநாமங்களின் வழக்கம் சலிப்பை ஏற்படுத்த மேசைமீது படுத்தபடி பென்சிலால் மட்டும் வரைந்த ஓவியத்தை நிழற்றிக் கொண்டிருக்கிறேன். எப்போதும் மௌனத்துள் புதைந்துகிடக்கின்றஎன்னை என் தாத்தாவிற்கும் பாட்டிக்கும் ஏன் பெற்றவர்களுக்கும் கூட வாசிக்க முடியவில்லை. ஆசிரியத் தொழிலின் அவசரமான, இறக்கையற்ற அவர்களது பறப்பிற்கிடையே என்னைப் பற்றி யோசிக்க அவர்களுக்கெங்கே நேரம் இருக்கப் போகிறது? இவர்கள் பாதை வேறு. என் பாதை வேறு. இவை கிளைப்பாதைகள் கூட இல்லை, தனிப்பாதைகள். ஏனெனில் நினைவு தெரிந்த பொழுதில் இருந்து நமது சிந்தனைகள் ஒன்றுபட்டதாய் எனக்கு ஞாபகமில்லை.

* * *

கடந்த வாரம்தான் சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் வெளியாகி இருந்தன. தனிப்பட்ட வகுப்புக்கள் மிகத் தாராளமாகத் திணிக்கப்பட்டிருந்த என்னால் ஒரேஒரு அதிவிசேட சித்தியும் 3 விசேட சித்திகளும் 4 சாதாரண சித்திகளும்தான் பெற முடிந்திருந்தது. மனம் சோர்ந்து போனது. வீட்டில் இந்தப் பெறுபேறுகள் பிரளயத்தைக் கிளப்பும். அவர்களின் மனக் கடலலைகள் கொந்தளித்து வானுயர எழும்பும் வார்த்தைகள் என் மீது கூரிய ஈட்டிகளாய்ப் பாயும். இவ்வளவும் நடக்கும் என்பது எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. எனினும் அமைதியாய் வீட்டுக்கு வந்தேன்.

நான் வருவதற்கு முன்பே என் பெறுபேறுகள் வீட்டை அடைந்திருக்க வேண்டும். ஏனெனில் எவரும் ஆவலாய் என்னிடம் எதுவும் கேட்கவில்லை. அமைதியாய் என் அறையினுள் புகுந்து கதவினை ஒருக்களித்துச் சாத்திக் கொண்டேன்.

'ச்சே...கொஞ்சம் கவனமெடுத்துப் படிச்சிருக்கலாம்..எவ்வளவு எதிர்பார்த்திருப்பினம்... நான் இப்பிடி...' என்னிடம் என்மனம் பேசிற்று. என்னைத் தாக்கிற்று.

மௌனவேதனை ஒரு கூரிய ஊசியாக என் பூவிதழ் மனதின்மேல் ஊர்வலம் நடத்திற்று. எனக்கு ஆறுதல் தேவை. எனக்குப் பாசமானவர்கள் தேவை. என்னைப் படிக்கச் சொல்லி வழிப்படுத்தும் முறை இதுவல்ல. திணிக்கப்படுகின்ற தனியார் வகுப்புக்கள் என்னை ஊக்கமுடைய மாணவனாக ஒருபோதும் மாற்றாது. வலைகளில் மீன்கள் சிக்கும்; தண்ணீர் சிக்குவதில்லை. என் வயது கண்டிப்பினால் மட்டும் திருந்தும் வயதல்ல. இதெல்லாம் இவர்களுக்கு எப்போது புரியும்?

...சரி...சரி. இனிப் போனதெல்லாம் போகட்டும் இனி ஏ.எல்லுக்கு கவனமாய்ப் படிக்க வேணும். நான் மற்ஸ் தான் படிக்கப் போறன். எனக்கு ஈடு பாடான பாடமும் என் ஒரேயொரு 'டீ' யும் அதுதான். அப்பிடித்தான் நிவேதிதாவும் சொன்னவ.

நிவேதிதா...

என்மீது அன்பாய், ஆதரவாய்க் கதைக்கின்ற - என் ஓவியங்களை ரசிக்கின்ற - இனிய நட்பு. என்னை விட இரண்டு வருடங்கள் பெரியவள். நிவேதி... எனக்கு மட்டும் கேட்கும்படி இரகசியமாய் முணுமுணுத்துக் கொண்டேன். மனம் முழுதும் சுகம் பரவிற்று. என் முணுமுணுப்பைத் தென்றல் வெளியே காவிச் சென்று விடுமோ என்ற கலக்கத்துடன் சடுதியாய் அறைக்கு வெளியே பார்த்தேன். தாத்தா மிக மும்முரமாய் என் சிறுவயதுப் படமொன்றைத் தூசிதட்டிச் சுவரில் மாட்டிக் கொண்டிருந்தார். பார்க்கும் போதே இனம் புரியாத பாசம் மன தில் மோதிற்று.

**ச.சாரங்கா**

'வந்த றிசல்ற்றைப் பற்றிக் கேளுங்கோ தாத்தா. இனி நானாயே உணர்ந்து படிப்பன் தாத்தா... தாத்தா...'

வழமை போல மனதினுள்தான் கதைத்துக் கொண்டேன்.

அவர் தானாக வரக்கூடும் என்ற நப்பாசையில் அடிக்கடி அறைக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தேன்.

இனிமேலாவது என் கோபத்தைக் கொஞ்சம் கட்டுப்படுத்திக் கொள்ள வேணும். சிடுமூஞ்சித்தனத்தை உதறிப் போட்டுக் கலகலப்பாய் இருக்கப் பழகவேணும். 'கரனைப் பாரடா மச்சான் என்னமாய் மாறீட்டான்?' எண்டு சிநேகிதர்கள் கதைக்க வேணும்...

எனக்கு நானே திட்டங்கள் சொல்லிக் கொண்டிருந்தேன்.

நிவேதி... நிவேதி கூடச்சொன்னா. நான் நல்லவனாம்; கெட்டிக்காரனாம். நினைச்சுப் படிச்சா நிச்சயமாய் உச்சத்துக்கு வரலாமாம். அந்த இனிமையான குரல்...

கற்பனாவுலகக் கதைகளில் வரும் தேவதைத்தனமான அழகிய விழிகள்...

அமைதி.. நளினமான ஒரு தென்றல் போல.

எனக்கு அவளை மிகவும் பிடித்திருக்கிறது. இந்த அன்பு மிக இனிமையானது. எந்தவிதமான அன்பு இது என்பதை எனக்கு வரையறுக்க முடியவில்லை. ஆனால் சேரன் சொன்னான். அது இப்பிடித்தானாம் குழம்பித் தெளியிற விஷயமாம். ஏன்னவோ, ஏதோ, நிவேதியை நான் மனம் முழுதும் சுமந்திருப்பது உண்மை. முன்னமெல்லாம் பாடசாலையில் சாதாரணமாக நிவேதியைக் காண்பேன். சில வார்த்தைகள் கதைத்து விலகி விடுவேன். ஆனால் பாட்டியால் வந்தது வினை! அந்தச் சம்பவத்தின் பின் நிவேதியுடன் வெளிப்படையாகக் கதைக்க முடியாமல் போய்விட்டது.

அந்தச் சம்பவம்...

அன்று நிவேதியின் பிறந்தநாள். எனக்குத் தெரியும் நிச்சயமாக என் வாழ்த்துக்கள் அங்கு எதிர்பார்க்கப் படுமென்று. அந்தத் தேவதை விழிகளை சந்தோஷத்தில் விரியவைக்க என்ன செய்யலாம்? ஓர் 'இனிய பதினெட்டுக்கு எது பிடிக்கும்? என் கேள்வித் தட்டுகளுக்குப் பதில் பரிமாற எவரும் இல்லையே. அப்பாவின் தோற்றமே சிம்ம சொப்பனமாய் எனக்கு. அப்பாவின் கண்டிப்புக்குப் பக்கம் சாய்கின்ற அம்மா...ஆசாரமிருந்த பழமைத்தனத்துள் மூழ்கிப் போய்க்கிடக்கின்ற பாட்டி... எப்போதாவது என்வழிக்கு இறங்கி வருகின்ற தாத்தா...

இவர்களில் யார்தான் என் கேள்விக்குப் பதில் தருவார்கள்?

ஆக, சுயமாக நானே சிந்தித்து அழகிய ஒரு சோடிச் சலங்கைகளும் என் தோட்டத்து மல்லிகைப் பூக்களும் கொண்டு நிவேதியின் வீட்டுக்கே போய்விட்டேன். எனக்கு வெற்றியே தான்.

பூவாய்ச் சிரிப்பு...சற்றே தலை சாய்ந்து...சின்னக் குழந்தை போல அப்பாவித்தனமான முகத்தோடு...

ஆனால் அடுத்த நாள் பாடசாலையில் நான் கொடுத்த பூக்கள் சாக்கடை நீராய் சேறாய் மணத்தன. கறைபடிந்த கதைகள் விஷநாக்குகளால் விமர்சிக்கப்பட்டன. எனக்குள் குறுகி, மௌனமான பொழுதில் என்னுள் அந்த வன்மம் எழுந்தது. இந்தக் கதையை விதைத்தவன் எவன்? எவருக்காகவும் என் நிவேதி மீதான அன்பு மாறப்போவதில்லை. சமூகத் தடைகள் அன்பை நொறுக்குவது கொடுமை. அதை அனுமதிக்க முடியாது.

ஆனால் வதந்தியின் வேகம் அதிகம். நான் வரமுன் கதை வீட்டுக்கு வர பாட்டி நேரடியாய்ப் போய் நிவேதி வீட்டில் 'திருவாய் அர்ச்சனை' செய்து வர எனக்குள் மேலும் இறுகினேன். நிவேதியும் நானும் ஒன்றாயும் மற்ற எல்லோரும் அந்நியர்களாவும் தோன்றினார்கள். எனக்கும் இப்போது... அவர்கள் கதைத்தது போல, 'இருவரும்' பிரிவின்றிப் பழகுவது போலிருந்தது. அடக்கப்படுபவை எழுச்சி கொள்ளும் கொள்கை தெரியாத என் பெற்றோர்கள்... ஏன் இவர்கள் என்னைப் புரிந்துகொள்ள வில்லை?

ஏதோ! பழங்கதை நினைத்துக் கொண்டிருக்கிறேனே. ச்சே... திடீரென சுயநிலைக்கு வந்து எட்டிப் பார்த்தேன். எவரும் வருவதாக இல்லை. அறைக்குள் நிலைக்கண்ணாடியில் என் விம்பப்பிரதிபலிப்பில் திரும்பினேன். எழுந்து சென்று கண்ணாடி முன் நின்றேன். வாட்டசாட்டமான கம்பீரமான என்னைப் பார்க்கையில் மனதினைச் சந்தோஷத்தென்றல் வருடி விலகிறது. அரும்புகின்ற என் மேலுதட்டில் பார்வைதாவிற்று. 'இது' வைப்பதா எடுப்பதா? எது எனக்கு நல்லது? மீசை வைத்த நடிகர்களையும் வைக்காதவர்களையும் மனம் நிரற்படுத்திற்று. முடிவுக்கு வர முடியாதிருந்தது. ஏன் என் சம்பந்தமான தீர்வுகளை நானே எடுக்க வேண்டியுள்ளதா? அப்பா எனக்கு ஒரு நல்ல சிநேகிதனாக இருக்கக் கூடாதா? இருந்தால் இதை ஒருமுறை கேட்டுப் பார்த்திருக்கலாமே...? இயலாமையுடன் நினைத்துக் கொண்டேன். சரி! நிவேதியிடம் கேட்கலாம்.. அவள்தானே என்னைப் புரிந்து கொண்ட ஒரே நட்பாக இருக்கிறாள்.

அம்மாவும் அப்பாவும் வந்து விட்டார்கள். பாட்டிதான் தொடங்கினா...

"கல்லுளிமங்கன் மாதிரி... இருக்கிறதைப் பாரன். அட... ஓவியம் கீறு [illegible] அஞ்சலோவோ, பிக்காஸோவோ எண்டு நினைப்பு. அவள் இடிச்சுக் குத்துற கமலத்தின்ரை பொடியனுக்கு எட்டுமடியாம்..."

பாட்டி தோளில கன்னத்தை இடித்துக் கொண்டாள். எனக்குச் சடுதியாக் கோபம் உச்சிக்கு ஏறிற்று.

"ஒப்பிட்டுக் கதைக்க வேண்டாம். பாட்டி என்னைப்பற்றி எது எண்டாலும் பேசுங்கோ" மெதுவாய்ச் சொன்னேன். அது தவறாய்ப் போயிற்று.

"ஓமோம் 'எளியதுகள்' எல்லாம் இப்பிடியெடுக்க...எங்கடை குலப் பெருமை தெரியுமோடா உனக்கு...? அதென்ன... என்ன தனிவகுப்பைப் போட்டென்ன... பானைக்கை இருந்தாவெல்லோ அகப்பையில..."

என் மனதில் புயலுக்கான ஆரவாரங்கள். வெளிப்படையாக மௌனமாய் இருந்தேன். "தொல்லைக் கெண்டு வந்து பிறந்திருக்கிறானப்பா, விடுங்கோ" அப்பாதான் சொன்னார். என் பதினாறு வயதை மறந்துவிட்டு ஓவெனக் குரலெடுத்து அழத்தோன்றிற்று. அம்மாவைப் பரிதாபமாகப் பார்த்தேன். அவ அவசரமாகத் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தா. தாத்தாவைப் பார்த்தேன். வியாபார அலுவலாய் வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

"உழைப்பு! உழைப்பு! யாருக்கு வேணும் உங்கள் பணம்? எனக்குப் பணம் வேண்டாம். பாசம் வேணும் தாத்தா..." எனக்குள் அழுதேன்.

நான் பலநாளாய் முயற்சித்து வரைந்திருந்த ஓவியத்தை எடுத்துப் பார்த்தேன். ஓர் அழகிய குருவிக் கூடும் இருகுருவிகளும் அவற்றின் ஒரு குஞ்சும்...தத்ரூபமாய் வரைந்திருந்தேன்.

பெற்றோர்க் குருவிகள் ஏதோ தீவிரமாக யோசிப்பது போலிருந்தது. பறப்பது எப்படி எனச் சொல்லிக் கொடுக்கப் போகின்றனவோ என்னவோ? எனக்கு ஏனோ திருப்தியாய்த் தோன்றிற்று. இந்தக் குருவிக் குஞ்சு தான் எவ்வளவு அதிஷ்டசாலி...? எனக்குள் நினைத்துக் கொண்டேன். வலது பக்க மூலையில் ஓவியத்தின் அடிப்பக்கத்தில் எழுதினேன்.

'என்றும் இனிய நிவேதிக்கு...'

பாட்டி கிட்ட வந்திருக்கிறா. நான் அவதானிக்கவில்லை. அவ இடக்கை நடுவிரலால் மூக்குக்கண்ணாடியைத் மேற்தள்ளி என் ஓவியத்தைப் பார்த்த பொழுதிலே நான் எச்சரிக்கை அடைந்திருக்க வேணும். "அவள்...அவளுக்குத்தான் கீறுறியளோ?" கரகரத்த குரல் காதடைய முன் என் ஓவியத்தைக் கையில் எடுத்துக் கசக்கிக்... கிழித்து... அசைவே இல்லாமல் அதிர்ந்து போயிருந்தேன். சிறு சலனம் கூட இல்லை. அப்பா ஏனோ கிட்ட வந்து கசங்கிய ஓவியத்தை விரித்துப் பார்த்தார்.

"அட...வெறும் பென்சில் படம் தானே. சரி. சரி. அவனை விடுங்கோ"

தலை குனிந்து கொண்டேன்.

என் விழிகளில் பொறி. ஆனால் காட்டிக் கொள்ளமாட்டேன். இந்த மௌனப் போர் நிச்சயம் உங்களைச் சாம்பலாக்கும். என்னையும் எரிக்கின்ற அதே தருணத்தில் உங்களுக்குப் பிடித்த எதுவும் இனி என் பாதைகளாக இருக்காது. வெண்தாள் எடுத்து வரையத் தொடங்கினேன். அதே படம். நிவேதிதாக்கேதான்... அவர்கள் அமைதிப்பட்டுப் போனார்கள். நானோ அப்போது தான்...

(யாவும் கற்பனை)

## விண்ணப்பம்



**யாழ்ப்பாணத்து நாட்டார் கதைகள்**

கந்தையா ஒரு சிறிய கமக்காரன். ஆயிரங்கன்று 'பொயிலை'யை பராமரித்து உலர்த்தி விற்று சீவியத்தை ஓட்டி வந்தார்.

போன வருஷம் அவர் காலியிலே கடை வைத்திருந்த ஒரு வியாபாரிக்குப் பொயிலைய்யை விற்றார். அச்சவாரம் கொடுத்து விட்டுப் பொயிலையைக் கொண்டு போன கடைக்காரர் கந்தையாவிற்கு எந்தவித பணமும் கொடுக்கவில்லை. கந்தையா மிகவும் துன்பப்பட்டார். செய்த தொழிலை விடக்கூடாது என்று எண்ணி இந்தவருடம் கடன்பட்டு பொயிலை நட்டார். பக்குவமாக உலர்த்தி வைத்தார்.

காலி வியாபாரி இந்த வருஷமும் கந்தையாவைத் தேடி வந்தார். அவர் பேச்சில் வல்லவர். இதமாகப் பேசுவார் இந்த முறையும் பொயிலையைத் தரும்படியும் தான் போனவுடன் இரண்டு காசையும் சேர்த்து தந்தியிலே அனுப்பி விடுவதாகவும் சொன்னார். அவரது பேச்சை நம்பி கந்தையா பொயில்லையை கொடுத்து விட்டார்.

பல மாதங்கள் போயும் காலி வியாபாரி காசு அனுப்பவில்லை. அந்த வியாபாரியைச் சந்திக்க கந்தையா காலிக்கு பயணமானார். கந்தையா காலி வியாபாரியின் கடையை அடைந்தார். கந்தையாவை கண்ட வியாபாரி ஒளித்துவிட்டார். எங்கு தேடியும் வியாபாரியைக் கந்தையாவால் காண[illegible]பாதிருந்தது.

களைத்துப் [illegible]ன கந்தையா கதிர்காமம் போய்க் கந்தனை கும்பிட எண்ணினார். தனது மேலாடைகளை கழற்றி வைத்து விட்டு மாணிக்க கங்கையில் நீராடினார். குளித்து விட்டு வந்து பார்த்த பொழுது அவரது ஆடைகளை காணவில்லை. யாரோ களவெடுத்து விட்டார்கள். ஆற்றங்கரையில் ஓர் அரை நிர்வாண பிச்சைக்காரர் இருந்தார். "ஐயா நீயும் காலியாவாரிக்கு பொயிலை வித்தவரா?" என்று கந்தையா கேட்டார்.

**தொகுப்பு: கலாநிதி சபா.ஜெயராசா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | வி சனி | | சூ |
| சந் | இராசிச்சக்கரம் | | ராகு புத |
| கே | | | வெ |
| | | செவ் | |

*மாற்றம்:-*

** 3.7.99இல் அவிட்டம் 4ஆம் பாதம் - கும்பம் இராசியில் நிற்கும்.*

** 6.7.99இல் வக்கிரம் புதன்- மிதுனம் இராசியில் மாறும்.*

*உலக நாடுகளின் தலையீட்டால் புதைகுழிப் பிரச்சினை விஸ்வரூபமாகும். தெற்கில் அரசியல்வாதிகள் பல கோணங்களில் பிரச்சினைகளை திசைமாற்றம் செய்வார்கள். வடக்கில் யுத்தமேகம் விட்டுவிட்டு முழங்கும். யுத்தத்தால் அழிவுகள் ஏற்படும். மக்கள், மாணவர்கள், தொழிலாளர்கள் மனம் குமுறுவர். இந்தியாவில் பிரதமர் வாஜ்பாய்க்கு ஆதரவு பெருகும். வடக்கில் யுத்த முழக்கம், தெற்கில் வோட்டு முழக்கம் பல மாற்றங்களை மக்கள் மத்தியில் கொடுக்கும். மேற்குலகில் மாற்றம் - சமரசப் பேச்சுக்கள் இடம் பெறும். மத்தியிலும் - கிழக்கு நாடுகளிலும் தன் ஆதிக்கத் தேவைகளை மேற்குநாடுகள் நிலை நிறுத்த முயற்சிக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.*

# இந்த வார இராசி பலன்

**03-07-1999 இலிருந்து 09-07-1999 வரை**

## ஜோதிட சஞ்சீவி

## மேடம்

ஆகாயத்திற்கும் பூமிக்கும் இடையில் மனிதர்கள் எத்தனை மனக்கோட்டை கட்டுகிறார்கள். படபடத்து கோபிப்பதனால் எந்தக்காரியத்தையும் நிதானமாகச் செய்ய முடியாது. உங்களுக்கு எதிர்ப்புக்கள் பலதிசைகளில் இருந்து வந்தாலும் தயங்காது முன்னேறியபடி இருப்பீர்கள். வசீகரப் பேச்சுக்கள், பிறருக்கு ஆலோசனைகள், உதவிகள் செய்தபடி இருப்பீர்கள். காணி பூமி, வாகனச் செலவுகள அதிகரிக்கும். வயிற்றுநோ, தோல் வருத்தம், கண் கூச்சம் என்பன வரலாம். ஏன் சகோதரங்களுடன் பிரச்சினைப் படுகிறீர்கள்? அமைதியாக இருப்பதனாலும், விலகி நடப்பதனாலும் பல பிரச்சினைகளில் சமாதானம் காண முடியலாம். கடல்துறை, போக்குவரத்துத்துறை, புடைவைத்துறை, செய்தி, ரீ.வி.துறை, நிர்வாகத்துறையினர்களுக்கு இலாபங்கள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, வெள்ளி.*

## இடபம்

சிறையில் இருக்கும் எல்லோரும் குற்றவாளிகள் அல்லர். வெளியில் நிற்கும் பலரும் நல்லவர்களும் இல்லை. கண்டபடி சிந்திப்பதனால் காரியங்கள் நடக்குமா? தொழில் ஸ்தானத்தில் பொருளால் ஏமாற்றங்கள் ஏற்படலாம். கூட இருப்பவர்கள் குதித்து விழுந்தாலும் பொறுமையாக இருங்கள். அயலவர்களின் புகைச்சல் ஏற்படலாம். போக்குவரத்தில் அவதானமாக இருந்து கொள்ளுங்கள். உழைப்பில் ஊக்கத்தைப் பொறுத்து உயர்வுகள், நன்மைகள் ஏற்படும். நெஞ்சுநோ, சலவருத்தம், கைகால் பிடிப்பு, வாய்வுத்தொல்லைகள் என்பன அடிக்கடி கொடுக்கும். புத்திரர் அல்லது சகோதரங்களால் நன்மை அடைவீர்கள். சட்டத்துறை, ஹோட்டல் வேலைகள், கோவில், மதத்துறை, கூலிவேலை செய்பவர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, வியாழன், வெள்ளி.*

## மிதுனம்

உடம்பில் வருத்தமென்றால் மருந்து எடுக்க வேண்டும். விபூதியால் மட்டும் வருத்தம் மாறுமா? மனச் சாந்திக்கு விபூதி வரப்பிரசாதம்தான். அதற்காக வருத்தத்திற்கு மருந்து குடிக்காமல் விடலாமா? அங்கும் இங்கும் அடிக்கடி அசைந்தபடி இருந்து தொழில் ஸ்தானத்தில் பல ஆக்கங்களைச் செய்வதுடன் மேலதிகாரிகளின் பாராட்டுக்களையும் உதவிகளையும் பெறுவீர்கள். கண்நோ, நெஞ்சு, வயிறு வருத்தங்கள், வாய்வுத் தொல்லை என்பன கொடுக்கும். மருந்துத்துறை, இரும்புத்துறை, சட்டத்துறை, குலத்தொழில்கள், விவசாயம், வாகனத்துறை என்பவற்றில் தொடர்புள்ளவர்கள் அதிக இலாபம் அடைவார்கள். இடமாற்றங்கள் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, வியாழன், வெள்ளி.*

## கடகம்

பலவீனமானவர்களையும், பெண்களையும், குழந்தைகளையும் வேதனைப்படுத்துபவர்கள் பாவிகளாவர். அவர்களுக்கு அவர்கள் பலவீனப் படும்பொழுது தண்டனைகள் கிடைக்கும். இவர்களுக்கு நிம்மதிவர நியாயமில்லை. தொழில்ஸ்தானத்தில் எதிர்ப்பாலாருடன் கருத்து வேற்றுமைகள் ஏற்பட இடம்உண்டு. குடும்பத்தினரிடையே கருத்துக்கலகம் ஏற்படும். வீடு, நிலம், வாகனம், சம்பந்தமான செலவுகள் அதிகரிக்கும். வாய்வுத் தொல்லை, கைகால்நோ, தலையிடி, உஷ்ண பீடைகள் அடிக்கடி ஏற்படலாம். வியாபாரத்துறை, குருத்தொழில், சமயத்துறை, நகைத்துறை, போக்குவரத்துத்துறையினருக்கு அதிக நன்மைகள் கொடுக்கும். தூரதேசச் செய்திகளால் நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, வெள்ளி.*

## சிங்கம்

வாழ்க்கையில உறுதியான செயல் திட்டம் உள்ளவர்கள்தான முன்னேறமுடியும் - அத்திவாரம் ஆழமாகவும், உறுதியாகவும் அமைப்பதிலிருந்துதான் ஒரு கட்டடத்தின் காலம், உறுதி ஆகியன அடங்கியுள்ளன. தொழில் ஸ்தானத்தில் நன்மைகள், வரவேற்புகள் கொடுக்கும். குடும்பத்தில் பிரிவு அல்லது வீண் பிரச்சினைகள் எதிர்ப்பாலாருடன் ஏற்படலாம். வாய்வு, நெஞ்சழுத்தம், உஷ்ணபீடைகள், வாதஉளைவு, கண்எரிவு என்பன ஏற்படலாம். நகைத்துறை,மருந்து, இரும்பு, ரீ.வி, சினிமா, பத்திரிகை, குருத்தொழில் செய்பவர்கள் அதிக நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, வெள்ளி.*

## கன்னி

பலவீனமான காலத்தில் பலர் பகைப்பர். சிலர் உதவுவார்கள். இக்காலத்தில்தான் நீங்கள் அவதானமாக இருந்து எந்தப்புற்றில் எந்தப் பாம்பு இருக்கின்றதென அறிந்து நடக்க வேண்டும். எல்லோரையும் எல்லோரும் பார்த்தும் கேட்டும்தான் இருக்கின்றார்கள். சிலர் சிலருடன் நேரடியாக மோதமுடியாவிட்டால், பெட்டிசங்கள் போட்டாவது ஆமி, பொலீஸிடம் அகப்படுத்தி நாலு அடிவாங்கிக் கொடுக்க முற்படுகின்றார்கள். இந்த மறைமுக செயற்பாட்டிற்கு இறைவன் நிச்சயம் தண்டனை கொடுப்பான் என்பதை மறவாதீர்கள். தொழில்ஸ்தானத்தில் பதற்றநிலை இருக்கும். நாரிநோ, வாய்வு, வயிறு, நெஞ்சு நோக்கள், சமியாக்குணம், நரம்புச் சோர்வு, உரசல் காயம் என்பன ஏற்படலாம். மனப்பயம் ஏற்படலாம். தோட்டம், விவசாயம், கூலிவேலை, மின்சாரத் துறை, எண்ணெய், புடைவை வியாபரிகள், குருபீடத்தவர்களுக்கு பலவித மாற்றங்கள் கொடுக்கும். ஆலயங்கள், பொது ஸ்தாபனங்களில் சிலர்சேவை செய்ய ஏன் போட்டி போடுகிறார்கள்? இலாபம் கருதியா? மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, வெள்ளி.*

## துலாம்

உலகத்தில் பலவிதமான மனோபாவம் கொண்டவர்கள் இருக்கின்றார்கள். எல்லோரையும் சமநோக்காக - சமநிலைப்படுத்தி எண்ணி வாழ வேண்டும். அதனால்தான் உங்கள் சமாதானப் போக்கு நிலை நிறுத்தப்படும். தொழில் ஸ்தானத்தில் பல புதிய பொறுப்புக்கள் வந்தபடி இருக்கும். அவற்றைப் பகிர்ந்து உடனுக்குடன் மற்றவர்களுக்குக் கொடுத்து விடுங்கள். கருத்தான உங்கள் ஆலோசனைகள் எதிர்ப்பாலாரைச் சிந்திக்க வைக்கும். களைப்பு, வயிற்றுக்கோளாறு, தலையிடி, வாய்வுத் தொல்லை என்பன கொடுக்கும். அதிகாரிகள் உதவுவார்கள். குடும்பத்தில் கலகலப்பாக இருப்பீர்கள். குருபீடம், நிர்வாகம், செய்தித்தொடர்பு, கடல் துறை, புடைவை வியாபாரம், போக்குவரத்துத்துறையினருக்கு நன்மையான பலன்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, வெள்ளி.*

## விருச்சிகம்

உங்கள் உறுதிநிலைக்கு சோத[illegible]னையான காலமாகும். மறைமுக எதிர்ப்புக்கள் வரலாம். கூட இருப்பவர்கள் பலவிதமான துன்பங்களை

கள், குறைகுற்றங்கள் காணும் நிலை உங்களுக்கு ஏற்பட இடம்உண்டு. அடிக்கடி மறதி, குடல்வருத்தங்கள், சளித்தொல்லை, வாதவிறைப்பு, நரம்புப்பலவீனம் என்பன கொடுக்க இடம் உண்டு. சிரித்து வாழ்வதனால் வேதனை அரைவாசி போய்விடும் என்பார்கள். அதுபோல பிறருக்கு உதவி செய்வதனால், அவர்களுடன் அளவளாவி வாழ்வதனால் இக்காலத்தில் உங்கள் துயரங்கள் ஓரளவு குறைந்து விடும் பலன்கள் நடக்கும். குடும்பச் செலவு அதிகரிக்கும். எதிர்ப்பாலாரின் எதிர்ப்புக்கள் வரலாம். கடல்துறை, வாகனத்துறை, அரசியல்துறை, குருத்தொழில், மருந்துத்துறையினருக்கு மாற்றங்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, ஞாயிறு.*

## தனுசு

பந்தபாசமொன்று வஞ்சகமாக நடப்பதை உதயத்தைப் பார்க்கும் ஆதித்தன் அவ்வப்பொழுது அறிவித்தபடி இருப்பான். தொழில்ஸ்தானத்தில் மேலதிகாரிகள் உதவுவார்கள் - நண்பர்கள் புறுபுறுப்பார்கள். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். உஷ்ணபீடைகள், வயிற்றுப்பொருமல், வாய்வுத் தொல்லை, நாரிநோ, உணர்ச்சிமேலிடுவதனால் துன்பங்கள் போன்றவை சிலருக்குக் கொடுக்கலாம். மயக்குவது, மயங்குவது எதனால் எனச் சிந்தித்துச் செயற்படுங்கள் தப்பிவிடுவீர்கள். விவசாயத் துறை, வாகனத்துறை, இரும்புத் துறை, மருந்துத்துறை, விளைச்சல் சம்பந்தமான துறையினர், குருத்துறையினருக்கு மாற்றங்களும், நன்மைகளும் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, வெள்ளி.*

## மகரம்

என்ன சோம்பலாக இருக்கிறீர்கள்? அதிக வேலைகளால் தொல்லையா? - 'ஓடுமீன் ஓடி உறுமீன் வரும்வரையும்' வாடி இருக்கின்றீர்களா? தொழில் ஸ்தானத்தில் பலரும் பகைப்பர். உங்கள் பொறுப்புக்களில் அவதானமாக இருங்கள். பொருளால் இழப்பு வரலாம். காணி, பூமி, வாகனச்செலவுகள் அதிகரிக்கும். வயிற்று வருத்தம், கைகால் உளைவு, மனக் குழப்பம், நரம்புத்தளர்ச்சி, வாத உளைவு என்பன கொடுக்கும். அதிக பொறுப்புக்களால் அடிக்கடி மன உளைச்சல் ஏற்படலாம். தொழிலில் பொருள் மங்கும் காலமாகும். வீடு, வாகனம் சம்பந்தமாக பொருள் செலவும் - குடும்பத்தில் வாக்குவாதங்களும் ஏற்பட இடம் உண்டு. சட்டம், அரசியல், குருத்துறை, போக்குவரத்துத்துறை, செய்தித்துறை, நகைத் துறை, ரீ.வி.த்துறையினர்களுக்கு அதிக மாற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, ஞாயிறு.*

## கும்பம்

அதிகதிட்டம்,அடிக்கடி யோசனை எதிர்ப்பாலாருடன் வாக்குக்கலகம் என காலம் கழியும். இழப்புக்கள் அல்லது பிரிவுகள் வேதனைகளைத் தர இடம்உண்டு. தொழில்ஸ்தானத்தில் வரவுக்குமீறிய பொருள் செலவுகள் கொடுக்கும். நாரிஉளைவு, பித்தக்கொதிப்பு, உஷ்ணபீடைகள், பலவீனம், அடிக்கடி கோபம், நரம்புநோ என்பன கொடுக்கலாம். ஆபரணத்துறை, உருக்குவேலை, பத்திரிகைத்துறை, செய்தித்துறை, மருந்துத்துறை என்பனவற்றில் தொடர்பானவர்களுக்கு மாற்றங்கள் ஏற்பட்டபடி இருக்கும். என்ன ஆராய்ச்சி செய்து கொண்டு இருக்கிறீர்கள்? அரசியலில் வாக்கு வாதம் வந்தால் கண்டபடி சிலரை நாலு வார்த்தையால் ஏசிவிட்டு பின் கலங்குவீர்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, ஞாயிறு, வியாழன்.*

## மீனம்

'கலகம் வந்தால் நியாயம் பிறக்கும் காரியம் ஆக வேண்டுமெனில் [illegible] எங்கும் ஓடித்திரிந்து [illegible] அறிந்து செயற்படவேண்டும். தொழில் ஸ்தானத்தில் குழப்பமான சூழ்நிலை சிலரின் தூண்டுதலால் உங்களுக்குத்தருவார்கள். தொழில்ஸ்தானத்தில் மாற்றங்கள் காட்டுகின்றன.விஷபீடைகள், கைகாலில் உரசல், அடிகாயங்கள், நெஞ்சுப்படபடப்பு, அடிவயிற்றுநோ என்பன வருத்தலாம். பாவமும், நேசமும், பந்தபாசமும் உங்கள் செயற்பாடுகளால் மாறி மாறித் தொடர்புபட்டபடி இருக்கும் காலமாகும். நிர்வாகம், நகை, பத்திரிகை, செய்தி, மதம், மருந்து போன்ற துறையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு நன்மைகள் ஏற்படும். மாறிவரும் உலகில் நாடி வரும் நன்மை, தீமைகளை உங்கள் சமநோக்கு - சமநிலைப் படுத்திவரும் கெட்டித்தனம் ஆகியவற்றால் சமாளிப்பீர்கள்.

*அதிர்ஷ்டநாள்:- வெள்ளி.*

## மகாதேவா ஜோதிடம்

# ஆசாரப்பயிருக்கு வித்து

கீழ்க்கணக்கு வரிசையில் நான்மணி நாற்பது, திரிகடுகம் முதலியன கூறும் நல்லறங்கள் சிலவற்றை அறிந்தோம். அத்தொடரில் ஆசாரக்கோவை கூறும் அறங்கள் சிலவற்றைக் காண்போம்.

ஆசாரம் என்றதும் நடைமுறைப் பழக்கவழக்கம, பண்பாடு முதலியன நினைவில் உதிக்கும். திருவள்ளுவர் பெருமான் ஆசாரம் என்னும் சொல்லைப்பயன்படுத்துகின்றார்(1075). ஆசாரம் – ஒழுக்கம் என்னும் பொருளில் வழங்குகின்றது. ஆசாரம் என்னும் சொல்லை வடசொல் எனக்கொண்டு, 'சர்' – போதல், நடை முதலிய பொருள்களைத் தரும் என்றும், 'ஆ' என்பது உபசர்க்கம் என்றும் மொழிவர். ஆசாரத்தைச் சீலம் என்றும் வழங்குவது உண்டு. சிவஞானசித்தியார், 'ஒழுக்கம்,அன்பு,அருள், ஆசாரம், உபசாரம், உறவு, சீலம், வழுக்கிலாத்தவம், தானங்கள், வந்தித்தல், வணங்கல்' முதலிய பதினாறினை அறம் என்று பேசும். (சித்தி.சுப.23)

**தேன்கூடு**

ஆசாரக்கோவை தமிழர் ஒழுக்கம், பழக்கவழக்கம் முதலியவற்றை அட்டவணையிட்டுக் காட்டுகின்றது. தமிழர் உண்ணல், உடுத்தல், உறங்கல், நீராடல் முதலிய பல்வேறு துறைகளில் உயரிய ஒழுகலாறைக் கடைப்பிடித்தனர். மக்கள் 'செயற்பாலன' இவை என்றும் 'செயற்பாலன அல்ல' இவையென்றும் அறிந்திருந்தனர். சுருங்கக் கூறின், விலக்கியன ஒழித்து விதித்தன செய்தனர்.

ஆசாரத்தைப் 'பெருவிருட்சம்' என்போம். அவ்விருட்சத்துக்கு உரிய மூலவித்து எது? என்ற வினா எழுகின்றது. ஆசாரக்கோவை ஆசிரியர் பெருவாயின் முள்ளியார், நன்றி அறிதல், பொறையுடைமை, இன்சொல், உயிர்க்கு இன்னாத செய்யாமை, கல்வி, ஒப்புரவறிதல், அறிவுடைமை, நல்லினத்தாரோடு நட்டல் ஆய எட்டினையும் ஆசார வித்து என்று கூறுகிறார். மணிமேகலை ஆசிரியரோ காமம், கொலை, களவு, பொய், கள் என் னும் ஐந்து பாவங்களை நீக்கி ஒழுகுதல் ஐவகைச் சீலம் என்கிறார். எட்டு, பத்து என்று விரித்துக் கூறுவதும் உண்டு. நன்றி அறிதல் முதலிய எட்டன் அடிப்படையில் எழுந்த ஆசாரமே இன்ப வாழ்வினை உதவவல்லது.

நன்றி அறிதல் என்பது பிறர் செய்த நன்றியை மறவாது ஒழுகுதலாகும். திருக்குறள் 'நன்றி மறப்பது நன்று அன்று' என்று தெருட்டுகின்றது. ஆலத்தூர் கிழார்

**சிந்திப்போம் செயற்படுவோம்**

என்னும் பழம்புலவர் 'ஆள் முலை அறுத்தல் முதலிய கொடும் பாதகங்களை இயற்றினார்க்கும் கூடக் கழுவாய் – தீர்திறம் – பிராயச்சித்தம் – உண்டாம். நன்றி கொன்றார்க்கு உய்தியில்லை' என்று குறளை ஆதாரம் காட்டிக் கூறுகின்றார்.

பொறையுடைமை – பொறுத்துக் கொள்ளுதலாகும். நிலம் தோண்டுவாரைப் பொறுக்கின்றது; தாங்கிக் கொள்ளுகின்றது. பொறுமையின் முதுநிலையில் எதையும் தாங்கும் இதயம் ஏற்பட்டும் விடுகிறது. வருத்தினும் அணைக்கினும் வருந்தாச் சமநிலை உதிக்கின்றது.

இன்சொல் இனிதீன்றலை அறிவோம். இன்சொலால் இருநீர்வியனுலகம் மகிழும். காயும் கனியும் உள்ள வழி யாரும் கனியையே பறிப்பர். இன்சொல்லை விளைநிலம் என்றுகூட நூல்கள் கூறும்.

இன்னா செய்யாமை, பிறர்க்குத் துன்பந்தருவனவற்றை செய்யாதிருத்தலாகும். வள்ளுவர்பெருமான் 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்ய வேண்டும்' என்கிறார்.

கல்வி உடைமையின் மேம்பாடு எல்லாரும் அறிந்ததே! புறநானூற்றுள் நெடுஞ்செழியன் கூறுகின்றான். ஒரு வயிற்றுப்பிறந்தோருள் கல்விவிசேடத்தால் தாயும் மனம் வேறுபடும். ஒரு குடியுள் பிறந்தோருள் மூத்தோனை நோக்குவதில்லை. அறிவுடையோனையே நோக்குவர். அரசுகூட அறிவுடையோன் வழியில் செல்லும். எனவே 'உற்றுழி உதவியும் உறுபொருள் தந்தும் பிற்றை நிலை முனியாது' கற்றல் நன்று என்கின்றனர். கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு.

ஒப்புரவறிதல் என்பது உலகநடையை அறிந்து நடத்தல். நாம் உலகத்தாரோடு ஒத்து ஒழுகுதல் வேண்டும்.

அறிவு இறுதிவராமல் காக்கும் கருவியாகும். அது பகைவரால் அழிக்க ஒண்ணாதது.

நல்லினத்தாரோடு நட்டல். முன்பும் அறிந்தோம் நற்பு சிரித்தற்கல்ல: மிகுதிக்கான் – தீயவழிக்கான் செல்லும் போது இடித்துரைத்தற்காம்.

இனிப்பாடலைப்படிப்போம்.

*"நன்றி அறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு*
*இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை, கல்வியோடு*
*ஒப்புரவாற்ற அறிதல் அறிவுடைமை*
*நல்லினத்தாரோடு நட்டல் இவை எட்டும்*
*சொல்லிய ஆசார வித்து"*

-ஆசாரக்கோவை

நல்லாற்றான் நாடி ஆசாரம் பேணி இன்புறுவோம்.


(தொடரும்)

*-சிகண்டியார்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ! கொடுமை நிறைந்த பெண்ணினமே!! கொடி அவளே! நீ கொடியவளே!!

ஏ ஆணினமே! அல்லி இராச்சியமா? ஏட்டிலே தானுண்டு, நாட்டிலே இல்லை என்று எண்ணி இறுமாந்து விடாதே. இயற்கையில் அல்லி இராச்சியங்கள் பலவுண்டு. ஏன் தேனீ, கறையான், எறும்பு, குளவி போன்ற பல சமூகங்களில் காணப்படுவது அல்லி இராச்சியம்தானே! அல்லியை ஓர் அருச்சுனன் அடக்கியதாக ஏட்டிலே படித்திருப்பீர்கள். ஆனால் நாட்டிலே காணும் (மேற்கூறிய சமூகங்கள்) அல்லிகளை அடக்கவோ அருச்சுனர்கள் இல்லை. பெண்ணினத்தில் கொடுமை மிகுந்தவர்களை இலக்கியத்திலே தேடி, ஒரு கூனி, ஒரு கைகேயி, ஒரு சூர்ப்பனகையைக் கண்டு பொறுக்கி எடுத்த உதாரணங்கள் என்று எண்ணி விட




அல்கா தாவரத்தைப் பற்றிய நிலையில் ஆண் கடற்குதிரை. பையிலும் வெளியிலும் குஞ்சுகளைக் கவனிக்குக.

வேண்டாம். இயற்கையென்னும் புத்தகத்தைப் புரட்டிப் பாருங்கள். (இது ஒரு திறந்த புத்தகம்) அங்கே பல கொடுமை நிறைந்த பெண்ணரசிகள் தட்டுப்படுவார்கள்.

நீங்கள் சாதாரணமாகக் கொடுக்கன்களைக் கண்டிருப்பீர்கள். எப்பொழுதாவது சோடியாகக் கண்டிருக்கிறீர்களா? அனேகமாகக் கண்டிருக்க மாட்டீர்கள்! காரணம் கொடுக்கன்கள் சந்தித்தவிடத்து ஒன்றையொன்று புசித்துவிடும். (கொடுக்கன்கள் தம் இனத்தையே உண்ணுமியல்புடையவை- CANIBALISTIC), அதிலும் உருவத்தில் பெரிய பெண்கள் ஆண்களை அடக்கி உண்டு மகிழும். இந்நிகழ்ச்சி புணர்ச்சிக்கு முன்னும் நிகழலாம். புணர்ந்த பின்னும் நிகழலாம். என்ன கொடுமை!

சிலந்தியின் விடயமும் இதே கதைதான். முட்டைகளைக் கருவூட்டம் பெறச்செய்யும் நல்நோக்குடன் ஆண் சிலந்தி பெண்ணை அணுகும். சாதாரணமாகவா? இல்லையே, மிகுந்த பயபக்தியுடன் அணுகும். பதற்றத்துடன் பெண்ணை அணுகும். ஆண் பயம் காரணமாகப் பலதடவைகள் ஓட்டம் பிடிக்கும். பின் ஒருவாறு மனத்தைரியப்படுத்திக் கொண்டு பெண்ணை அணுகி முட்டைகளை கருவூட்டுவதற்கு உதவும். அதேகையோடு பெண் ஆண் மேல்பாய்ந்து பிடித்துத் தனது வரனை விருந்தாக்கிக்கொள்ளும். (கல்யாண சமையல் சாதம்) ஆணின்றித் தனது இனமே அழிந்து விடும் என்ற அக்கறை சிறிதாவது இருந்தால்தானே? ஓ! கொடியவளே??



வாயில் விருத்தி செய்யும்(MOUTHBREEDER) ஏறியசு குஞ்சுகளைக் காக்குகின்றது.


முண்மீனினங்களில் புணர்ச்சி நிகழ்வதில்லை. இனவிருத்திக்காலங்களில் (BREEDING SEASONS) மீன்கள் இனரீதியாக ஒன்று கூடும். பெண்கள் முட்டைகளையிட, ஆண்கள் அவற்றின் மேல் விந்துகளைச் சொரிய, புறக்கருக்கட்டல் நிகழும். பின் பெற்றோருக்குரிய பாதுகாப்பு (PARENTAL CARE) பெரும்பாலும் இல்லை. அதனால் பெருமளவில் முட்டைகளும் குஞ்சுகளும் பிற விலங்குகளுக்கு இரையாகி அழிவதுண்டு. ஆயினும் ஆயிரக்கணக்கில் முட்டைகள் இடப்படுவதனால் சிலவாவது தப்பும்; இனம் அழியாமல் பாதுகாக்கப்படும். ஆயினும் சில மீனினங்களில் பெற்றோருக்குரிய பாதுகாப்பு உண்டு. இங்கு செவிலித் தாயாகத் தொழிற்படும் ஆண் மீனினங்களைக் கவனிப்போம்.

ஏறியசு(ARIUS)என்ற கடலில்வாழும் கெளிற்று மீனினத்தில் பெண்கள முட்டையிடும். ஆனால் முட்டைகளுக்குத் தகுந்த பாதுகாப்பு வேண்டுமே, குஞ்சுகள் பராமரிக்கப்படவேண்டுமே என்ற கவலை சிறிதுமின்றி அலைந்து திரியும் - இன்றைய நவநாகரிக நாரீமணிகள் போல. ஆண்மீன்களோ 'நாமாவது சிரத்தை எடுத்தாற்றான் உண்டு' என்ற எண்

## அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

ணத்துடன் முட்டைகளை தமது வாய்களுக்குள் அடக்கிக்கொள்ளும். சில இன மீன்களின் விடயத்தில் வாய்க்குள் சென்றது வயிற்றுக்குள் போய் விடும். முட்டைகள் அம்மீன்களின் முட்டைகளாக இருந்தாலும் அதேகதிதான். இவற்றில் அப்படியில்லை. முட்டைகள் வாய்க்குள் பொரித்துக் குஞ்சுகளும் சில நாள்களுக்கு அங்கேயே வாசம் செய்யும். பின் ஓரளவு வளர்ச்சியடைந்து தாமாக உணவு தேட விளையும்போது குஞ்சுகள் தம் தந்தையின் வாய்க்குழியைவிட்டு வெளியேறும். குஞ்சுகள் வாய்க் குழிக்குள் இருக்கும் வரைக்கும் ஆண் மீன்கள் உணவு கொள்ள முடியாது. அதனால் நலிந்து பலமிழந்து பல மீன்கள் எதிரிகளி

**-குகன்-**



டம் அகப்படுவதுண்டு; பல இறந்து விடுவதுண்டு. இது அவற்றின் தலைவிதி போலும்! (மீன்களுக்கும் தலையெழுத்துண்டா?) இங்ஙனம் இனவிருத்திக்குதவுவது வாயினவிருத்தி (MOUTH BREEDING) எனப்படும். திலாப்பியா (TILAPIA) என்ற ஜப்பான் மீனினங்களிலும் சிலவற்றில் இவ்வகையான விருத்தியுண்டு. பெண்கள் 'ஹாயா'கத் திரிய ஆண்கள் குடும்பச்சுமையை ஏற்க வேண்டும் போலும்.




பைப்பா அமெரிக்கானா என்ற தேரை இனத்தில் ஆண். முதுகில் காணப்படுவது முட்டைகள்.

கடற்குதிரை (SEA HORSE) என்ற மீனின் கதையும் இதுதான். ஆயினும் இயற்கை கொஞ்சம் தயவு காட்டி யிருக்கின்றது. இவைக்குச் சுமையிருந்தாலும் பசிக்கு உணவருந்த முடியும். இந்த வகை மீனினத்தில் பெண்கள் முட்டையிட ஆண்கள் அந்த முட்டைகளை தமது வயிற்றுப் புறமாகவுள்ள ஒரு பைக்குள் போட்டு வைத்துக்கொள்ளும். முட்டைகள் பொரித்து சிலகாலம் குஞ்சுகளும் அங்கே வாழ்ந்து பின் வெளியேறும். இவற்றின் பிஞ்சுகளுக்குத் தாய்ப்பாசமென்றால் இன்னதென்று தெரிந்திருக்குமா? இவற்றின் விடயத்தில் "தாய்ப்பாசம்" என்ற பதத்துக்குப் பொருளில்லை. கங்காரு போன்ற பையுள்ள பாலூட்டிகளுக்கு வளர்ப்புப் பையைக் கொடுத்துதவுவதற்கு பல மில்லியன் வருடங்களுக்கு முன்பாகவே இயற்கை பின்னை அதே உதவியை மீனி

னத்துக்குக் கொடுத்துதவிவிட்டாள்.

மருத்துவச்சித்தேரை (MIDWIFETOAD), பைப்பா அமெரிக்கானா (PIPA AMERICANA) என்ற தேரை ஆகிய இவையிரண்டிலும் பெண்கள் முட்டைகளை இட்டு விட்டுச் சுதந்திரமாகத்திரிய, ஆண்கள்தான் அம்முட்டைகளைக் காவித்திரியும். முட்டைகள் பொரிக்க வேண்டிய காலம் நெருங்கும் போது இவை நீரில் குதிக்கும். முட்டைகள் பொரிக்கும் போது தோன்றும் குடம்பிகள் (வாற்பேத்தைகள்) வெளியேறி மேலும் தந்தையருக்குப் பாரமாக இராது நீரில் சுதந்திரமாக வளரும். பைப்பா தேரையில், ஆண்கள் முட்டைகளை எடுத்துத் தனது முதுகில் வைத்துக் கொள்ளும். தோலில் குழிகள்



மருத்துவச்சித்தேரை (MIDWIFE TOAD). அதன் பின்னங்காலிடுக்கில் முட்டைகள். தோலில் தெரிவது பெரிதும் சிறிதுமாகக் கரணைகள்(WARTS)

ஏற்பட அக்குழிகளில் முட்டைகள் தங்கும். மேலும் தோள் மடிப்புக்கள் ஏற்பட்டு முட்டைகளுக்கு மேலதிக பாதுகாப்பைக் கொடுக்கும். மருத்துவச்சித் தேரைகளிலும் முட்டைகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொண்டு ஒரு திரளைத் தோற்றுவிக்கும். ஆண் தேரைகள் தமது பின்னங்கால்களின் இடுக்கில் முட்டைத் திரளைக் கொண்டு திரியும். முட்டைகள் உலராமல் இரு இனங்களுக்குமுரிய ஆண்கள், காலத்துக்காலம் நீர் நிலைகளையடைந்து முட்டைகளை நனைத்துக்கொள்ளும் முட்டைகளின் சளியப் போர்வை நீரையுறிஞ்சி அடக்கி வைத்துக் கொள்ளும். பொரிக்கும் காலம் வரும்போது ஆண்கள் நீர்நிலைகளை அடைந்து குஞ்சுகள் நீரையடைய உதவும்.

இப்படியே பலஉதாரணங்கள் தரலாம்.இவற்றையெல்லாம் கண்டு இந்தப் பெண்ணினங்கள் திருந்தப் போகின்றனவா? என்ன? அவற்றின் கொடுமைகள் குறையப் போகின்றனவா? இல்லையே! அல்லது இயற்கைதான் உணரப்போகின்றதா? அதுவும் நடவாத காரியமாச்சே. அதனால் இன்னும் ஓர் உதாரணத்துடன் விடயத்தை முடித்துக்கொள்வோம்; வயிற்றெரிச்சலைக் குறைத்துக் கொள்வோம்.

இந்த நுளம்பு இருக்கின்றதே அதன் இனங்களில் ஆண்கள் அப்பாவிகள். தாவரங்களிலிருந்து கொண்டு அவற்றின் சாற்றைப் பருகித் தாமுண்டு, தம்வேலையுண்டு என்றிருக்கும். ஆனால் நுளம்பு இனங்களின் பெண்கள்(நுளம்பி!) இருக்கின்றனவே அவை எமது குருதியைக் குடிப்பதோடல்லாமல் எமக்கு நோய்களையும் அல்லவா தந்துவிட்டுப் போகின்றன? வேண்டுமானால் குருதியைக் குடித்துவிட்டுப் போகட்டுமே! ஏன் இந்தப் பண்டமாற்று? இதனால் இரட்டிப்பு நஷ்டம் நமக்கல்லவா! அதிலும், எம்மினத்திலும் பெண்ணினத்தை விட்டுவிட்டு, ஆணினத்தையல்லவா அவை அதிகம் தாக்குகின்றன. இதிலும் ஓரவஞ்சனையா? இதற்கு விஞ்ஞானிகள் தரும் விளக்கமோ, மனிதனினதும் மற்றும் இளஞ்சூட்டுக் குருதி நிலையான விலங்குகளினதும் உடல் வெப்பம் தானாம் நுளம்புகளைக் கவருகின்றது. மனித இனத்தில் பெண்களைக் காட்டிலும் ஆண்களின் வெளி வெப்பம் (தோல் வெப்பம்) அதிகமாக இருப்பதனால் நுளம்புகள் (நுளம்பிகள்) அதிகம் கவரப்படுகின்றனவாம். என்ன விளக்கத்தைத் தந்தென்ன? வேதனையும் வயிற்றெரிச்சலும் ஆணினத்துக்குத்தானே! ஓ! கொடுமை நிறைந்த பெண்ணினமே!! மேலும், நுளம்புகள் வெள்ளையுடையணிந்தவர்களைக் காட்டிலும் கருமையான நிறவுடைகளை அணிந்தவர்களையே கூடுதலாகத்தாக்கும். வெள்ளை நிறத்திலுள்ள வெறுப்பல்லக் காரணம். கருமை நிறம் கருநிறத்தழகிகளாகிய நுளம்பிகளுக்குக் கவுமறைவிடத்தைக் கொடுக்கும். வெள்ளைத் தோலைக் காட்டிலும் கறுப்புத்தோல்களை நுளம்பிகள் அதிகமாக விரும்புமா? நுளம்புப் பெண்களைத்தான் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

எலி இரும்பைத்



ஒரு பட்டணத்தில் இ
மார்கள் இருந்தார்கள். இ
நாள் நண்பர்களாக இருந்
களில் ஒருவன் அயல்நாடு
யிருந்ததால், தன்னிடம் உ
துலாம் இரும்பையும், த
பாதுகாப்பாக வைத்துவிட்
டுக்கு போய்விட்டான்.
வெளிநாடு சென்றவன்
கேட்டபோது, 'இரும்பை
தின்று விட்டது' என்று
விட்டான். 'சரி, போனால் ே
சொல்லி விட்டு, மீண்டும்
போல் நண்பனாக இருந்
பிறகு ஒரு முறை அந்த
வீட்டில் ஒரு விருந்து ந
துக்கு அந்த வெளிநாடு
வணிகன், தன் நண்பனு
எண்ணெய் தேய்த்துக்கொ
பனுடைய பிள்ளைக்கும்
தேய்த்துவிட்டான். பிறகு அ
யையும் கூட்டிக்கொண்
குளிக்கச் சென்றான். குளித்
பிள்ளையை தகுந்த ஓரிட
வைத்து விட்டுத் தான் ம
வந்தான்.
வீட்டிற்கு திரும்பி வந்த
பார்த்து, அவனுடைய ந
பிள்ளை எங்கே?' என்று
'உன்பிள்ளையை பரு
கொண்டு போய்விட்டது' எ
கன். உடனே மற்றவணிகனு
வந்துவிட்டது. 'எங்கேயாவது
பருந்தெடுத்துப் போகுமா?'
டைக்கு வந்துவிட்டான். வ
முற்றி கைச்சண்டையாக
உடனே அங்கிருந்தவர்கள்
ஊர் வழக்காளர் முன்னே
சென்றார்கள்.
வழக்காளர் அந்த வணிச
'ஏனையா இது என்ன வே
கேயாவது பிள்ளையைப் ப
கொண்டு போகுமா?' என்ற
'ஐயா, ஆயிரம் துலாம்
அணுவும் மீதி வையாமல்,
தின்றிருக்கும் போது, பிள்ளை
தூக்கிப் போவது என்ன
என்று கேட்டான். 'இந்த
எங்கே நிகழ்ந்தது?' என்று
விசாரித்தார்.
உடனே அவன் முன்
களைக் கூறினான்.
'அப்படியானால், நீ செய்
என்று சொல்லி விட்டு, வழக்
வணிகனுடைய நண்பனை
'ஆயிரம் துலாம் இரும்பை
பிக் கொடுத்தால் அவன்
ளையைத் திருப்பிக் கொடுப்
தீர்ப்பளித்தார்.
'சரி'யென்று ஒப்புக்கொண்
திரும்பினார்கள்.
அந்த நண்பன் முன்
திருடி விற்றபோது விலை
தது. இப்போது விலை கூ
யால் அவன் பெரு நஷ்ட
வாசல் எல்லாவற்றையும் வி
துலாம் இரும்பையும் வாங்கி
வேண்டியிருந்தது. இதனா
ஏழையாகி விட்டான்.
வஞ்சகம் செய்பவர்கள் வ
கள்.

-பஞ்சதந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ் தின்றது!



இரண்டு செட்டி
இருவரும் நெடு
ந்தார்கள். அவர்
டு போகவேண்டி
உள்ள ஆயிரம்
ன் நண்பனிடம்
ிட்டு வெளிநாட்

ன் திரும்பி வந்து
பயெல்லாம் எலி
நண்பன் கூறி
போகிறது!' என்று
ும் அவன் முன்
ந்துவந்தான்.
த நண்பனுடைய
நடந்தது. விருந்
சென்று வந்த
யுடைய வீட்டில்
காண்டான். நண்
ும் எண்ணெய்
அந்தப் பிள்ளை
ன்டு குளத்திற்கு
சித்தபின், அந்தப்
டத்தில் ஒளித்து
மட்டும் திரும்பி

ந்து வணிகனைப்
நண்பன் 'என்
று கேட்டான்.
பருந்து தூக்கிக்
' என்றான் வணி
கனுக்குக் கோபம்
வது பிள்ளையை
ா?' என்று சண்
வாய்ச் சண்டை
யாகி விட்டது.
கள் இருவரையும்
னே அழைத்துச்

ணிகனைப்பார்த்து
வேடிக்கை? எங்
பருந்து தூக்கிக்
ன்று கேட்டார்.
ம் இரும்பில் ஓர்
ல், எலி கடித்துத்
ள்ளையை பருந்து
ன அதிசயம்?'
இந்த அதிசயம்
ன்று வழக்காளர்

றன் நடந்தவை

செய்தது சரிதான்!'
வழக்காளர் அந்த
னைப் பார்த்து,
பையும் நீ திருப்
வன் உன் பிள்
டுப்பான்' என்று


ரண்டு இருவரும்

ன் இரும்பைத்
ல குறைந்திருந்
கூடிவிட்டபடி
ஷ்டப்பட்டு வீடு
விற்று ஆயிரம்
ாங்கிக் கொடுக்க
தனால் அவன்

ன் வாழமாட்டார்

ஞ்சதந்திரக்கதை

# கட்டங்களை நிரப்புங்கள்




இந்தச் சங்கிலித் தொடர் கட்டங்களை நிரப்ப நீங்கள் சிரமப்பட வேண்டாம்.மேலிருந்து கீழ்வரிக்கான குறிப்புக்களை மட்டும் வைத்துக் கொண்டு உரிய சொற்களைக் கண்டுபிடித்து நீங்கள் நிரப்பினால் போதும். இடமிருந்து வலமாக சொற்கள் தாமாகப் பொருந்தி வருவதைக் காண்பீர்கள்! எல்லாமே மூன்றெழுத்துச் சொற்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

1. சிலப்பதிகாரப் பாத்திரம்.
2. அரிசியைத் தீட்ட வருவது.
3. தங்கும் இடம்.
4. செலுத்துபவன்.
5. சோறுடன் பிசைந்து சாப்பிடுவர்.
6. பூட்டான் தலைநகர்.
7. தினசரி மாறுவது.
8. ஒரு மான் இனம்.
9. மாறுபடுவது.
10. மிச்சம்.
11. பெண்கள் சேர்ந்து விளையாடும் விளையாட்டு.
12. எருதின் ஏரி.
13. ஆச்சரியமானது.
14. முற்றும் துறந்தவன்.
15. அஞ்சனம் பூசிய கண்.

(விடை XV ஆம் பக்கத்தில்)

# வெளியே வர உதவுங்கள்!



மேலேயுள்ள பெட்டியில் நடுப்பகுதியில் சிக்கியுள்ள பூனை வெளியேவர உதவுங்களேன் பிளீஸ்-----!

# மரங்கள் தரும் வரங்கள்

மரங்கள் பலதும் பார்த்திடுவோம்
மரங்கள் பயனும் அறிந்திடுவோம்
பூக்கள் எல்லாம் பெற்றிடுவோம்
பூமாலை செய்து பழகிடுவோம்


பழங்கள் பெற்றுச் சுவைத்திடுவோம்
பழரசம் நன்றாய்ச் செய்திடுவோம்
காய்கள் கறிக்குப் பறித்திடுவோம்
கிளைகள் எரிக்க எடுத்திடுவோம்

இலைகள் மருந்தாய் ஆய்ந்திடுவோம்
இருக்கும் வருத்தம் போக்கிடுவோம்
தண்டின் பலன்கள் கண்டிடுவோம்
தளபாடம் அழகாய் ஆக்கிடுவோம்

வித்தில் எண்ணெய் எடுத்திடுவோம்
விதைகள் நாட்டி வளர்த்திடுவோம்
நீரை ஊற்றி உரமிடுவோம்
நாட்டின் செழிப்பைக் காத்திடுவோம்

-மட்டுவிலூர் மு.வே.அன்பழகன்


# முடியுமா?



மேலேயுள்ள கோலத்தில் நான்கு வகையான குறியீடுகள் உள்ளன. ஒவ்வொரு வகையிலும் இவ்விரண்டு உள்ளன. ஒவ்வொரு சோடி யையும் இணைப்பதற்கு கோலத்தின் வழியே பாதைகளை ஏற்படுத்த வேண்டும். குறுக்கே பாயக்கூடாது. ஒரு பாதை மற்றைய பாதையை வெட்டக் கூடாது. ஒரு வீட்டில் இரண்டு முறை நுழையக்கூடாது. எங்கே முயற்சியுங்கள் பார்க் கலாம்.

(விடை XV ஆம் பக்கத்தில்)

# கண்டுபிடியுங்கள்!



மேலேயுள்ள படத்தில் குறைந்தது பத்து விளையாட்டுப் பொருள்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

(விடை XV ஆம் பக்கத்தில்)

# வீட்டுத் தோட்டம்

வீட்டின் முன்னே பூந்தோட்டம்
விரும்பிப் பார்த்திடக் கொண்டாட்டம்
நீட்டமாய் வளரும் செடிகொடிகள்
நிறம் பல கொண்ட மலர் வகைகள்!

பாட்டுப் பாடி வரும் வண்டு
பறந்தே செல்லும் தேனி உண்டு.
ஆட்டி மகிழ வரும் காற்றும்
அதன் மேல் பூக்கள் மணமேற்றும்!

நிலத்தைக் கொத்திப் பயிர் செய்தால்
நிறையப் பலமாம் உடலுக்கும்
பலனும் உண்டாம் வீட்டுக்கே!
பயனும் உண்டாம் நாட்டுக்கே!

ஜெ.ஜீவிதா
(தரம் 9, மானிப்பாய் மகளிர் கல்லூரி)




# வசந்த இன்பம்

வசந்த காலம் வந்தது
வாடைக் காற்று மறைந்தது
முதிர்ந்த இலைகள் வீழ்ந்தன
மொட்டுத் தளிர்கள் மலர்ந்தன.

மரத்தில் உள்ள இலைகளோ
மகிழ்ந்து காற்றில் ஆடுது
உரசிக் கொண்டு தென்றலும்
உடலைத் தொட்டுப் போகுது.

தேகம் குளிர இளநீரும்
சத்து நிறைந்த கனிகளும்
தாகம் தீர்க்க நீர்மோரும்
தெருவில் விற்பதைக் காணலாம்.

நுங்கு வாங்கிப் புசிக்கலாம்
கோடை வெயிலைத் தணிக்கலாம்
எங்கும் துள்ளி ஆடலாம்
இதயம் வாழ்ந்து மகிழலாம்.

கிருஸ்ணசாமி கஸ்தனி
(தரம் 6,மானிப்பாய் மகளிர் கல்லூரி)

# இரண்டு பெண்டாட்டிக்காரர்

அற்புத சாமி நல்லவராம்.
அவர்க்கு இரண்டு மனைவியராம்.
மூத்தவள் அவரைக் காட்டிலுமே
மூன்று வயது முதிர்ந்தவளாம்.
இளையவள் அவரது வயதைவிட
எட்டு வயது குறைந்தவளாம்.

* * *

ஒருநாள் இளையவள் அவர்தலையை
உற்றுப் பார்த்தனள்; பார்த்ததுமே,
"ஐயோ! தலைமயிர் நரைக்கிறதே!
அனைவரும் என்ன சொல்லிடுவர்?
'கிழவரை மணந்த குமரி' யெனக்
கேலி செய்வரே! என் செய்வேன்?"
என்றே அவளும் எண்ணினளே
இதற்கொரு வழியும் கண்டனளே.
தினமும் காலையில் அவர்தலையில்
தெரிந்திடும் நரைமயிர் சிலவற்றை
'வெடுக்கு வெடுக்' கெனப் பிடுங்கினளே.
வேதனையால் அவர் குதித்தனரே!

* * *

மூத்தவள் மட்டும் சளைத்தவளா?
மும்முரமாக எண்ணினளே

"எனது தலையில் பெரும்பகுதி
ஏற்கெனவே தான் நரைத்துளதே

என்றன் கணவரின் தலையுடனே
எனது தலையைப் பார்ப்பவர்கள்,

'வாலிப ரான கணவர்க்கு
வாய்த்தனள் நரைத்த கிழவி' யென

என்னைக் கேலி செய்திடுவர்.
இதற்கொரு வேலை செய்திடலாம்"

என்றே எண்ணினள். அதன்படியே
எழுந்ததும் தினமும் அவர்தலையில்

கறுப்பாய் உள்ள மயிர்களையே
கருத்துடன் அகற்றிட லாயினளே.

தலையில் ஒருமயிர் பிடுங்கிடினும்
தாங்கிட நம்மால் முடிகிறதோ?

எப்படி அற்புத சாமியுமே
இதனைப் பொறுத்தனர்? யானறியேன்!

தினம்தினம் மனைவியர் இருவருமே
சிலசில மயிர்களை அகற்றியதால்

குறைந்தன, குறைந்தன; வெகுவிரைவில்,
மறைந்தன தலைமயிர் யாவையுமே!

கத்திகள் எவையும் இல்லாமல்
கைத்திறம் ஒன்றே துணையாக

மொட்டை அடித்தனர் அவர்தலையை,
மூத்தவள் இளையவர் இருவருமே!

'சீப்பும் எண்ணெயும் இனிவேண்டா.
சிக்கன மாக வாழ்ந்திடலாம்.'

என்றே அற்புத சாமியுமே
எண்ணிடவில்லை, அச்சமயம்!

'இருவரை மணந்தேன். ஆதலினால்
என்றன் தலையும், ஐயையோ!

பாலை வனமாய்ப் போனதுவே!
பட்டது போதும்' என்றனரே!

-குழந்தைக்கவி

# விடுகதை

1. கூவி அழைத்திடுவேன்; சேவல் அல்ல. சேதி சொல்லிடுவேன்; செய்தித்தாள் அல்ல. பேசப் பயன்படுபவன்; ஒலிபெருக்கி அல்ல. எம்மொழியும் பேசிடுவேன்; கடவுள் அல்ல. நான் யார்?

2. குரல் கேட்கும்; வாயில்லை. மணி அடிக்கும்; நாக்கில்லை. அது என்ன?

3. குரலைக் காட்டும்; உருவை மறைக்கும்; அறுநூறு காதமும் அருகில் கேட்கும். அது என்ன?

4. எண்ணைச் சுற்றினால் எதுவும் பேசுவேன். தலையில் தட்டினால் அடங்கிப் போவேன். நான் யார்?

5. படுத்துக் கிடப்பான்; கணகணப்பான்; கையில் தூக்கினால் சேதிசொல்லுவான். அவன் யார்?

6. கூவிக்கூவி அழைப்பான்; குயிலல்ல. கையில் எடுத்தால் அடங்குவான்; சிசுவல்ல. அவன் யார்?

7. பத்துப் பல் முத்தழகி; பேச அழைக்கும் வடிவழகி; எத்தனை தொலைவு இருந்தாலும் எளிதில் பேசும் பேச்சழகி; அவள் யார்?

8. காதும் வாயும் உண்டாம்; கண்ணும் மூக்கும் கிடையாதாம். 'பெல்' உறவு உண்டாம். பேசிக் கேட்பது உண்டாம். அது என்ன?

9. அழைத்த போது வரமாட்டான்; அழைத்து அழைத்து வருத்துவான். கேட்கக் கேட்கக் கூறுவான். உலகம் முழுக்கப் பேசுவான். அவன் யார்?

10. அலறித் துடிப்பான். காதில் வைத்தால் ஆயிரம் கதை பேசுவான். அவன் யார்?

விடை:-

[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் எதுவரைக்கும்

-மு.சிவநேசன்-

5


இரண்டாம் உலகப் போரில் யூதர்கள எப்படிக் கொல்லப்பட்டார்கள எனத் தப்பிவந்தபோலந்து யூதன் Henryk Mandclbaum சொல்வதைக் கேட்டால் தலை விறைத்துவிடும்.



நாஸிகளினால் அடக்கி சிறைவைக்கப் பட்டு, சித்திரவதை செய்யப்பட்ட யூதர்கள் மீட்கப்பட்டு விடுவிக்கப்பட்டபோது எடுக்கப் பட்ட படம்.

ஏப்ரல் 1944. அப்போது அவனுக்கு வயது 21 இருக்கும். மக்கள் குடும்பம் குடும்பமாக, கும்பல்கும்பலாகக் கொல்லப்பட்டதை அவன் கண்டிருக்கிறான்.

எங்கே அழைத்துப் போகிறார்கள் எனத் தெரியாது. அவர்கள் வாகனங்



அணு குண்டினால் அழிந்த ஹிரோஷிமாவில் அந்த நாசகாரச் சம்பவத்தின் சின்னமாக எஞ்சிநிற்கும் கட்டடம் ஒன்று.

களில் ஏற்றப்பட்டு முகாம்களில் கொண்டுவந்து இறக்கப்பட்டார்கள். களைப்பு, பசி, தாகம் அவர்களை ஆட்கொண்டன.

வந்தவர்கள் வரிசையாக அறைக்குள் விடப்படுகிறார்கள். உள்ளே என்ன கிடைக்குமோ என வெளியே நிற்பவர்கள் தவித்திருப்பார்கள். ஹென்றிக்கும் அங்கே நின்றிருந்தான்.அவனது உதவி அவர்களுக்குத் தேவைப்பட்டதால் தப்பிவிட்டான். அவனுக்குப் பல கடமைகள் ஒதுக்கப்பட்டன.

வரிசையில் வந்தவர்கள் ஆடைகள் அனைத்தையும் களையும்படி கேட்கப்பட்டனர். நிர்வாணமாக அணைவரும அறைகளுக்குள் அடைக்கப்பட்டனர்.அறையை நச்சுவாயு நிரப்பவும அணைவரும் மூச்சடங்கிப போயினர்.

இக்கொடுமைகளைக் கண்ட ஹென்றிக் தப்ப நினைத்தான்; இயலவில்லை. இறுதியில் தனக்கும் இதேகதிதான என வுமபுரிந்து கொண்டான். முகாமைச் சுற்றி மின்சார வேலி அமைத்து இருந்தார்கள். உள்ளே வசதிகள் கிடையா.

வேலை கடுமையாகவும் அர்த்த மற்றதாகவும் இருந்தது. இறந்த உடல்களில் மயிரை வழிப்பது, பற்களைப் பிடுங்குவது போன்ற வேலைகள ஒதுக்கப்பட்டன. நாள் முழுவதும் பிரேதங்களை எரிக்கும் வேலைகளை இவன் செய்யவேண்டியிருந்தது.

வாழ்க்கை வெறுத்து இருந்த வேளையில்தான் அந்தச் சேதி காதில் இனித்தது. ரஷ்யத் துருப்புக்களால் ஜேர்மனி பின்வாங்கச் செய்யப்படுவதாகவும் - யுத்த எல்லை தங்களை நோக்கி பின்வாங்கி வருவதாகவும் பேச்சு அடிபட்டது.

எல்லை முகாமை தொட்டுவிட்டால் தப்பிவிடலாம். அதுவரை உடலில் உயிர் ஒட்டிக்கொண்டு இருக்க வேண்டுமே?

இவன் தனது முகாம் சீருடைக்குள் - பொறுக்கிவைத்த சிவில் உடுப்புக்களைப் போட்டுத் தயாராகி விட்டான். சமயம் வரும்போது தப்பிக்க வேண்டும்.

அனைவரும் முகாமைவிட்டு வெளியேறும்படி உத்தரவுகள் பிறந்தன. வாயிலை நெருங்க நெருங்க இவன் சீருடைக்குள் இருந்து சிவில் உடைக்கு வெளிப்பட்டான்.

இவ்வாறு பல முகாம்கள் ஆங்காங்கே விடுவிக்கப்பட்டன. முள்கம்பி வேலிகளுக்குள அடைக்கப்பட்ட பிள்ளைகள் செய்வதறியாது திகைத்துப் போய் இருந்தார்கள்.

1945 மே மாதம் நடைபெற்ற டச்சு முகாம் மீட்புப்பணி பற்றி (Curtis Whiteway) என்பவன் சொன்ன தகவல்கள் தாங்க இயலாதவை.

அவலக் குரல்களைக் கேட்டு தாம் முகாமொன்றை கண்டு பிடித்ததாக அவன் சொல்லியிருந்தான். அங்கே பலரும் தலை கீழாகவும் - அகப்பட்ட அங்கங்களில் கட்டப்பட்டும் தொங்கிக் கொண்டிருந்த கொடுமை சொல்லிமாளாது.

இசைக்கருவி நரம்புகள் (Piano wire) கோர்த்துத் தைத்த அங்கங்கள் - வலிதாங்காமல் மரணத்தையும் எட்ட இயலாமல் தவிக்கும் மனிதர்கள் - பட்டினி - தாகம் எனப் பல சொல்லில் அடங்கா நிலமைகள்.

அனைவரும் மூன்று, நான்கு பேராகப் பிணைக்கப்பட்டு அசைவற்றுக் கிடந்தனர். அவர்களுக்கு விடுதலை கிடைக்கிறது என்ற சேதியைசசொல்ல முடியுமே தவிர மருந்தோ இதர நிவாரணங்களோ உடனடியாக வழங்கக் கிடைக்கவில்லை. உடல்களை - கை காலை அசைக்கக்கூட அவர்களால் இயலவில்லை.

யுத்தம் இன்னும் தொடர்ந்திருந்தால் - ஹிட்லரின் பிடி ஓங்கியிருந்தால் - இன்னும் என்னவெல்லாம் நடந்தேறி இருக்குமோ?

ஹிட்லர் சுமார் அறுபது லட்சம் வரையான யூதர்களைக் கொன்று குவித்திருந்தான். மிருகங்களைப் பட்டிகளில் அடைப்பது போல ஏதுமறியா அப்பாவி யூதக் குழந்தைகளை முட்கம்பிவேலி அடைப்புக்குள் தள்ளி விட்டான். இந்த அட்டூழியங்களுக்கும் தனக்கும் தொடர்பில்லை என்றுகூட அவன் மறுத்திருந்தான்.

1945ஏப்ரலில் ஜேர்மனியின் வீழ்ச்சி கண்ட ஹிட்லர் வேறு வழியின்றித தன்னைத்தானே சுட்டுக் கொண்டான். அந்த ஏப்ரல்30, 1945இல் ஹிட்லர் தொலைந்த பின்பும் யுத்தமோ தணியவில்லை.

யாரையவது தலையடி கொடுக்க வேண்டும். உலகினை அதிரவைக்க வேண்டும். இன்றேல் யுத்தமும் அழிவுகளும் எல்லையின்றித் தொடரவே செய்யும் என்றே அமெரிக்கா நினைத்திருக்க வேண்டும். இன்னும் மில்லியன் கணக்கில் உயிரிழப்புக்களை பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

இதுவரை கேள்விப்பட்டிராத அணு குண்டுகளைத் தாங்கியபடி அமெரிக்க விமானங்கள் ஜப்பான் வான்பரப்பில் புகுந்தன. அன்று 1945 ஆகஸ்ட் 6ஆம் திகதி.

ஜப்பானின் ஹிரோஷிமா மற்றும் நாகஸாகி நகரங்கள் மீது அணு குண்டுகள் வீசப்பட்டன. காளான்குடை போல் விரியும் புகை மண்டலம் - மின்னல் தாக்கியது போன்ற அதிர்ச்சி - அழிவுகள் சொல்லிமாளா. கணப் பொழுதில் நகரங்கள் நரகங்களாக மாறின.

இத்தகைய தாக்குதல்களுக்கு இனியும் தாக்குப்பிடிக்க இயலாது என்று உணர்ந்து கொண்டது ஜப்பான். இதற்கு இதேபோன்ற பதிலடியை உடனடியாகக் கொடுக்கவும் இயலாது. எனவே ஜப்பான் அடிபணிந்தது. யுத்தமும் ஓய்வுக்கு வந்தது.ஆனால் அணு குண்டு வீசிய தாக்கமோ இன்னும் மறக்க முடியாதது ஆகிவிட்டது. இழப்புக்கள் ஈடுசெய்ய இயலாதவை.

அப்போதெல்லாம் விமானக்குண்டு வீச்சுக்கு அஞ்சி மக்கள் பதுங்கு குழிகளில் காலங்கழித்தனர். அன்றுகாலை எட்டு மணி இருக்கும்.

காலைச் சாப்பாட்டுவேளை. அன்றைய அவசர அலுவல்களைக் கவனிக்கவும், குழந்தைகளுக்கு உணவூட்டவும் பல்வேறு அலுவல்களுக்காகவும் மக்கள் மறைவிடங்களிலிருந்து விடுபட்டுச் சுறுசுறுப்படைகிறார்கள்.

நேரம் 8.15யை எட்டவும் ஹிரோஷிமா வான்பரப்பில் விமானங்கள தென்பட்டன. நடந்தது என்ன என்பது விளங்க முன்னரே சுமார் எண்பதாயிரம் பேர் பொசுங்கிப் போயினர். எங்கும் இடிபாடுகள்; சிதைவுகள்.

கணப்பொழுதில் தாக்கிய உஷ்ணக்காற்று, புகைமண்டலம், கதிர் வீச்சு, அதிர்ச்சி எல்லாம் தப்பியோரைக் கலங்கடித்தன. புகைமண்டலம கலைந்து சூரியஒளி ஊடுருவச் சற்று நேரம் பிடித்தது.


கண்ட காட்சி காண்பவரைக்கலங்கடித்தது. எங்கும் சேறும் சகதியும் இரத்தமும்! தவிடு பொடியாகி விட்ட கட்டடங்கள்; கருகிய உடல்கள்; கிழிந்து தொங்கும் அங்கங்கள்;உரிந்த தோலுடன் இரத்தம் சிந்த ஓடி வரும் மனிதர்கள்.

பெரும் எண்ணிக்கையில் கடுமையாகக் காயமடைந்த மனிதர்கள். கருகிய பிணங்கள் சூழவே தப்பியோர் வாழவேண்டிய நிர்ப்பந்தம் சில நாள்களுக்கு நீடித்தது. எங்கும் எதிலும் பீதி! பேய் நகரமாக மாறிவிட்டது ஹிரோஷிமா!

தப்பிவிட்டவர்கள் கூட உருப்படியாக வாழமுடியவில்லை. மயிர் உதிர்தல், மூக்கில் இருந்து இரத்தம் வடிதல், பார்வைக்குறைபாடுகள் போன்ற பல தொல்லைகளுக்கு அவர்கள் ஆளானார்கள். கணப்பொழுதில் நிகழ்ந்த அனர்த்தம் ஆயுள்காலம் முழுவதும்பலரையும தவிக்கவைத்தது.

55 ஆண்டுகள் கழியும் இன்றைய நிலையிலும் தமதுசுகவாழ்வை இழந்து தாக்கங்களினின்றும் விடுபட முடியாமல் தவிக்கும் ஒரு சமுதாயம் அங்கே வாழப் போராடிக்கொண்டிருக்கிறது.

அணுகுண்டு வீச்சும் தொடர்ந்து உக்கிரமான விமானத் தாக்குதல்களும் ஜப்பானைத் திக்குமுக்காட வைத்தன. அடிபணிதலைத் தவிர வேறுவழி ஜப்பானுக்கு இருக்கவில்லை. ஜப்பான் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதும் யுத்தம் முடிவுக்கு வந்தது.



பேரழிவிற்கு வித்திட்ட சர்வாதிகாரி ஹிட்லர் தனது ஜெனரல்களுடன்.

அன்று செப்ரெம்பர் 2ஆம் நாள் - 1945. ஜப்பானின் டோக்கியோவை அண்டிய பிரதேசம் எங்கும் அமெரிக்க விமானத் தாக்குதலின் சிதைவுகள். துறைமுகப் பகுதியெங்கும் சிதைந்து அமிழ்ந்த கப்பல்கள் என எங்கும் போரின் பரிசுகள்.

'USS. MISSOURI' என்ற கப்பலில் வைத்து அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுகிறது. அமெரிக்க மற்றும் நேச நாடுகளின் தளபதிகள் - முக்கிய புள்ளிகள - கடலிலே ஜப்பானை நெருங்கி - கப்பலில் காத்திருக்கிறார்கள்.

இத்தருணம் - இறுதி நேரத்தில் ஜப்பான் அதிரடியாக பதிலடி கொடுக்கலாம் எனப் பலரும் பேசிக்கொண்டார்கள். ஆனால் எதிர்பார்த்தது நடக்கவில்லை. (தொடரும்)

# 20ஆம் நூற்றாண்டில் உலக இலக்கியம்

சில குறிப்புகள்



றிச்சாட் றைற்

8

அமெரிக்க இலக்கியத்துள் முற்று முழுதான தனித்துவங்கொண்ட இன்னோர் பிரிவுமுண்டு. அது தான் கறுப்பு - அமெரிக்க இலக்கியம். தேசியரீதியில் 'அமெரிக்க இலக்கியம்'என்ற பெயரில் அடங்கினாலும் - ஆங்கிலத்திலேயே அதுவும் எழுதப்பட்டாலும்-பண்பியல் ரீதியாகப பார்க்கையில் அது, 'எதிர்ப்பு இலக்கியம்' அல்லது 'விடுதலைக்கான இலக்கியம்' என்னும் வகையில் அடங்குவது. நிறவெறிக்கும் இன ஒடுக்குமுறைக்கும் எதிரான அந்தத் தளைகளை உடைக்கும் - போராட்டத்தில் ஓர் ஆயுதமாக எழுந்தது இந்தக் கறுப்பு - அமெரிக்க - இலக்கியம். அதுமட்டுமன்றி, கறுப்பின மக்களின் அடையாளத்தையும் வேர்களையும் அவாவி நிற்கும் போக்கும் அதில் பிரதிபலிக்கிறது. இங்கக கறுப்பு- அமெரிக்க இலக்கியத்தற்குத் தனியான வரலாறுண்டு. ஆபிரிக்கத்துவத்தின் தொடர்ச்சியாய், அந்தச்சாடை வலுவாய்ப் படிந்து தெரிகிற பாடல்கள், கவிதைகளிலிருந்து இது தொடங்குகிறது.

இந்த நூற்றாண்டின் கறுப்பு - அமெரிக்க எழுத்தாளர்களில் முதலிற் குறிப்பிடப்பட வேண்டியவர் றிச்சாட் றைற். வெள்ளைநிறவெறிக்கும், ஒடுக்குமுறைக்கும் ஆளாகிய மனிதர்களின் துன்பதுயரங்களூடாக அவர்களை ஒடுக்கிய அவ்வுலகின யதார்த்தை றைற எழுதினார். அவருடைய 'மண்ணின் மகன்' என்கின்ற நாவல், றைற் ஒருமாபெரும் படைப்பாளி என்பதை நிருபித்த ஒன்று. இந்நூற்றாண்டின் செம்மை இலக்கியங்களில் ஒன்றாகக் கொள்ளப்படுவது அது. சமூகத்தால் தம்மீது திணிக்கப்பட்ட அடையாளத்தை உடைப்பதற்கு வன்முறை ஒன்றே வழி என்பதை அந் நாவல் தெளிவாகக்கூறிற்று. மேலோட்டமாகப் பார்த்தால் விறுவிறுப்பான ஒரு துப்பறியும் நாவல் போலப்படுகிற 'மண்ணின் மகன்' அடிப்படையில், தன்னை அடக்கி ஒடுக்க முனைகிற சமூகத்திற்கெதிராகக் கிளர்ந்தெழுகின்ற ஒரு தனிமனிதனைப் பற்றியது.

றைற்றின் எழுத்துக்களில், இந்த நாவலுடன், 'ரொம் மாமனின் பிள்ளைகள்' என்ற கதைத் தொகுப்பு, 'கறுப்புப் பையன்' என்ற தலைப்பிலான அவருடைய சுயசரிதை ஆகியவையும் பெரு வரவேற்பைப் பெற்றவையாகக் குறிப்பிடப்படுகின்றன. 'நிலத்தின் கீழ் வாழ்ந்த மனிதன்' என்ற அவருடைய மகத்தான சிறுகதை, தன்னைத் துரத்துபவர்களுக்குத் தப்பிநிலத்தடியில் ஓடுகிற பெருங்கழிவுநீர்க் குழாய்க்குள் ஒளிந்து கொள்கிற ஒரு மனிதனைப் பற்றியது. கதைக்கப்பால் - வேறொரு தளத்தில் கறுப்பு மனிதனுக்கும் அமெரிக்க சமூகத்திற்கும் இடையிலான உறவை இக்கதை கூறுவதாகவும் கொள்ளமுடிகிறது.

அமெரிக்க கொம்யூனிஸ்ற் கட்சியின் உறுப்பினராய் இருந்த றைற் இரண்டாம் உலகப் பெரும் போரின் பிறகு கட்சியின் வரட்டுத்தனமான வியாக்கியானங்கள் என்று கூறப்பட்டவற்றால் சலிப்புற்று பொதுவுடமை வாதத்தைவிட்டு, பிரான்ஸுக்குச சென்று, சார்த்தரால் வழிநடத்தப்பட்டு கொண்டிருந்த இருப்பியல்வாத வட்டத்தில் இணைந்து கொண்டார். எனினும் அமெரிக்காவிலிருந்த தன் சோதரர்களுடனான ஒருமைப்பாட்டை விடாது பேணி வந்தார்.

**சாந்தன்**

றைற்றைத் தொடர்ந்து நினைவுக்கு வருபவர் ஜேம்ஸ் பால்ட்வின். இனவெறியின் முன் அமெரிக்கக் கறுப்பின மக்கள் உணரும் கோபத்தையும் இயலாமையையும் அவர் தமது கதைகள் மூலம் எடுத்துக்காட்டினார்.

இந்த எழுத்தாளர்களின் அடுத்த தலைமுறையைச் சேர்ந்தவர், நாற்பதுகளில் பிறந்த ஜேம்ஸ் அலன் மக்ஃ. பெர்ஸன். அவருடைய கதைகளும் கறுப்பின மக்கள் வெவ்வேறு விதங்களில் வெள்ளையரை எதிர்கொள்ளும் நிலமைகளைத்தான் படம்பிடிக்கின்றன என்றாலும், றைற்றின் ஆக்கங்கள் போல பேரதிர்வுகளை உண்டாக்காது ஊசிபோல உணர்வில் உறுத்துவன அவை. மக்ஃ.பெர்ஸன் எழுதிய 'ரயில்களில்' சிறுகதை இதற்கு நல்ல எடுத்துக்காட்டாக அமைகிறது. ரயில் பெட்டி சேவகன் கறுப்பனென்பதால், அவன் அந்தப் பெட்டியில் தம்முடன் இருப்பதையே கூட மூர்த்தண்யமாக ஆட்சேபிக்கும் ஒரு வெள்ளை இனப் பெண்ணின் வெறிபற்றிய கதை அது.

நாடகம், நாவல், சிறுகதை,பாடல், வாழ்க்கைச்சரிதை என்றெல்லாம் எழுதிய போதும் - பத்திரிகை ஆசிரியராக, பத்திஎழுத்தாளராக, மொழி பெயர்ப்பாளராக எல்லாம் செயற்பட்ட போதும் - 'கவிஞர்' என்றே முதன்மை அடையாளம் கொள்கிற ஒருவர் லாங்ஸ்ரன் ஹ்யூக்ஸ். 'நிக்ரோக் கலைஞனும் இனவாதமெனும் மலையும்' என்ற தலைப்பில் ஹ்யூக்ஸ் பிர[illegible]த கட்டுரையானது, அவரதும் அ[illegible] சகாக்களதும் இலக்கியக் கொ[illegible] பிரகடனமாய் அமைந்ததுடன், அமெரிக்கக் கறுப்பு இலக்கியத்தில் புது முனைப் பொன்றின் வரவையும் அறிவித்தது.

**கனவுகள்**

"இறுகப் பற்றிக் கொள்,
கனவுகளை.
இறக்குமெனில் அவை
இறக்கையில்லாப் பறவையென
ஆகுமே வாழ்வு!
பற்றிக்கொள் கனவுகளை.
அவை கலைந்தால்,
வெண்பனி மூடிய
வெறும் வயல்போல
ஆகுமே வாழ்வு!"

- தளைகளை அறுக்கத் திடங்கொண்ட கவிஞனின் 'கனவுகள்'எனும் போது, ஹ்யூக்ஸ் காட்டும் அர்த்தங்கள் ஆயிரம்.

இந்த நூற்றாண்டுக் கறுப்பின அமெரிக்க ஆக்க இலக்கியவாதிகள் வரிசையில் தவிர்க்க முடியாத ஒருவர் அலெக்ஸ் ஹேலி. அவர் எழுதிய, உலகப் புகழ்பெற்ற 'வேர்கள்', புனைகதையன்று; ஏழு தலைமுறைகளுக்கு முன் எவ்வாறு தன் முன்னோன் ஒருவன் ஆபிரிக்காவின் காம்பியா நாட்டிலிருந்து அடிமையாகப் பிடிக்கப்பட்டு வந்து அமெரிக்காவில் விற்கப்பட்டான் என்பதையும், அவன் சந்ததிகள் என்னென்ன இடர்தாண்டி எவ்வாறு அம் மண்ணில் விழுதுபரப்பி விரிந்தார்கள் என்பதையும், ஆதார பூர்வமாகப் படம் பிடித்துக்காட்ட முயலும் உண்மைக் காவியம் - ஸாகா - இது. தேடல்களை மேற்கொள்ளவும் அவற்றினடியாய்த் தகவல்களைத் திரட்டவும் பன்னிரண்டு ஆண்டுகளை ஆய்வில் செலவிட்டார் ஹேலி. மனிதனையே விற்பனைப் பண்டமாக்கிய அடிமை வர்த்தகத்தின் கொடூரம், அதைத்தொடர்ந்து அடிமை அமைப்பைப் பேண முயன்ற ஒரு புது உலகின் நாகரிகம்- இவற்றை மீறி மேலெழுந்த மானுட முனைப்பு - இவையாவற்றையும், 'வேர்கள்' எம்மைத் தரிசிக்க வைக்கிறது.

அமெரிக்கக் கறுப்பின மக்களுக்குத் தமது வேர்கள் பற்றிய பெருமையையும் பிரக்ஞையையும் ஏற்படுத்தியதன் மூலம் அவர் சாதனை ஒன்றையும் ஈட்டினார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்று உரைத்த பொய்! இன்று உறைக்கும் மெய்!!

அன்றெங்கள் அடிவளவிற் கப்பாலே அவலங்கள்
என்றுமில் லாதவாறு எழுந்ததனால் சென்றேன்நான்
மென்றுஆடு முடித்ததொரு பொந்தினூடு மெல்லநானும்
நின்றுஎட்டிப் பார்த்தேனே! நிகழ்ந்தவைகள் இவைதானே!!

பின்வீட்டுப் பசுபதியின் பெண்வைத்த பூங்கன்றை
சின்னானின் பசுங்கன்று சேதமாக்கிப் போனதுவாம்!
என்னென்று பகர்ந்திடுவேன்? இரவினிலே பசுபதியும்
விண்ணென்று அக்கன்றை வெட்டியெங்கோ புதைத்தானாம்!

புதைக்கையிலே நான்கண்டேன், புதைகுழியைக் காட்டிடுவேன்
விதைத்திட்ட கூலிதனை வேண்டுகையில் கண்டிட்டேன்!
பதைபதைத்துப் பசுபதியின் பலகாலச் சேவகனும்
கதைத்ததனால் தானின்று குழிதோண்டத் தொடங்கினராம்!

பலகாலம் சின்னானும் பஞ்சாயத் திடம்சொல்லி
பலனெதுவும் இல்லாதென் பாவமிது என்றிருந்தான் - அட
ஊர்த்தலைவர் தேர்தலது ஊர்ந்துமிக நெருங்கியதால்
ஆர்த்தெழுந்த பஞ்சாயம் அடிவளவைத் தோண்டியது!

தொந்தியுடன் பஞ்சாயத் தின்தலைவர் பக்கத்தில்
வந்திருந்த விதானையுடன் வாத்தியாரும் வந்திருந்தார்!
மந்திரங்கள் ஓதவந்த மாயாண்டி யுடன்ஊரின்
தந்திரங்கள் நன்கறிந்த தவத்தாரும் நின்றிருந்தார்!

மண்வெட்டி கடப்பாரை மாபெரிய கருவியுடன்
கிண்டியவர் தொடங்குகையில் கிடைத்ததடா மணியொன்று!
'கண்டேனே! என்கன்றின் கழுத்துமணி இதுவேதான்
பெண்டாட்டி தானிதனைப் பூட்டினாளே' யென்பதனை

அன்றுரைத்தான் சின்னானும் எழுந்துவிட்டான் மாயாண்டி!
'கன்றிறந்த இடமிதுதான், காரியங்கள் நிற்கட்டும்
சென்றுசில நாட்கழித்து சோதனையைத் தொடருங்கள்
இன்றுநீரும் இங்கிருந்து இத்துடனே அகலுங்கள்!'

எனவுரைத்து அவன்செல்ல எழுந்தாரே தலைவருடன்
வினைக்கெட்டு வந்திருந்த விதானையுடன் தவத்தாரும்
கிடக்கட்டும் இன்னுமொரு கிழமையிரண்டு போகட்டும்
எனச்சென்றார் சின்னானோ என்விதிதான் என்றழுதான்!

இக்கதையை நான்நேரில் கண்டதென நினைத்தீரோ?
எக்கதையும் இல்லாமல் எல்லாமே முடிந்ததனால்
அக்காலம் என்தாத்தா அவிழ்த்துவிட்ட பொய்யிதனை
இக்கால உண்மையுடன் இணைத்திடுவீர்: மெய்யுணர்வீர்!

- க.தேவா -

# தலையினைத் தூக்கடா தமிழா!

எரிகின்ற எம்தேசக் காற்றிற்கு இனியென்றும்
இன்னிசை இராகம் வேண்டாம் ~ தமிழ்
தறிகெட்ட மொழியான நிலைமாறும் வரையெங்கள்
தண்ணீரும் சுவைக்க வேண்டாம்!

வெறிகொண்ட பலர்வந்து விளைவித்த துன்பங்கள்
வேகியே போக வேண்டும் ~ நாம்
கறைபட்டு நிற்கின்ற காலங்கள் மலையேறி
ககனமே வாழ்த்த வேண்டும்!

கடலென்ன தரையென்ன கலமென்ன படையென்ன
கம்பீரம் போன தெங்கே? ~ இன்று
கடனாகிக் கைதாகிக் கடிபட்டு நிற்கின்ற
காரணம் என்ன இங்கே?

வெளிநாடு போயென்ன வெட்டியா வீழ்த்துவீர்?
விழலடா! அங்கு உம்மை ~ வீட்டு
விளையாட்டு நாயெனவே வீசுவார் பிச்சைகள்
விரைந்துமே பொறுக்கி வாரும்!

தமிழிற்குத் தாயவள் தரணிக்குத் தாயெனும்
தத்துவம் நிலைக்க வேண்டும் ~ அவள்
தரித்திடும் துன்பத்தின் தரித்திரம் யாவுமே
தவிடுபொடி யாக வேண்டும்!

சுந்தரத் தமிழினில் மெட்டிசைத்தே தினம்
சுகத்தினைப் பெற்றிடுவோம் ~ அதற்கு
சுதந்திரம் வேண்டுமே! சுணக்கமேன் தமிழா உன்
சிரசினைத் தூக்கு மேலே!

-அனலையூர்ச் சேந்தன்-

# காதலினைத் தந்த தமிழ் வாழி!

தானைகளை வெல்லுமிவள் பார்வை ~ அத்
தானையுமே வென்றவளிப் பாவை
பூநிலவைத் தோற்கடிக்கும் மேனி
பூமியிலே எந்தனது ராணி

அன்னமூட்டும் அன்பினிலே அன்னை
ஆசையூட்டி வென்றனளே என்னை
என்னையாளு பண்பினிலே தந்தை
என்மனதில் வாழுமிவள் சிந்தை

கல்வியூட்டுந் தன்மையிலே வாத்தி
காதலூட்டிக் கொள்வதிலே தாசி
சொல்வதனைச் செய்வதிலே தோட்டி~ஏ.எல்.
சோதனையிற் காத்திடுவாள் தூக்கி

பொறுமையிலே பூமியினை வெல்வாள்
பெண்மையிலே சீதையினை வெல்வாள்
பெறுமதியிற் பொன்நகையை வெல்வாள்
புன்னகையில் நல்லபதில் சொல்வாள்

காதலினைத் தந்ததமிழ் வாழீ!
காசினியில் என்றுமிவள் வாழீ!
தாதவிழ்ந்த பூவெனவே வாழீ!
தாரமெனக் காணவனே வாடீ!

- த.தர்மேந்திரா -

# பண்பார் கலாநிதி பண்டிதமாமணி

*(கடந்த வாரம் பண்டிதமணியின் நூறாவது அகவை நிறைவெய்தியதை ஒட்டி இயற்றப்பட்ட கவிதைகளுள் மற்றொன்று இது.)*

வள்ளி யம்மை வயிற்றுத் திருமகன்
வளர்த ணங்கிளப் பூரிற் பெருமகன்
அள்ளிச் செந்தமிழ் ஆர்க்குந் தருநிதி
அகிலம் எங்கணும் போற்றும் பெருநிதி.

சுந்தரத் தமிழ் நூற்குரை கண்டவர்
தூய செந்தமிட் சொற்றிறங் கொண்டவர்
பைந்த மிழ்நூல்கள் பற்பல ஆக்கினார்
பாரெ லாமழி யாப்புகழ் தேக்கினார்.

பாவலர் போற்றும் பண்டித மாமணி
பாரவர் போற்றும் பண்புள மாமணி
நாவலர் தங்கள் நல்வழி வந்தவர்
நல்லணி தமிழ் நங்கைக்குத் தந்தவர்

சைவ மார்க்கத்தில் தப்பாது வாழ்ந்தவர்
சமய தத்துவ போதத்தில் ஆழ்ந்தவர்
தெய்வ நன்நிலை பெற்றுச் சிறந்தவர்
செந்தமிழ் சொல வந்து பிறந்தவர்

ஆரியந் தமிழ் கற்றுத் தெளிந்தவர்
அவைகளில் தமிழ் மாரி பொழிந்தவர்
சூரியப்பிர காசமாய் நின்றவர்
சொற் றிறத்தினால் ஊரையே வென்றவர்

திருநெல் வேலியிற் செம்பணி தூக்கினார்
சிறந்த பண்டிதர் தங்களை ஆக்கினார்
பொருநர் அற்றதோர் பூபதி ஆனவர்
பொருந்து வார்க்கொரு புத்தமிழ்த் தேனவர்

தூய நன்னெறி வாழ்வு துணிந்தவர்
தொண்டு செய்வதில் நெஞ்சங் கனிந்தவர்
நேய மானிட தர்மத்தைப் போற்றினார்
நித்தமும் தமிழ் நீள்பணி யாற்றினார்

பிறரின் மேன்மைக்காய் நித்தமும் ஏங்கினார்
பிரமச் சாரியாய்ப் பீடுபெற் றோங்கினார்
கறவை கன்றுக்குப் பால்தரல் போலவே
கல்வி நல்கினார் யாவர்க்கும் சாலவே

காரைத் தூவானைக் கண்டு பணிந்தவர்
கருமம் யாவையும் எண்ணித் துணிந்தவர்
ஊரை உய்வித்த உத்தம நற்சுதன்
உலகம் போற்றிடும் செந்தமிழ் வித்தகன்

கணப திப்பிள்ளை என்ற கலாநிதி
கருதி ஐங்கரன் தந்த பெருநிதி
குண மிகுந்தநம் பண்டித மாமணி
கொள்கை யின்வழி செல்வது நம்பணி

-வே.சின்னப்பா-
தனங்கிளப்பு.

# காதலென்ன கானல்நீரா?

இப்பாலே நீயும் வந்து
இன்முகம் தன்னைக் காட்டி
செப்பாமற் காதல் வித்தை
செப்பியே செல்வா யென்று
நப்பாசை கொண்டேன் யானும்
நடந்திடா ஆசை அன்றோ?
செப்பித்தான் சென்றா யுண்மை
செருப்பினாற் தானே பெண்ணே?

பப்பாசிப் பழமாய் உள்ளக்
கற்பனை யாவுஞ் சுக்காய்த்
தொப்பெ (ன்) னத் தரையில் வீழ்ந்தே
வெடித்ததே போலுங் கண்டாய்
அப்பாவித் தமிழோர் போலும்
அழிகிறேன் யானும் உம்மால்
அப்பாலே என்னைத் தாண்டி
அன்னமே செல்கின் றாயே?

அப்பாலே என்னைத் தாண்டி
அன்னமே செல்லும் போதில்
அப்பந்தான் போலும் உந்தன்
அழகிய வதனம் என்னைக்
கொப்பறை எண்ணை ஊற்றிக்
கொளுத்திடும் வெப்பம் போலே
தப்பத்தான் முடியா வண்ணம்
தவித்திட வைத்தல் ஏனோ?

அப்பளம் போலே யானும்
ஆகினேன் சோகம் எல்லாம்
அப்பினேன் "வேல்ட் கப் மச்"சில்
"அர்ச்சுனா" தலைமை கீழே
"கப்"பினை இழந்தே நிற்கும்
இலங்கையர் ஆனேன் காதற்
கப்பலை இழந்தேன் – வாழ்வின்
"ஹப்பி"யை இழந்தே னம்மா?

- த.இந்திரா -

# அன்றும் இன்றும்!

*கடலை அளந்த கைகளுக்கு
கவிதை சொன்ன கதைஅன்று
கடலைத் தாண்டக் கால்களுக்கும்
விலங்கு பூட்டும் வெடி.....இன்று*

*பாட்டு, பரதம், பவிசு என்று
பரவிக் கிடந்த தெரு அன்று
சூட்டுச் சத்தம் செழிப்பைத் தின்னச்
சுடலை ஆச்சுத் தெரு இன்று*

*ஊரே கூடிப் பொங்கிக் கஞ்சி
ஊற்றும்; கோவில் எழில் அன்று
ஊரடங்கால்...அத்தசாமப்
பூசை பகலில்........ இது இன்று!*

*சாமச் சாமக் கச்சேரிக்குள்
காதல் செய்தோம் அது அன்று
ஆமாம்; பகலில் கூடக் காமம்
அடிமையாக்கும்....துயர் இன்று!*

*கவிதை முனையில் கலைகள்வளர்த்து
'கலக்கி' வென்ற தமிழ் அன்று
துவக்கு முனையில் துடித்துத் துடித்து
விடிவைத் தேடும் விதி இன்று*


*வானவில் மீதும் ஏறிக் கோடி
வசந்தம் துய்த்த பொழுதன்று
நாலுதெருவைத் தாண்டிப் போக
நடுங்கும் வாழ்க்கை இழிவின்று*

*விதைக்கும் முன்னே முளைக்க வல்ல
செழிப்புக் கொண்ட தரை அன்று
புதைத்துப் பலநாளானவற்றின்
'விளைவை' அறியா நிலமின்று*


*தூக்கு மேடையைப் 'படத்தில' மட்டும்
கண்டு பயந்த கனவன்று
தூக்குமேடையே வாழ்வாய்ப்போக
மரத்துப் போச்சு நனவின்று*

*ஒன்றும் இல்லை எனினும் ஏதோ
உயிர்ப்பில் உயர்ந்த நிலை அன்று
எல்லாம் மலிந்த பொழுதும்.... ஏதோ
இழந்தாற் போன்ற நிலை இன்று*

- த.ஜெயசீலன் -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 13 மனதுள் புகுந்த கள்ளம்

## செங்கை ஆழியான்

காலையிலிருந்தே சோணாவாரியாக மழைபொழியத் தொடங்கியிருந்தது. வெள்ளம் வீதிகள், ஒழுங்கைகளூடாக ஓடிக்கொண்டிருந்தது. கனத்த மழை. ஒக்டோபர் மாதத்து அமுக்க இறக்க மழை. தொடர்ந்து பெய்துதான் ஓயும் என நான் எண்ணிக் கொண்டேன்.

"மாரி தொடங்கி விட்டது.."

வானம் இரண்டுபடும் போல மின்னல்கள் கிளைவிட்டுப் பாய்ந்தன. பலத்த இடிச்சத்தம் காதுகளை செவிடாக்கும் வகையில் ஒலித்தது. இவற்றோடு வடக்குப் பக்கமாகப் பலாலி இராணுவம் யாழ்ப்பாண நகரத்தை நோக்கி முன்னேறத் தொடங்கிவிட்டதென்ற செய்தி பரவியிருந்தது. குண்டுகள் வெடிக்கின்ற சத்தங்கள் இடியோசையை மீறிக் காற்றில் பரவிவந்தன.

"ஆமி யாழ்ப்பாணத்துக்கு வரப்பெடியள் விடமாட்டினம்." என்று எனக்கு மூக்குப் பேணியில் தேநீர் வழங்கும் போது தையல்முத்தாச்சி கூறித் திருப்திப்பட்டுக் கொண்டாள். அந்த நம்பிக்கை எனக்கும் இருந்தது.

எல்லா அலுவல்களும் யாழ்ப்பாணத்தில் வழமைபோல நடந்து கொண்டிருந்தன. கந்தஷட்டி இறுதி நாள்பூசை கோயில்களில் நடந்து கொண்டிருந்தது. யாழ்ப்பாணக் கந்தோர்கள் எல்லாம் இயங்கின. பாடசாலைகள் நடந்தன.

யாழ்ப்பாணத்தை நோக்கி இராணுவம் நகரத்தொடங்கி விட்டதென்ற செய்தி யாழ்ப்பாண மக்களை அவ்வளவு தூரம் பாதிக்கவில்லை.

"என்னதான் தலைகீழாக நிண்டாலும் கட்டுவனைக் கடக்க முடியாது" என்ற எனது திடமான நம்பிக்கை அன்று நண்பகல் தரைமட்டமாகியது. கோண்டாவிலிருந்து ஜெயாவும் பிள்ளைகளும் லாண்ட்மாஸ்ரர் ஒன்றில் அவசியமான பொருள்களை ஏற்றிக் கொண்டு என்வீட்டு வாசலில் வந்திறங்கியபோது என் நம்பிக்கை தகர்ந்து போனது.

"கோண்டாவிலில் இருக்க முடியாது மாமா. ஷெல்கள் உரும்பிராயைக் கடந்து வருகின்றன. கோண்டாவில் சந்தியில் இரண்டு விழுந்து வெடிச்சிட்டுது. பொடியளின்ர காம்ப் வேறு பக்கத்தில இருக்குது. உரும்பிராய்ச்சனங்கள் வீடுவாசல்களை விட்டு வெளியேறத் தொடங்கி விட்டினம். அங்க இருந்து என்ர பிள்ளையளைப் பலிகொடுக்க நான் தயராக வில்லை. இந்தியஆமி வரேக்க செய்த தவற்றினை செய்யமாட்டன். அதுதான் வந்திட்டன், மாமா.."

புவனம் பயந்து போய் தங்கை, தம்பியுடன் நின்றிருந்தாள்.

"ஒண்டுக்கும் பயப்பிடவேணாம், பிள்ளையள். வாருங்கோ. இங்க பயமில்லை.. உள்ளுக்கு வாருங்கோ.."

எல்லாரும் அவர்களைச் சூழ்ந்து கொண்டனர்.

"கண்டபாட்டிற்கு குண்டுகளை வீசிக்கொண்டு வாறான்கள். கோப்பாய்ச் சந்திக்கு வந்திட்டான்கள் எண்டு கேள்வி. யாழ்ப்பாணத்துக்கு வராமல் விடமாட்டான்கள் என்கினம். கோண்டாவில் காம்ப் எல்லாத்தையும் ஏத்திக் கொண்டு தென்மராட்சிக்குப் போறான்கள். எங்கட வீட்டிற்குப் பக்கத்திலிருக்கும் காம்பை அப்படியே பிடுங்கிக் கொண்டிருக்கிறான்கள். அவங்களே இடம் மாறேக்க... நாங்க எம்மட்டு, மாமி?" ஜெயா விவரித்தாள்.

மருமகளுக்கு தையல்முத்தாச்சி ஆறுதல் கூறினாள்.


"மழையில நனைஞ்சு போனியள். தலையைத் துடையுங்கோ... உடுப்புக்களை மாத்துங்கோ..." என்றபடி கடைசிப் பேரனை அருகில் இழுத்துத தன் சேலைத் தலைப்பால் அவன் தலையைத் துடைத்துவிட்டாள்.

என் விழிகள் சுவரில் மாட்டியிருந்த கலண்டரில் பதிந்தது. ஒக்டோபர்-30-1995.

நண்பகல் கழித்திருந்த வேளையில் வெளியிலிருந்து ராகுலன் வந்தான். அவனை ஒரு மோட்டார் சைக்கிளில் இருத்தி ஓர் இளைஞன் அழைத்து வந்திருந்தான். அவன் முகம் வாடியிருந்தது.

இங்கு வருவதற்கு முதல் அவன் லூசியன் வீட்டிற்குச் சென்றிருந்தான். வாசலில் நின்றபடி மோட்டார்சைக்கிள ஹோர்ண் இரைந்தது. வீட்டிற்குள்ளிருந்து பிலோமினா வெளியில் ஓடி வந்தாள். அவர்கள் இருவர் மோட்டார் சைக்கிளில் அமர்ந்திருப்பதைக் கண்டு, "அப்பா இல்லை.. அம்மாவும் இல்லை" என்றாள் தட்டுத் தடுமாறி.

அவள் விழிகள் ஒருகணம் ராகுலனில் மொய்த்தன. அவன் அவளை ஆவலுடன் பார்த்தான். சில கணங்கள் அவளால் எதுவும் பேச முடியவில்லை.



"லூசியன் அண்ணரிடம் சொல்லுங்கோ நான் வந்ததாக. நான் போகப் போறன் எண்டு சொல்லுங்கோ..."

"எங்க...?" என்று அவள் பயத்துடன் கேட்டாள்.

"இனி நீங்க போக மாட்டியள் என்று அப்பா சொன்னார்..."

ராகுலனின் நெஞ்சில் வலி கண்டது. அவனும் பிலோமினாவும் ஒரே பாடசாலையில் ஆரம்பக்கல்வி கற்றிருந்தார்கள். அவள் அவனுக்குப் புதியவளல்லள். சிறுவயதில் அவர்கள் ஒருவருடன் ஒருவர் பாடசாலையில் சேர்ந்து விளையாடியுமிருக்கிறார்கள்; சண்டையும் பிடித்திருக்கிறார்கள். அவன் இயக்கத்திற்குப் போனபின்னர் அன்றுதான் பிலோமினாவைச் சந்தித்தான். அவள் இப்படி அழகாக வளர்ந்து மலர்ந்து நிற்பாளென அவன் எதிர்பார்க்கவில்லை.

"நான் போகத்தான் வேணும்... வாறன், பிலோ." என்றான் மெதுவாக. அவள் பெயரை அவன் வாத்சல்யத்துடன் உச்சரித்தான்.

"கவனம்.." என்றாள் அவள் கலங்கிய விழிகளுடன். இப்படியொரு உறவு முடிச்சு தன்வாழ்வில் விழுமென ராகுலன் ஒருபோதும் எண்ணியவனல்லன். அப்புதான் அவன் மனதைக் குழப்பிவிட்டார். அவளைப் பற்றி எண்ணுவதற்கே இவ்வளவு இனிமை இருக்கிறதா? அவளுடன் இருவார்த்தைகள் பேசுவதில் இவ்வளவு நிம்மதியும் திருப்தியும் இன்னும் கொஞ்ச நேரம் பேசவேண்டுமென்ற அடங்கா ஆசையும் ஏற்பட முடியுமா?

லூசியனிடம் சொல்லிவிட்டுப் போகவா அவன் வந்தான்? இல்லை. அவளிடம் கூறிவிடை பெறத்தான் வந்தான்.

"என்ன மச்சான் இப்படியொரு விசயம் இருக்கிறதா?" என்றான் மோட்டார் சைக்கிளை ஓட்டிய சத்தியன்.

"போடா.."

அவர்கள் வீட்டிற்கு வந்தபோது கோண்டாவிலிருந்து ஜெயா குடும்பத்தினர் இடம்பெயர்ந்து வந்திருந்தனர். ராகுலனின் முகவாட்டத்தைத் நான் அவதானித்தேன். யோகம் அவனிடம் விரைந்து வந்தாள்.

"அம்மா, போயிட்டு வாறன்.."

யோகம் திடுக்கிட்டுவிட்டாள். இனி ராகுலன் செல்லமாட்டான் என எண்ணிய எண்ணம் தவிடுபொடியாகியது. நான் ஏக்கத்துடன் பேரனைப் பார்த்தேன்.

"நான் போகத்தான் வேணும். யாழ்ப்பாணத்துக்கு ஆமி வரும் போது நான் இங்க இருக்க முடியாது.."

"ஆமி யாழ்ப்பாணத்துக்கு வருமா?"

ராகுலன் எதுவும் பேசவில்லை. எதையோ மறைப்பது போலப்பட்டது.

இராணுவம் யாழ்ப்பாணத்திற்கு வரும்போது அவன் இங்கிருக்க முடியாது என்பது அனைவருக்கும் புரிந்தது. யோகம் விழிகளில் நீர் தாரை தாரையாக வழிய நின்றிருந்தாள். ராகுலன் தன் உடுப்புக்களை ஒரு பாக்கில் எடுத்துக் கொண்டான்.

"ராகுலா...!"

யோகம் அப்படியே அவனைக் கட்டிக்கொண்டாள். இருவரும் சில பொழுது அழுதனர். அவன் தன்னைத் திடப்படுத்திக் கொண்டான்.

"அப்பு... நீங்க இங்க தொடர்ந்து இருக்க முடியாது போலப்படுகுது. எல்லாரும் தென்மராட்சிக்கு அல்லது வடமராட்சிக்கு இடம்பெயரத்தான் வேணும். வலிகாமம் முழுவதையும் கைப்பற்றிவிடும் வேகத்துடன் ஆயிரக்கணக்கான ஆமியுடனும் நவீன யுத்த தளபாடங்களுடனும் எதிரி வருகிறான். சில காலத்துக்கு வலிகாமத்தைக் கைவிடத்தான் வேண்டியிருக்கும். நீங்க எல்லாரும் கெதியாக சாவகச்சேரிக்குப் போறது நல்லது. நான் முதலில போய் அங்க ஒருஇடம் எடுத்து வைக்கிறன். பிரச்சினை எண்டால் எல்லாரும் வந்திடுங்கோ. இங்க நிண்டு பலியாக வேணாம்."

எனக்கு நிலமை இப்பொழுது தெளிவாகியது. ஒரு மாபெரும் இடப்பெயர்வு எந்தக்கணத்திலும் நிகழலாம். இன்றோ நாளையோ நாளை மறுநாளோ?

என் நெஞ்சு கனத்தது. இந்த மண்ணை விட்டு ஓடுவதா? வாழ்ந்த வீட்டைவிட்டு அகதிகளாக ஓடுவதா? நினைக்கவே முடியவில்லை.

"ராகுலா...நிச்சயமாக நாங்க இடம் பெயர வேண்டிவருமா?

"வரும், அப்பு."

"நான் இவ்விடத்தைவிட்டு எங்கும் இடம்பெயர மாட்டேன்."

"அப்பு விசர்க்கதை கதையாதையுங்கோ.. இவ்வளவு பேரையும் இங்க வைச்சிருந்து பலிகொடுக்கப் போறியளா? அவங்கள் வரும்போது சில நிமிட இடைவெளி கூட விடாமல் குண்டுகளைப் பொழிஞ்சு தள்ளிக் கொண்டு வருவான்கள்... எல்லாரும் இங்கிருந்தால் பலியாகவேண்டியது தான்.."

"எல்லாரையும் சாவகச்சேரிக்கோ எங்கோ பாதுகாப்பாக அனுப்பி வைக்கிறன். ஆனால் நிச்சயமாக நான் இந்த இடத்தைவிட்டு அசையமாட்டன். ஆமி வந்தால் அங்கினேக்க கிட்டடியாக இடம்பெயர்ந்து இருந்திட்டு வருவன்."

"அந்த மனிசன் இங்கயெண்டால் நானும் வரமாட்டன்" என்றாள் தையல் முத்து.

என் பிடிவாதம் எல்லாருக்குந் தெரிந்த சங்கதி. ராகுலன் கவலையோடு பார்த்தான். எதுவும் மேற்கொண்டு பேசவில்லை.

"வாறன்.."

ஊன்றுகோல்களை ஊன்றி அவன் நடந்தான். மோட்டார் சைக்கிள் புறப்பட்டுச் சென்றதன் பின்னரும் அவ்விடத்தில் அமைதி நிலவியது.

தூரத்தில் குண்டுகள் வெடித்தன. சன்னங்கள் சிதறி வெடிப்பது ஈரவளியில் இலகுவாக மிதந்து பரவியது. வானம் மீண்டும் சிணுங்கத் தொடங்கியது. மத்தியானச் சாப்பாடு மூன்று மணிக்கு மேல்தான். எவராலும் நன்றாகச் சாப்பிட முடியவில்லை. ராகுலனின் பிரிவும் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர வேண்டிவரலாம் என்ற பயமும் அவர்களின் நிம்மதியைக் காவு எடுத்திருந்தன.

வீதியில் யாவரும் கலகலப்பாக இயங்கினர். புதிதாக வீடுகட்டி இன்று குடிபுகுகின்ற சின்னராசா வீட்டிலிருந்து 'லவுட்ஸ்பீக்கர்' அலறியது. வீட்டுத் தளபாடங்கள் ஏற்றிக்கொண்டு ஒரு லாண்ட்மாஸ்ரர் வீதியில் செல்கிறது. இப்பொழுதுதான் பெரிய கடையில் புதிதாக வாங்கியவை. தேநீர்க்கடை வேலுப்பிள்ளையர் இன்று அக்கிராமத்தில் வாங்கிய நான்காவது வீட்டிற்கான உறுதிப்பத்திரத்தில் பிரசித்த நொத்தாரிசு முன்னிலையில் கையொப்பம் வாங்கிக் கொண்டார். அறாவிலையில் சீமெந்து வாங்கித் தன் வீட்டினை மரியநாயகம் திருத்துவித்துக் கொண்டிருந்தான்.

எல்லாம் வழமைபோல நடந்து கொண்டிருந்தன.

ராகுலன் பொய் சொல்ல மாட்டான். இன்னமும் மக்களுக்குச செய்தி பரவவில்லை.

நான்கு மணிபோல கிராமமே அல்லோலகல்லோலப்பட்டது.

எதிர்பார்த்த செய்தி விசக்காய்ச் சலாகப் பரவியது.

"...உடனடியாக வலிகாமத்து மக்கள் அனைவரும் தென்மராட்சிக்கோ வடமராட்சிக்கோ இடம் பெயருமாறு கேட்கப்படுகின்றார்கள். யாழ்ப்பாணத்தை நோக்கி இராணுவம் வந்து கொண்டிருக்கிறது. பெரும் யுத்தம் நடக்கவிருக்கிறது. உடனடியாக இடம்பெயருமாறு கேட்கப்படுகின்றனர்..."

ஓட்டோவொன்றில் கட்டப்பட்ட 'லவுட்ஸ்பீக்கர்' வீதிவீதியாக அறிவித்தல் செய்தது.

வலிகாமத்திலிருந்து அங்கால் செல்வதற்கு நாவற்குழிப் பாலத்துப் பாதை ஒன்றுதான் இருந்தது. அதுவும் இரவுபன்னிரண்டு மணிக்கு மேல் தகர்க்கப்பட்டு விடும் என்ற செய்தி எல்லாரையும் கலக்கிவிட்டது. கிராமமே வீதியில் இறங்கி நின்றிருந்தது. கொட்டும் மழையில் குழந்தை குட்டிகளுடன் அவர்கள் காவக்கூடிய பொருட்களுடன் விழிகளில் நீர் சொரிய வீதியில் இறங்கினர்.

என்னையும் மனைவியையும் தவிர எல்லாரும் ஆயத்தமாகி விட்டனர். ஒவ்வொரு சைக்கிளில் கட்டக்கூடிய பொருட்கள். நகைகள், உடுப்புகள், சாப்பாட்டுச் சாமான்கள். அவ்வளவுதான். பெண்கள் சைக்கிள் ஓடப் பழகியிருப்பது எவ்வளவு நல்லதாகி விட்டது.

சிவபுத்திரன் சைக்கிளின் முன்னால் நிற்க, எல்லாரதும் சைக்கிள்களும் வரிசையாக முற்றத்தில் நின்றன. எல்லாரது விழிகளிலும் நீர். சோகம் அப்பிக்கிடந்தது. நான் நிலைகுலைந்து வாங்கிலில் அமர்ந்திருக்கிறேன்.

இப்படியொரு துயரம் வரக்கூடாது. எங்கு செல்வது? யாரிடம் போவது? இலக்கு இல்லாத இடப்பெயர்வு ஏற்படுத்தப்பட்டு விட்டது. எந்த மண்ணை வேண்டி இந்தப் போராட்டம் ஆரம்பித்ததோ அந்த மண்ணை விட்டு வெளியேற நேர்ந்து விட்டது.

"வாறம்..அப்பு."

"கவனமாக இருங்கோ.."

"நீங்களும் வந்திருக்கலாம்.... சமான்கள் போனால் போகுது. உசிர் தான் முக்கியம்."

"வாறம்...வாறம்..அப்பு, அம்மம்மா.."

"அப்பம்மா வாறம்.."

தூறிக்கொண்டிருந்த மழையில் அந்தக் குடும்பத்தினர் வீதியில் இறங்கினர்.

என் விழிகள் நீரைச் சொரியப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

பெரும் இடப்பெயர்வு தொடங்கி விட்டது.

(தொடரும்).

## குறள் வெள்ளம்

எடுப்பாக வாழத்தான் யாருக்கும் விருப்பம். அடங்கி இரு என்று சொன்னால் சின்னஞ் சிறுசுகளுக்கே பொறுக்காத காலம் இது.

மனதை அடக்கி - போதும் என்ற திருப்தியுடன் - வாழ்ந்து பார்த்தால் புரியும் திருப்தியின் இரகசியம். கண்டபடி எடுத்ததெற்கெல்லாம் மனதை - புலன்களை - அலையவிடாது கட்டுப்ப்படுத்தி, சிறிதுதூரம் செல்லப் பழகி விட்டால் தெரியும் வாழக்கையின்சுகம்!

இந்த நிலைமை சொர்க்கத்துக்கு - அமரர் உலகுக்கு வழிகாட்டும் என்றால் - அது மறுபிறவி என்றுதான் கருதவேண்டுமென்றில்லை.

இப்பிறப்பிலே - இன்றே - கண்ணெதிரே தோன்றும் உலகமே சொர்க்கம்தான். அங்கே அதற்கும் இதற்கும் அவாப்பிடித்து அலையும் மனிதர்கள் திருப்திகாணாப் பைத்தியங்கள் போலவே புலப்படுவர் - அடங்கியோர் கண்களுக்கு.

உண்மையும் அதுதான்.

அடங்காமல் திரிபவர்களுக்கு திருப்தியும் கிட்டாது. அமைதியும் கிட்டாது. ஐம்புலன்களும் தம்வழி இழுக்க இவர்கள் திணறுவார்கள். அவர்களின் அடங்காமை அடுத்தவரால் பழிக்கப்படுமே தவிர மதிக்கப்படாது.

இந்த நிலைமை அறியாமை என்னும் ஆரிருளே தவிர வேறில்லை. இவ்வுலகே அவர்களுக்கு நகரமாகிவிடும்.

*'அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை*
*ஆரிருள் உய்த்து விடும்'* - 0121

அடக்கமுடைமை

*-அம்பிகைபாகன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மொழி
## உங்கள் கவிதைகள்...

மண்ணியல் நிபுணர்
கண்டு பிடித்தவை
மேலிருப்பவை.
மன இயல் ஆய்வாளரின்
ஆழ்பார்வையில்
அகப்பட்டவை
கீழ் இருப்பவை.

- த.செந்தூரன் -

ஆயிரக் கணக்கானோரை
சாகடித்தபின்
புத்தத்தைப் பின்பற்றினான்
அசோக மன்னன்
புத்த தத்துவத்தை
சாகடித்து விட்டு
சமாதானத்துக்கான
யுத்தம் என்ற பெயரில்
அப்பாவித் தமிழர்களை
சாகடித்துப் புதைக்கிறார்கள்
அம்மையாரின் படைகள்.

- கதா -

தோண்ட தோண்ட
நேற்றைய தலைமுறையின்
முத்திரைகள்!
முகத்திரைகள்
கிழிக்கப்பட்டும்
தொலையும் முகவரிகள்!
முஹாரி மட்டும் கண்ணீராய்
காரிருளில்...!

- ந. சிறீதரன் -
கிளிநொச்சி.

தர்மச் சக்கரத்தின்
தார்மீக ஆட்சியப்பா!.
யுத்தம் மூலம் தேடினராம்
சமாதானப் புறாவை!?
அமைதியைத் தான்
விதைத்தவர்களாம்!...
அறுவடையில்... ஐயோ!...
காணாமற்போனோர் - எமைக்
கண்டு கொண்ட மகிழ்விலோ
வாயெல்லாம் பல்லாக...
பாருங்கள்!?

- கிராஞ்சியூரான் -

சமாதானத் தூதுவரின்
அகால மரணத்திற்கு
காரணம் அறியப்படும்.
ஆறப்போடாமல்
ஆணைக்குழுவும்
அமைக்கப்படும்!
அது வரைக்கும்
தேசியக் கொடியும்
உயரப் பறக்காமல்
அரைக் கம்பத்தில்!

- க.நாகராசா-

போதிமரக் கொள்கையின்
மகத்தான குறியீடுகள்
மாண்பிழக்கின்றன.
பேரினவாதத்தால்....
முரண்பாடுகளே
மனம் படியும் ஓவியங்களாக!
மெதுவாய் விலக்குக
புறாவையும் சக்கரத்தையும்....
கூடவே
மண்டை ஓடுகளையும்....

- ச. சாரங்கா -
சங்கத்தானை.

அன்பினைப் போதித்த
ஆன்மீகத்தின் பெயரால்
வன்மமாய் அமைதிப்புறாவைக்
கொன்றிட்டாலிங்கு வெறும்
என்புகள் மட்டுமே மிஞ்சும்!

- த. பிரபாகரன் -
சுழிபுரம்.

ஸ்ரீ லங்காவின்
தேசியக் கொடிக்கு
ராஜ பக்ஷ
வரைந்த
புதிய இலச்சினையோ?

- ஜெயா -

செம்மணியில்
தமிழனின் என்புகளின்
எச்சங்களும் மிச்சங்களும்
பச்சையாய் கிடைத்தன -
மேலும் தோண்டின்
சருகாய்ப் போன
சமாதானத்தின் தடங்களும்
தாறுமாறாய் வெளிவரும்...

- புரட்சி -
பூநகரி.

இன்றைய ஆட்சியில்
(அ)சோகச் சக்கரத்தின்
அச்சாணி
செம்மணிதான்.
சோமரத்னாவே!
நீதி உனக்குக்
கிடைக்காவிடினும்
நிலைக்கும் உனது பெயரும்
இம்மண்ணில்!

- சி. சிவாட்சயா -

புதியதோர்
உலகம் செய்வோம்!
புதைக்கப்பட்டோரே
உடன் எழுங்கள்!!
எழும் போது....
பழுவேற்றப்பட்ட
பேரினவாதச் சக்கரத்தை
வலுவேற்றப்பட்ட
முள்ளென்புக்களால்
முறித்தெறியுங்கள்.
ஏனென்றால்
சிதைக்கப்பட்ட
சமாதானம்
சற்றேனும் சிறகடிக்கட்டும்!

- புதுமை -
ஈச்சமோட்டை.

சதி என்னும்
சக்கரத்தில்
சரித்திரமாகிய - தமிழ்ச்
சந்ததி போல்
சமாதானப் புறாவும் - நாளை
எலும்புகளாய் மீட்கப்படும்.

- நித்தி -
அரியாலை.



மனுதர்மமிங்கு மரணம் சாமி - இது
மனித எலும்புகள் மலிந்த பூமி
சக்கரம் வெறும் அலங்காரம் தாயி!

- இனுவை றொபர்ட் -

போதி மரக்கிளையும் சக்கரமும் சொல்லும்
புதைகுழித் தத்துவத்தைக் கேட்டு
வெண்புறாவே நீ கண்ணீர் வடிக்கலாமா?
இல்லவே இல்லை.
இதுதான் சகஜமும் நிஜமும்...

- கரன் -
யாழ்ப்பாணம்.

சராசரிக் சாவில் மனிதன் எரிக்கப்படுகின்றான்;
சரித்திரச் சாவில் மனிதன் விதைக்கப்படுகின்றான;
சமாதானச் சாவில் மனிதம் புதைக்கப்படுகின்றது;
சமாதானக் கோவில் புனிதம் சிதைக்கப்படுகிறது.
சமரசம் ஆவதே மக்கள் எண்ணம்
சமாதி ஆனதே சமாதானச் சின்னம்!

- மு. வே. அன்பழகன் -
மட்டுவில் தெற்கு.

தமிழனாய்
மட்டுமல்ல
பறவையாகக் கூட
மறுபிறப்பில்
பிறந்திட வேண்டாம்.

- த. வசந்தன் -
கற்கோவளம்.

ஓ... புத்தபகவானே!!
உனது அருள் ஆட்சியின் கீழுள்ள
உயிர்கள் படும் வேதனை - அப்பப்பா!!
ஒலிவ் இலை சுமந்து வந்த பட்சிக்கும்
ஒற்றுமையாய் வாழ நினைத்த மனிதனுக்கும்
உனது தர்ம சக்கரம் அளிக்கும்
உயர்ந்த வெகுமதி இதுதானா??

- சி. சிவகௌரி -
மட்டுவில் வடக்கு.

## மௌனமொழி - 41



உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம்.
இதனை வரைந்தவர் மானியூர் ரட்ணேஸ்.

இலங்கை
இந்திய
ஒப்பந்தத்தின்
பன்னிரெண்டாம்
அகவையையொட்டி
வெளியான முகத்திரை கிழிந்த
முத்திரையோ?

- ச. நித்தியானந்தன்-
பண்ணாகம்.

நான் சிரிக்கிறேன்...
படிக்கும் போது...
தரப்படுத்தலால்
பல்கலை அனுமதி இழந்தவன்.
ஆனால்...
பல்கொலை அனுமதியால்...
எனது மண்டையோடு...
இப்போது...
றுகுணு...பல்கலையில்...
இதனால்தான்...
நான் சிரிக்கிறேன்...

- செ.சுதர்சன் -
வல்வெட்டித்துறை.

புறாவின் தராசுக்கு
தன்னைக் கொடுத்தான்
தமிழ் அரசன்.
யுத்தத்துக்கு ஏனம்மா ~ நீ
வெண்புறாவைக் கொடுத்தாய்?

- எம். பிருந்தா -
கோண்டாவில்.

தர்ம சக்கரமே
அதர்ம வழி என்றால்
வாழ்க்கைச் சக்கரத்தில்
வாழ்வு நிலை என்னாவது?
சமாதான சின்னமும் பிணமாகி
சமாதான
எண்ணமும் மண்ணாகியபின்
புதைந்த உடல்கள்
மிதந்து வந்தாலும்
இறந்த உயிர்கள்
பிறந்து வருமா?
இழந்த உறவுகள்
மலர்ந்து வருமா?
தோண்டும் குழியில் இவை
மீண்டு(ம்) வருமா....?

- மௌனிகா -

அன்னப் பட்சிக்கு
அபயமளித்த
மதத்தின்
இன்றைய நிலையிது!

- வதனி -

குறிப்பெடுத்துக்
கொள்ளுங்கள்!
சிங்கள அரசின்
சிறப்பான ஆட்சியில்
அமைதிப் புறாவும்
அசோகச் சக்கரமும்
இப்படித்தான்
அர்த்தப்படுமென்பதை...

- செய்யுங்கோ -
நீர்வேலி.

பாரம்பரிய மண்ணில்
பாரிய படையெடுப்பால்
அடைபட்ட நிலத்தின்
அராஜகம் தந்த
தார்மீகம்...
கருக்களல்ல... இவை!
வதைபட்ட உதரத்தால்
உதிர்ந்து....
விதைக்கப்பட்ட...
விருட்சங்கள்தான் இவை...!

- க. நாகேஸ்வரா -

சமாதானத் துளிரைச்
சுமந்து வந்ததால்
சமாதியாக்கப்பட்டது
உன் உடல்.
சங்கத் தமிழனாய்
சத்தியம் கொண்டதால்
சாய்த்தொழிக்கப்பட்டது
என் உடல்.
என்றோ ஒருநாள்
நீயும் நானும்
வென்றே எழுவோம்!
புதுப் பிறப்பாக.
அன்று....
அடிமை விலங்கிட்ட
அடிவருடிகள் கூட்டம்
அகப்பட்டுப் போகும்
எம்
ஈழச் சக்கரத்திலே!

- ஆ.ஜெ.றொனால்ட்-
ஈச்சமோட்டை.

வண்டில் சக்கரமும்
வட்டநடுவே மண்டையோடும்
ஒரு சோடி எலும்பும்
அரக்கர் கட்சியினரின்
தேர்தல் சின்னமாகும்!

- மு. சதீஸ் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீயும் அடித்துவிட்டால்...!

முற்றத்திலே பிள்ளைகள் பெருத்த ஆரவாரமும் கூச்சலுமாக விளையாடிக் கொண்டிருந்தார்கள். அகல்யாவிற்கு ஏழுவயது இருக்கும். அவள்தான் அந்த நால்வருள் வயதில் இளையவள். துருதுருத்த உருண்டைக் கண்களும் வட்டநிலா முகமும் சுருண்ட முடியுமாகக் கொள்ளை அழகு.

அவளுடைய அண்ணன் ரமேஷும் அதே சாயல்தானென்றாலும் மெலிந்த தோற்றம். அவளைப்போல சுருள்முடியில்லை. பக்கத்து வீட்டு சஞ்சயன், ரமேஷ் அளவுதான் ஆனால் கருமை நிறம். ரமேஷின் மைத்துனன் மயூரனும் சஞ்சயன், ரமேஷ் இருவரையும் போல பன்னிரண்டே வயதானவனென்றாலும் பதினைந்து வயது கூறக்கூடிய தோற்றம்.

அகல்யாவின் அம்மம்மா சிவராணிக்கு அவள் மயூரனுடனும் சஞ்சயனுடனும் விளையாடுவது விருப்பமில்லை. அடிக்கடி அவர்கள் 'மிரட்டி விட்டார்கள்', 'சேட்டை விட்டார்கள்', 'அடித்து விட்டார்கள்' என்று ஏதோ ஒரு பிரச்சினையுடன் அவள் அழுது கொண்டு வந்து நிற்பாள். அவளை விளையாடாமல் வீட்டிற்குள் அடைத்து வைத்திருக்கவும் முடியாது.

இன்று சிவராணியின் கவலை இரண்டாவது மகள் சித்திராவின் பிள்ளைகளான இவர்களின் சண்டை பற்றியில்லாமல் இளையமகள் பவித்ராவைப் பற்றியதாகவே இருந்தது.

பவித்ரா, ரியூஷன் முடித்து நான்கு மணிக்கிடையில் வந்திருக்க வேண்டும். மணி ஐந்தேகாலாகியும் அவளைக் காணவில்லை.

தாய்மனம் எண்ணாததெல்லாம் எண்ணித்தவித்தது. ஊரில் என்னென்னவெல்லாம் நடந்துவிட்டன. போதாக்குறைக்கு கடந்தவாரம் அவள் கூறிய முறைப்பாடும் 'நானுமிருக்கிறேன் மறந்து விடாதே' என்று கூறிக்கொண்டு வந்து பயமுறுத்தியது.

"அம்மா, அம்மா மயூரன் அத்தான் தடியை எடுத்துக் கொண்டு வாறார். முந்தநாள் மாதிரி அடிக்கப் போறார். தடியைப் பறியுங்கோ"

அகல்யா உரத்துக் கத்தினாள்.

"அம்மா நானிப்ப நேரை ஹொஸ்பிற்றல் றோட்டாலை வாறேல்லை. சுத்தித்தான் வாறனான்." சென்ற வாரம் ஒருநாள் பவித்ரா இப்படிக் கூறினாள்.

"ஏன் ராசாத்தி ரபிக் கூடவே?"

சிவராணி காரணம் கேட்டாள்.


"இல்லையம்மா. அதிலை ஒரு பொலீஸ் எந்தநாளும் பத்துநிமிடம் மறிச்சுவைச்சு ஏதாவது கேக்கும். சரியானவிசர். அதுதான் அதாலை வராமல் சுத்தி வாறனான்."

பவித்ரா காரணத்தைக் கூறியதும் அவள் அதிர்ந்து போனாள்.

"இது இப்பிடியே நிண்டுபோனால் பறவாயில்லை. வேறை ஏதாவது நடந்தால்........"

பயம் மனதின் ஆழத்திலிருந்து எழுந்து கண்களிலே குடிபுக அவள் பவித்ராவைப் பார்த்தாள்.

பவித்ரா சரியாக சிவராணியின் சாயல்தான். அடர்த்தியான நீண்ட முடி. அவளுடைய அந்த அகலமான விழிகளிலேயிருந்த அசாதாரணமான ஓர் அழகு முகத்தின் அழகை அதிகரித்துக் காட்டியது. அதை அழகென்று சொல்வதைவிட மனதைச் சுண்டியிழுக்கும் ஒரு கவர்ச்சியென்றே சொல்ல வேண்டும். அழகான, அளவான உடல்வாகு சந்தன நிறம். எந்த அலங்காரமும் அவள் அதிகப்படியாகச் செய்து



கொள்வதில்லையென்றாலும் பார்த்தவுடன் பளிச்சென்று எவரையும் வசீகரித்திழுக்கும் ஓர் அபார அழகு!

பத்தொன்பது வயதான அந்த அருமை மகளின் அழகைப் பெருமையுடன் பார்த்து ஆனந்தமடைய முடியாமல், பயத்துடன் பார்த்து, திகிலை மனம் முழுவதும் நிறைத்துக் கொண்டாள் அவள்.

அதன் பின்பு பவித்ரா வர சிறிது தாமதமானாலும் குண்டு வீச்சு விமானமொன்று மனதினுள் புகுந்து சுற்ற ஆரம்பிக்கும்.

"அம்மா, மயூரனத்தானைப் பாருங்கோ. தடியைப் பறியுங்கோ" மீண்டும் அகல்யாவின் கூக்குரல்.

"இவள் அவளவையிட்டை அடி வாங்கப் போறனெண்டு தெரிஞ்சும் ஏன் விளையாடப் போறவள்?"

சித்திரா சொல்லிக் கேட்கிறது.

"அவள் என்ன பொம்மையா உள்ளே பூட்டி வைப்பதற்கு? சின்னப் பிள்ளை, விளையாடாமல் பார்த்துக் கொண்டு இருப்பாளா?"

சிவராணி தனக்குள் நினைத்துக் கொள்கிறாள்.

பவித்ராவை வெளியே போக விடாமல் வைத்திருக்கலாமென்றால் அவள் படிக்கவேண்டுமே. ஆனால் அவள் வெளியே சென்று திரும்பும் வரை, சிவராணியின் உயிரும் போய் வரும் நிலை தொடர்ந்து, இன்று உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

பவித்ரா வருகிறாளா? என வெளியே பார்த்தாள். முற்றத்தில் பிள்ளைகளின் விளையாட்டு, ஆரவாரத்துடன் தொடர்ந்து கொண்டிருந்தது. பவித்ராவைக் காணோம்.

இவ்வளவு தாமதமாகக் காரணமேயில்லையே?

"பவித்ராக்கா வாறீங்களா விளையாட?"

சஞ்சயனின் குரல் சஞ்ஜீவாமிர்தமாக சிவராணியுடைய உயிரைக் கொணர்ந்து அவளுள் இறக்குகிறது.

சிவராணி எட்டிப் பார்க்கிறாள். பவித்ரா சைக்கிளை நிறுத்திவிட்டு, புத்தகங்களை எடுத்துக் கொண்டு உள்ளே வருகிறாள்.

அந்த முகமும் அந்தக்கண்களும் ஏதோ அனர்த்தத்தை அந்தத் தாய் மனதிற்குக் கணநேரத்தில் உணர்த்துகின்றன.

"அவளுக்கு என்ன நடந்து விட்டது?" மனம் அந்தரித்து எழுப்பிய கேள்வியை "என்னம்மா ஒரு மாதிரியாய் இருக்கிறாய்?" என்று வாய் கேட்டதுமே "அம்மா" என்று அவளது நெஞ்சில் முகம் புதைத்து விம்முகிறாள் பவித்ரா.

கைகள் அவளை ஆதரவாக அணைத்துக் கொண்டாலும், மனம் ஏதேதோ காரணங்களைக் கற்பனை செய்து, கருங்குளவிக் கூட்டினருகில் குந்திக் கொள்கிறது. அதனால் கண்கள் ஊற்றெடுக்கின்றன; வந்தஉயிர் மீண்டும் சென்றுவிட, மகளைப் பார்க்கிறாள்.

எதைக் கேட்பது? என்ன பதில் வருமோ?

மனச் சுமையைக் கண்களிலே ஊற்றெடுக்க வைத்து, வெளியேற்றிய பின் அம்மாவின் முகத்தைக் கலக்கத்துடன் பார்க்கிறாள் பவித்ரா.

"அம்மா........அ..ம்..மா, அ..வன்.... ஒருத்தன் சைக்கிளுக்கும் பின்னாலையே வந்தான். நான் பயத்திலை கெதியாய்ச் சைக்கிளை விட்டன்... அவனும் விடாமல் துரத்தினான்... பிறகு கிட்ட வந்த உடனை அவன்..அவன்... கதைச்சது...சீ.... வாழ்க்கையிலை கேக்காததுகளம்மா...."

அருவருப்பில் முகம்சுருங்க அவள் வெறுப்புடன் கூறினாள்.

"அவன் கதைச்சது மட்டுந்தானே? நான் பயந்து போட்டன்."

சிவராணி வெயிலில் நிழல் மரங் கண்டவள்போல, பெரும் ஆசுவாசத்துடன் கூறினாள்.

"அம்மா....அம்மா.....இஞ்சைபாருங்கம்மா அடிக்க வாறான். தடியைப் பறியுங்கோ அம்மா, அம்மா..... அம்மோய்...." அகல்யா மீண்டும் மிகவும் பரிதாபகரமாகக் குரலெழுப்பினாள்.

"சித்திரா உவள் அகல்யா அழுகிறாள். அவன் மயூரன் அடிக்க வாறான் போலை. ஒருக்காப்பார்"

சிவராணி உள்ளேயிருந்த மகள் சித்திராவை அழைத்துக் கூறிவிட்டு பவித்ராவின் பக்கம் திரும்பினாள்.

அவளது கண்ணீர் நின்றபாடில்லை. விம்மிக் கொண்டேயிருந்தாள். பேயைக் கண்டவள்போல முகமிருந்தது.

'ஏதோ வெருட்டிப் போட்டான் போலை. பிடிச்சு அரெஸ்ட் பண்ணிக் கொண்டு போடுவனெண்டு பயந்திட்டாள். பாவம் பிள்ளை. நல்லாய்ப் பயந்திட்டுது. நடக்கிறதுகளை நினைச்சால் ஆருக்குப் பயம வராது?

தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டு சிவராணி மகளை ஆதரவாக அணைத்துக் கொண்டாள்.

"அவன் கதைச்சதை யோசிச்சு அழுது கொண்டிருக்கப்போறியே? பேசாமல் போய் முகத்தைக் கழுவி உடுப்பை மாத்து.. தேத்தண்ணி போடுறன் குடி.."

அவள் மகளின் நினைவுகளை வேறு திசைக்கு மாற்ற முயன்றாள்.

"தனிய அலட்டிப் போட்டுப் போயிருந்தா பறவாயில்லை.... றாஸ்கல் என்ன செய்தவனெண்டு எப்பிடிச் சொல்லுறதம்மா?"

பவித்ரா கூறியதைக் கேட்டதும் சிவராணி மீண்டும் பதறினாள்.

"அப்படி என்ன செய்தவன்.....?"

"அவன் சைக்கிளிலை இருந்து கொண்டே ஜீன்ஸ் பட்டனை களட்டி... அம்மா.....நான் சைக்கிளை ராணி அன்ரி வீட்டுக்குள்ளை விட்டுட்டன். அங்கைபோய் எல்லாக் கதையும் சொல்லேல்லை. ஒருத்தன் பின்னாலை சைக்கிளிலை வந்ததாலை பயந்து போய் அங்கை வந்ததெண்டு சொன்னனான். சீ.:.. காவாலி நாயள்... இவங்களை....."

பவித்ரா படபடவென்று கோபத்தில் பொரிந்துதள்ளத் தொடங்கினாள்.

"அவன் எங்கை நிண்டு வந்தவன்?" பவித்ரா பாதையை மாற்றி வந்தும் அவன் எப்படித் தொடர்ந்திருப்பானென்று ஊகித்தறிய முயன்றாள் சிவராணி.

"உவனும் இன்னொரு பெடியனும் இந்த ஒழுங்கையாலை நெடுகத்திரியிறதுகள். முந்தியும் இடைக்கிடை பின்னாலை வாற சேட்டை விடுறவை. இண்டைக்குத்தான் இப்பிடி. இனி ஒழுங்கையாலை வரவே பயமாயிருக்கு... இதுகளைப போலை பெடியங்கள்தானே காடுகளிலை சாப்பாட்டுக்குக்கூட வழியில்லாமல் எல்லா சுகங்களையும் துறந்து... சீ... அவங்களுக்கே அவமானச் சின்னங்களாய்... வாயாலை அதுகள் கதைச்ச கதையள்!"

அந்தச சொற்களின நினைவிலேயே பவித்ரா மனம் கசந்தாள்.

"அவங்கள் நல்லாய்த் தமிழ் கதைக்கிறாங்களோ?"

சிவராணியின் கேள்வியைக் கேட்டதும் பவித்ரா முகத்தில் வினாக் குறியுடன் திரும்பினாள்.

"அவங்கள் தமிழுங்கள்தானே. தமிழ் கதைக்கிறதுக்கென்ன? ஆனால் இப்பிடிப் புழு நெளியிற சொற்களை தமிழிலை முந்திநான் கேட்டதில்லை."

"என்ன தமிழுங்களோ? ஆமியிலையோ?"

**யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**

சிவராணி ஆச்சரியமாகக் கேட்டாள்.

"ஆமியோ? என்னம்மா கதைக்கிறியள்? உது உதாலை திரியிற காவாலியள். இப்ப யாழ்ப்பாணத்திலை உதுகள்தானே கனக்க.. வேலை வெட்டியில்லாம, படிக்காம, கசிப்பும்... களவும்.... சீ நாங்கள் எப்பிடியொரு யாழ்ப்பாணத்தை உருவாக்க வேணுமெண்டு கனவுகண்டம். இப்ப தலைகீழான யாழ்ப்பாணமொன்று உருவாகுது."

பவித்ரா வேதனையோடு கூறினாள்.

"இந்தக் குழந்தையை இப்பிடி அடிச்சிட்டானே! மயூரனும் சஞ்சயனுந்தான் அவளை வெருட்டி அடிக்கிறான்களெண்டு பார்த்தா இவன் ரமேஷ் இப்பிடி அடிச்சிருக்கிறான். ஒரு வயித்திலை பிறந்தவன். சொந்தத் தங்கச்சியெண்ட பாசங்கூட இவனுக்கில்லையே? மயூரன் அடிச்சா மறிச்சு தங்கச்சியைக் கவனமாய்ப் பார்க்க வேண்டியவன் தான அடிச்சா? இவன் அடிக்கு, மயூரன் தடுத்து நிறுத்திற நிலைவந்தா இவனுக்கு மரியாதையில்லையெண்டதையாவது நினைக்கவேணும்.."

அழும் அகல்யாவைத் தூக்கி ஆதரவாக அணைத்தபடி சித்திரா கூறிக்கொண்டு வந்தாள்.

# புகழ் பூத்த கந்தமுருகேசன்

**புலோலியூர் அறிஞர் கந்தமுருகேசனாரின் 34ஆவது நினைவுதினம் 14-06-1999 இல் அனுஷ்டிக்கப்பட்டது. அவர் எழுதிய 'நல்லை நாவலன் கோவை' நூற்பதிப்பாக இன்று வெளியிடப்படுகிறது. கந்தமுருகேசனாரின் தமிழ்ப்புலமையை இக்கட்டுரை விளக்குகிறது.**

"தோன்றிற் புகழோடு தோன்றுக வ.்.திலார் தோன்றலிற் தோன்றாமை நன்று" - என்ற பொய்யா மொழிப் புலவரின் வாக்கிற்கு அமையத் தோன்றியவர் கந்தமுருகேசன்.

தனது கால்களில் ஊனமேற்பட்டு நடமாடமுடியாதிருந்த போதிலும் தனது ஊக்கத்தினாலும் முயற்சியினாலும் இறக்கும்வரையும் புகழ் பூத்தவராகவே - செயற்கரிய செய்பவராக - விளங்கினார். அதனால்தான் அவரிடங் கற்றோரும் நண்பர்களும் அன்பர்களும், அறிஞர்களுக்கும் புலவர்களுக்கும் இறந்த பின்னரே கௌரவித்து விழா நடத்தும் மரபிலிருந்து விலகி உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது அவரது அறுபதாண்டுப் பூர்த்தியில் முத்தமிழ்விழா எடுத்தனர். இச்செயல் வரவேற்கத் தக்கது; பாராட்டற்குரியது; மகிழ்ச்சியானது.

27-04-1902இல் தென்புலோலியில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் உதித்த கந்தமுருகேசன் ஆரம்பக் கல்வியைக் கட்டாதெரு மிஷன் பாடசாலையில் பயின்றபின் வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் இரு ஆண்டுகள் கற்றார். அதன்பின் தென் புலோலியிலிருந்த ஆசிரியர் திரு.க. க.முருகேசபிள்ளை (கார்த்திகேசு உபாத்தியார்)யைக் குருவாகக் கொண்டு நன்னூல், திருக்குறள், கந்தபுராணம் ஆகியனவற்றை ஐயந்திரிபறக்கற்று கோயில்களில் கந்தபுராணபடனம் நிகழுகின்ற காலப் பொழுதில் உரை கூறிவந்தார். அத்துடன் புற்றளை மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகவும் கடமை புரிந்தார். நடக்கமுடியாத நிலை ஏற்பட்டதும் அவர் பனையோலையால் வேய்ந்த குடிசையையே தமது இருப்பிடமாகக்கொண்டு சுயமாகவே இலக்கண இலக்கியங்களையும் சித்தாந்த நூல்களையும் துறை போகக் கற்றார். அவரின்அறிவு விருத்தியடைந்தது. அவர் தமிழ்மொழியிலேயன்றிச் சமஸ்கிருதத்திலும் ஆங்கிலத்திலும் நிறைந்த பாண்டித்தியம் பெற்றிருந்தார். அவரது புலமையைக் கண்டோர் தாங்கள் ஐயந்திரிபறக் கற்க அவரை நாடிச்சென்றனர். யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள - தமிழில் ஆர்வமுள்ளவர்களும் - தமிழ் மொழியை இலண்டன் பல்கலைக் கழகப் பரீட்சைக்கு ஒரு பாடமாக விண்ணப்பித்தோரும் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கப் பிரவேச பண்டித, பாலபண்டித, பண்டித பரீட்சைகளுக்குத் தோற்றுவோரும் அவரின் மாணவராயினர். இம்மாணவர் குழாம் காலப்போக்கில் அரிவரியிலிருந்து உயர் வகுப்புவரை விரிவடைந்தது. காலையிலிருந்து இரவு வரை அவரது இல்லமாகிய தமிழகத்தில் மல்லிகை வாசனையுடன் தமிழ் மணமும் கமழ்ந்து கொண்டிருந்ததெனலாம்.

**சே.ஏகாம்பரநாதன்**
(முன்னாள்பிரதிக்கல்விப் பணிப்பாளர்)

அத்தகைய அறிஞரிடம் - சில மாதங்கள் பயிலவேண்டுமென விரும்பி பல்கலைக்கழகப் புகு பரீட்சை எழுதியபின் 1952ஆம் ஆண்டு ஜனவரியில் நான் அவரிடம் சென்றேன். அங்கே போனதும் எனது பெயரைத் தெரிந்திருந்தும் தெரியாதவர் போலத் "தம்பி!உமது பெயர் என்ன?" எனக்கேட்டார். நான் "ஏகாம்பரநாதன்" எனக் கூறினேன்.

"ஏகாம்பரம் என்பதன் கருத்து யாது?" என மீண்டும் வினாவினார். நான் விடைதெரியாது விழித்தேன். அந்நிலை கண்டு அவர் 'ஏகம் + அம்பரம்' எனப் பிரித்து ஏகம் என்றால் ஒன்று, அம்பரம் என்பது ஆடை, எனவே ஒற்றை ஆடையன் என விளக்கினார். அம்பரம் என்பது பரவெளி, திக்கு ஆகியவற்றையும் குறிக்கும் எனவும் கூறினார். அவரைச் சந்தித்த முதல் நாளிலேயே இவ் விளக்கத்தைப் பெற்றபின்பு தென்புலோலிக் கிராம எல்லைக்குள் நான் பெரும்பாலும் வேட்டி மாத்திரம் உடுத்துச் செல்லும் வழக்கமாயிற்று. அக்காலத்தில் பல்கலைக்கழகம் புகுவதற்கு எழுத்துப் பரீட்சையில் தேறியிருப்பினும் நேர்முகப் பரீட்சைக்கும் தோற்ற வேண்டியிருந்தது. அதன் காரணமாக நானும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டேன். நேர்முகப் பரீட்சைக்குழுத்தலைவராகக் கீழைத்தேய மொழித்துறைத்தலைவர் பேராசிரியர் ஜி.பி.மலலசேகர இருந்தார். அவருக்கு வணக்கம் கூறி ஆசனத்தில் அமர்ந்ததும் கந்தமுருகேசன் முதல்நாள் வினாவியது போல எனது பெயரைக் கேட்டதோடு அதன் பொருளையும் அவர் வினாவினார்.நான் பெயரைப் பிரித்துக் கருத்தினை ஆங்கிலத்தில் கூறியதும் நன்று எனப் பாராட்டிப் பின் வேறு வினாக்கள் தொடுக்காது செல்க என விடை கொடுத்தார். அன்றிலிருந்து கந்தமுருகேசனார் மீது குரு பக்தி பிறந்து வளர்ந்து வந்தது. எனவே குருதட்சணை கொடுப்பதற்குரிய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தேன். அது இப்பொழுது கைகூடியதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்; பெருமிதம் உறுகிறேன்.

நல்லை ஆறுமுகநாவலரின் பண்புகளும் அவர் தமிழுக்கும் சைவத்துக்கும் ஆற்றிய தொண்டும்



கந்தமுருகேசனின் உள்ளத்தை ஈர்த்ததனால் அவரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு 'நல்லை நாவலன் கோவை' என்ற நூலினை ஆக்கினார். இக்கோவை நூல் 1.1.1930இல் எழுதப்பட்டது என்பது அவர் அந்நூலுக்கு எழுதிய 'ஆக்கியோன் அறைவு' என்பதிலிருந்து அறியமுடிகின்றது. அந்நூல் கையெழுத்துப் பிரதியாகவே அவரின் எழுத்தில் இருந்தது. அது சிதைந்து போகாது பாதுகாக்கப்பட வேண்டுமென்ற நோக்கில் பலரும் அச்சுவாகனமேற்ற முயன்றும் பயனளிக்கவில்லை. அம்முயற்சியில் சென்ற ஆண்டிலிருந்து நான் ஈடுபட்டு வெளிநாடுகளிலிருந்து கந்தமுருகேசனது மாணவர்கள், அன்பர்கள் சேகரித்து அனுப்பிய நிதியைக் கொண்டு இந்நூலை அச்சிட்டு வெளியிடக்கூடிய பேறு பெற்றேன். இன்று புலோலியிலுள்ள புற்றளை மகாவித்தியாலயத்தில் 'நல்லை நாவலன் கோவை' வெளயீட்டு நிகழ்வு நடைபெறுகிறது.

அவா 16-04-1965இல் அமரரானார்.

**தன்னடையே ஊனமுற்ற போது மெங்களை**
**தமிழன்னை விரைந்துநன்கு நடக்கும் வண்ணம்**
**சொன்னடையும் பொருணடையுந் துலக்கி வைத்தே**
**தூயநடை பயிற்றுவிக்குந் தொன்னா வல்லோன்**
**கன்னலிடைத் தேன்பெய்து கனியும் கூட்டிக்**
**கற்பிக்கும் புகழ்[illegible]**
**மின்னெனவே நடக்கின்ற புதுமை செய்தோன்**
**மேன்மைதிகழ் கந்த முருகேசனன்றே!**

(ஆக்கம் அல்வாயூர் கவிஞர் மு.செல்லையா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் வாழும் பூமித்தாய் மாசடைவதைத் தடுப்போம்!

நாம் வா... லை நாம் மனம்போன ... எவ்வித விளக்கமுமில்லாமல் அழிக்க முற படும் போது அல்லது பூமியின் வளத்தை அதிக அளவில் சுரண் முற்படும் போது சூழல் மாசடை கிறது.

சுற்றாடல் சுகாதாரப் பிரச்சி னைகளும் பெரும்பாலும் மாசடைத லாலேயே ஏற்படுகின்றன. மாசடை தல் என்பது காற்று, நீர், நிலம் போன் றவை பல்வேறு இரசாயனப் பொருள்களாலும், கழிவுப் பொருள்க ளாலும் அசுத்தப்படுத்தி அழுக்கடை யச் செய்வதாகும். பல அபாயகர மான நோய்களும், புற்று நோய்களும் கூட மாசடைதலுடனேயே தொடர்பு படுத்தப்படுகின்றன.

### நீர் மாசடைதல்

இலங்கையைச் சூழவுள்ள சமுத் திரமும், நாட்டிலுள்ள நீர் நிலைகளும் மெல்ல மெல்ல மாசடைந்து வருகின் றன. வீட்டிலிருந்து ஒவ்வொருவரும் வெளியேற்றும் கழிவுகளும் கைத் தொழில் கழிவுகள், விவசாய இரசாய னங்கள், கப்பல்களிலிருந்து கசிந்து அல்லது கப்பல் உடைவதால் வெளி யேறும் எண்ணெய் போன்றவையும் நீர் மாசுபடுவதற்குக் காரணிகளாக வுள்ளன. ஆறுகளும் வாவிகளும் கூட இவ்வாறே மாசடைகின்றன.

இலங்கையில் களனிகங்கை அதி களவு மாசடைந்துள்ளது. கொழும்பு நகரிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரும், கைத்தொழிற்சாலைகள் வெளியேற்றும் பலவிதமான கழிவு களும், கிருமிநாசினிகள் சேர்ந்த விவசாயக் கழிவுநீரும் களனிகங்கை யில் சேர்ந்து மாசடையச் செய்கின் றன. மகாவலிகங்கை மலைநாட்டி னூடாக ஓடுவதனால், தேயிலைத் தோட்டங்களிலும் தொழிற்சாலைகளி லும் இருந்து வெளியேறும் பலவித மான கழிவுப் பொருள்களால் அது மாசடைகின்றது. இலங்கையின் மற் றும் முக்கிய ஆறுகளும் இவ்வாறே மனிதநடத்தையால் மாசுறுகின்றன.

**இர. சந்திரசேகர சர்மா**
(திட்ட இணைப்பாளர், சமூக உளநல நிகழ்ச்சித் திட்டம்)

இலங்கையின் நகர்கள் சுத்தமாக உள்ளன என்று சொல்லிவிட முடி யாது. கொழும்பு மிகவும் அசுத்தமா கவே உள்ளது. வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் முற்றாகச் சாக்கடைகள் மூலம் அகற்றப்படு வதில்லை. தெருக்களில் தேங்கி நிற்கின்றன. குப்பைகள் ஒழுங்காக அகற்றப்படுவதில்லை. மூலைகளில் குவிந்து கிடந்து துர்நாற்றத்தைப் பரப்புகின்றன. துணிக்கடைகளின் முன்னே துணிகளைச் சுற்றிவந்த பொலித்தீன் கடதாசிகள் வீசப்பட்டு, போவோர் வருவோரின் கால்களில் சிக்குகின்றன.

கழிவு எண்ணெய்களும், கப்பல் களிலிருந்து கசியும் எண்ணெய்யும், சில வேளைகளில் எண்ணெய்த் தாங் கிக் கப்பல்கள் உடைவதால் வெளி யேறும் எண்ணெய்களும் இலங்கை யின் கடற்பரப்பை மாசுபடவைக்கின் றன. இவை கடலில் வாழும் உயிரி னங்களுக்கு ஆபத்தாக அமைந்து அவற்றை அழித்துவிடுகின்றன.

### நிலம் மாசடைதல்

மனிதனுக்கும் மற்றும் விலங்குகள் உயிரினங்களுக்கும் உணவை உண்டாக்கி அளிப்பது இந்தப் பூமித் தாயே. சனத்தொகைப் பெருக்கம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. ஆனால் அதற்கேற்ற அளவில் நிலம் அதிகரிப்பதில்லை! இருக்கின்ற நிலத்தில்தான் விளைச்சலைப் பெருக்க வேண்டியுள்ளது. அதற்காக மனிதன் பெருமளவு செயற்கை உரங்களையும் கிருமி நாசினிகளை யும் பயன்படுத்துகிறான். இதனால் மண்ணிலுள்ள மண்புழுக்கள் போன்ற பயனுள்ள பல பூச்சிபுழுக்கள் அழிந்து போகின்றன.

காடுகள் இன்று மனிதனால் அளவு கணக்கின்றி அழிக்கப்பட்டு வருகின்றன. மரங்களின் வேர்கள் மண்ணை இறுகிப்பிடித்து வைத்திருப் பவை. மரங்கள் அழிக்கப்படுவதால் மேல்மண் அரிக்கப்படுகின்றது. கிளி நொச்சியிலிருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் பாதையின் இரு மருங்கி லும் உள்ள காடுகள் சேனைப் பயிர்ச் செய்கைக்காக அழிக்கப்பட்டிருப் பதைக் காணலாம். இந்த நிலங்கள் இப்போது தரிசு நிலங்களாகிவிட்டன. தாவரங்கள் அழிக்கப்படும்போது அவற்றில் வாழும் விலங்குகள், பூச் சிகள், பறவைகள் என்பனவும் வாழ வழியின்றி அழிக்கப்படுகின்றன. இத னால் இயற்கைச் சமநிலை குலைந்து அழிவுகள் ஏற்படுகின்றன.

இவ்வாறு நிலம் மனிதனின் அறி வற்ற செயல்களால் மாசடைகிறது.

### வளி மாசடைதல்

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பல தொழிற்சாலைகள் இருக்கின் றன. அவை தமது புகைபோக்கிகள் மூலம் தொடர்ந்து புகைக்கழிவை



வளிமண்டலத்துள் செலுத்திக் கொண்டே இருக்கின்றன. இதனால் வளி மாசடைகின்றது. ஒட்சிசனின் அளவு குறைவடைகின்றது. மனிதரி னதும் விலங்குகளினதும் சுவாசித் தல் பாதிப்படைகின்றது. நோய்கள் உண்டாகின்றன. இந்த மாசடைந்த காற்றினால் மரணங்களும் ஏற்படு கின்றன. காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை இயங்கிக் கொண் டிருந்த காலத்தில் சுற்றாடலில் உள்ள வீடுகளில் புகைபடிந்து வெண் மையான தூசிப்படலம் படிந்திருந் ததை அவதானித்திருக்கலாம்.

நகரங்களில் கார்கள், லொறிகள் போன்றவை சுவட்டு எரிபொருளைப் பாவித்து கரும் புகைகளை எழுப்பிக் கொண்டு செல்கின்றன. காபன் ஓரொட்சைட்டு கொண்ட இந்தப் புகை சுவாசத்துக்கு மிகவும் கெடுதலாகும். தொடர்ந்து சுவாசித்தால் மரணத் தையே உண்டு பண்ணக் கூடியவை. புகைவிடாத கார்கள்கூட தமது புகை போக்கிகள் மூலம் கண்ணுக்குத் தெரி யாத பல நச்சு வாயுக்களை வெளி யேற்றுகின்றன. இவற்றின் பாதிப்புக ளில் இருந்து தப்புவதற்காக ஜப்பான் போன்ற வளர்முக நாடுகளில் ஒட்சி சன் நிறைந்த முகமூடிகளை வீதி களில் மக்கள் நடமாடும் போது பயன் படுத்துகிறார்கள். புகையும் நச்சு வாயுவும் நிறைந்த நகரத்தால் செல் லும் போது இவை சுவாசத்திற்கு நல்ல ஒட்சிசன் நிறைந்த வளியைத் தருகின்றன.

மனிதனும் மற்றும் உயிரினங் களும் வாழ்வதற்கு ஒட்சிசன் போதிய அளவு உள்ள சுத்தமான வளி தேவை. தாவரங்களை அழிப்பதால் வளிமண்டலத்தில் காபநீரொட்சைட் டின் அளவு கூடுகிறது. இதுபோலவே மனிதனின் செயற்பாட்டால் நாமே நாம் வாழ வேண்டிய நல்ல வளிச் சூழலை மாசடையச் செய்கிறோம். இது தொடருமானால் மனிதனும் மற்றும் உயிரினங்களும் பூமியில் வாழமுடியாத நிலை ஏற்படும்.

### ஒலி மாசு

நகரப்புறங்களில் ஒலிபெருக்கிகள் நாலா பக்கங்களிலிருந்தும் தொடர்ந்து உயர்ந்த சத்தத்தை(ஒலி) எழுப்பிக் கொண்டிருக்கின்றன. ஒலி பெருக்கி யைப் பயன்படுத்துவோர் மற்றவர் களுக்கு இது துன்பமாகுமே என்ப தைச் சற்றும் உணர்வதேயில்லை. உயர்ந்த சத்தத்தைத் தொடர்ந்து கேட்டால் சோர்வு ஏற்படுகிறது: அமை தியின்மை ஏற்படுகின்றது.

ஒலியின் அலகை டெசிபெல் (DECIBEL) என்ற ஓர் அளவுத் திட் டத்தில் அளக்கிறார்கள்.

### டெசிபல் அளவில் ஒலிச்சத்த மட்டங்கள்

| | |
|---|---|
| மெல்லப் பேசுதல் | -- 15 |
| டிக்டிக் என்ற மணிக் கூட்டுச்சத்தம் | -- 20 |
| அமைதியானதோட்டச்சூழல் | -- 30 |
| சாதாரண தெரு (வாகனப் போக்குவரத்து அற்றது) | -- 40 |
| ஆற்றின் கரை | -- 50 |
| சாதாரண சம்பாஷணை | -- 60 |
| சத்தமுள்ள சாப்பாட்டுக்கடை | -- 70 |
| வெற்றிடச் சுத்தமாக்கி | -- 80 |
| டிரக்வாகனம் (5 மீற்றர் தூரத்தில்) | -- 90 |
| ஆட்டமும் பாட்டும் | --100 |
| உலோகத் தொழிற்சாலை | --110 |
| ஜாக் சுத்தியல் | --120 |
| ஜெட் எஞ்சின் | --140 |

இதில் 80 டெசிபெல்லுக்கு மேற் பட்டதை எவ்வளவுக்கு அதிகமாகக் கேட்க வேண்டிய நிலை ஏற்படுகி றதோ அவ்வளவுக்கு அதிகமாக கேட் கும் சக்தி பாதிப்புறும்.

மனிதருக்கு மன அமைதியையும் ஆரோக்கியத்தையும் அளிக்கும் ஒலி அளவு 25 தொடக்கம் 45 டெசிபெல் ஆகும்.

சத்தத்தின் அளவு 45 முதல் 60 டெசிபெல் வரை கூடுமாயின் சமிபாட் டுத் தொகுதியைப் பாதித்து சமி பாட்டுக் கோளாறுகள் ஏற்படும். 60 முதல் 80 டெசிபெல்லாயின் நரம்பு மண்டலம் பாதிப்புறும; கோப உணர்ச்சி தோன்றும்; வன்முறை மனநோய் என்பன தோன்றும். 80 முதல் 120 டெசிபெல் என்றால காதுச் சவ்வுகள் - செவிப்பறை பாதிப்புற்று செவிட்டுத்தன்மை ஏற்படும்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளி லுள்ள நகரங்களில் ஒலியின் அளவு 40 டெசிபெல்லாக இருக்கிறது. அபி விருத்தி அடைந்து வரும் நாடுகளின் நகரங்களில் ஒலியின் அளவு 60 டெசிபெல்லாக உள்ளது.

ஒழுங்கற்ற ஒலிபெருக்கிப் பாவ னையால் இன்று எமது கிராமப் புறங் களிலும் பெரும்சத்தம் ஏற்படுத்தப் படுகின்றது. நகரங்களில் மோட்டார் வாகனங்கள், புகையிரதங்கள், மின் பிறப்பாக்கிகள், தொழிற்சாலையந்தி ரங்கள், வர்த்தக நிலையங்களில் வானொலிகள் போன்றவையும் ஒலி மாசை ஏற்படுத்துகின்றன. இவை அனைத்தும் மனிதனின் அமைதி யைக் கெடுத்து செவிப்புலனுக்கும் தீங்கு விளைவிப்பனவாகும்.

நாம் நமது சிந்தனைகளாலும் செயற்பாட்டினாலும் இந்தப் பூமித் தாயை நல்ல வாழிடமாகப் பேண வேண்டியது இன்றைய தலையாய தேவையும் கடமையுமாகும்.


## விடை

IX ஆம் பக்கத்தில் 'சிறுவர் சுடர்' பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக் கான விடைகள் வருமாறு:-

### கட்டங்களை நிரப்புங்கள்!

1. மாதவி. 2. தவிடு. 3. விடுதி.
4. சாரதி. 5. ரசம். 6. திம்பு.
7. திகதி. 8. கவரி. 9. திரிபு.
10.மிகுதி. 11.கும்மி. 12. திமில்.
13.புதுமை 14.துறவி 15.மைவிழி

### முடியுமா?



### கண்டுபிடியுங்கள்

1.கிரிக்கெட்துடுப்பு. 2.கயிறடிக்கும் இழை.3.பென்சில்.4.விசில்.5.தூரிகை (பிறஷ்). 6.எலிப் பொம்மை. 7.கரடிப் பொம்மை. 8.பட்டம். 9.ரயில் என்ஜின். 10.வட்டப்பந்து.

கடந்த வார சஞ்சீவியில் இரு புதிர்களுக்கான விடைகள் தவறி விட்டன. அவற்றின் விடைகள் வரு மாறு

### எத்தனை எலிகள்?


மொத்தம் 34 எலிகள்

### கண்டுபிடியுங்கள்

1.சகுனி (மற்றயவை இராமாயணப் பாத்திரங்கள். இது மகாபாரதப் பாத்திரம்). 2.மேதை (ஏனையவை பெண்ணின் பருவகாலப் பெயர்கள்). 3.விஜய் அமிர்தராஜ் (ஏனையோர் கிரிக்கெட் வீரர்கள்). 4.மேயர் (இது நகர பிதாவின் ஆங்கிலப் பெயர். ஏனையவை படை அதிகாரிகளின் தர நிலைகள்) 5.நியூயோர்க் (ஏனை யவை நகரங்கள்)6.மில்லியன் (ஏனை யவை நாணயங்களின் பெயர்கள்). 7.இந்தியா (ஏனையவை தீவக அமைப்பானவை) 8.வதனம் (மற்றை யவை அழகின் மறு பெயர்கள்) 9.நாதஸ்வரம் (மற்றயவை தோல் கருவிகள்). 10.ஓட்டோ (ஏனையவை இரு சில்லு வாகனங்கள்).

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.109



**சொற்சிலம்பம் இல. 109**

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..................................................
விலாசம்: ..................................................
..................................................

..............................இங்கே வெட்டுக..............................

முடிவுத் திகதி: 09-07-1999

### இடமிருந்து வலம்

1. கோபம் கொள்ளும் முனிவன். 7. பாண்டவருள் ஒருவன். 8. குரங்கு. 9. சந்திரன். 11. அன்பு கொண்டவன். 13. மூஷிகம். 14. சிங்கம் 15. ஏக பாதை. 17. சிரார்த்தம். 19. தொப்பி. 21. அன்பு. 22. பற்றுவது இப்படி. 23. வலிமை. 24. தோள்.

### மேலிருந்து கீழ்

1. கணவனை இழந்தவள். 2. சிலருக்கு போபம் வருவது இப்படி. 3. திருமாலின் அவதாரங்களில் ஒன்று. 4. இப்போது அடிக்கடி தடைப்படுவது. 5. நாளாந்தம் மாறுவது. 6. சூரியன். 9. சகோதரனின் மனைவி. 10. 'ஒரிஜினல்' அல்ல. 11. ஆரம்ப வகுப்பு. 12.சரியான நிலை. 13. அழகு. 14. தலைவன். 16. தரம். 18. முஸ்லீம் நாடு ஒன்றின் சுருக்கப் பெயர். 20. நயம்.

## சொற்சிலம்பம் 107 இன் விடைகள

### இடமிருந்து வலம்

1.சமத்துவம். 6.குடை. 7. வலி. 8.சுரி. 9.ஈர்ப்புவிசை. 10.தகர்ப்பு. 12. லைலா. 13. திரிபு. 15.நிசி. 17.பருத்த. 18. கதிரவன். 20.தல். 21.சுரை. 22.கல்வி.

### மேலிருந்து கீழ்

1. சகுந்தலை. 2. மடை. 3. துவர்ப்பு. 4.வலிப்பு. 5.வரிசை. 8. சுவீகரித்தல். 9.ஈர். 11.கலாநிதி. 13.திரு. 14.புதல்வி. 16.சிரசு. 17.பன். 18.களி. 19.வரை.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | யோ.தெய்வேந்திரன், சாவ.ப.நோ.கூ.சங்கம், சாவகச்சேரி. |
| இரண்டாம் பரிசு:- | வே.பாலசுப்பிரமணியம், 56, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம். |
| மூன்றாம் பரிசு:- | கந்தசாமி ஜெகதீபன், கலையரசு லேன், நவாலிதெற்கு, மானிப்பாய். |

இவர்கள் மூவருக்கும் சரியான விடை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.


ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 108 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேசியாவில் ஏற்பட்டு வருகின்ற அதிகார மாற்றம்!



சுகர்ணொபுத்ரியின் இந்தோனேசிய ஜனநாயகக் கட்சியின் ஆதரவாளர்கள் கட்சியின் காளைமாட்டுச் சின்னத்துடன் ஊர்வலம் செல்லும் காட்சி.



மேகவதி

ஜூன் 7ஆம் திகதி இந்தோனேசியாவில் நடைபெற்ற தேர்தலில் PDI எனப்படும் இந்தோனேசிய ஜனநாயகக்கட்சியின் தலைவி மேகவதி சுகர்ணொபுத்ரி 38 சதவீதமான வாக்குகளைப் பெற்று நவம்பர் மாதம் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இந்தோனேசிய ஜனநாயகக்கட்சித் தலைமைப் பதவியில் இருந்து மேகவதி (52வயது) வெளியேற்றப்பட்டார். அரசியலில் பங்குபற்றுவதற்கும் அவருக்குத் தடைவிதிக்கப்பட்டது. ஜகார்த்தாவில் உள்ள அவரது கட்சித் தலைமையகத்துக்கும் அப்பொழுது ராணுவம் அனுப்பப்பட்டு தலைமையகம் பலவந்தமாக அவரின் ஆதரவாளர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது.

அரசியலில் தனக்கு சவாலாக உருவெடுத்து வந்த மேகவதியை ஒழித்துக் கட்டுவதற்கு சுஹார்ட்டோவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இவைகள். இந்தோனேசியாவின் முன்னாள் பிரதமர் சுகர்ணோவின் புத்திரியான மேகவதியின் அரசியல் வாழ்வு முடிந்து விட்டது என்றே சுஹார்ட்டோவும் அவரது கோல்கார் கட்சியினரும் அப்போது கருதினர்.

ஆனால் நினைத்ததுக்கு எதிர் மாறாகவே இந்தோர்னேசியாவில் அரசியல் மாற்றங்கள் இடம் பெற்றுள்ளன. மேகவதியின் அரசியல் வாழ்வு அல்ல சுஹார்ட்டோவின் அரசியல் வாழ்வே இன்று அஸ்தமனமாகி இருக்கிறது. சுஹார்ட்டோ மட்டும் அல்ல அவரது முழுக் குடும்பமுமே இன்று ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுகளை எதிர் நோக்கியுள்ளது.

13 மாதங்களுக்கு முன்னர் இந்தோனேசியாவில் ஹபீபி தலைமையில் ஏற்படுத்தப்பட்ட ஆட்சியே மேகவதிக்கு எதிரான அரசியல் தடைகளை நீக்கவும் தேர்தலை நடத்தவும் நடவடிக்கை எடுத்தது.

1950 களின் பின்னர் இந்தோனேசியாவில் ஜனநாயக முறையில் நடத்தப்பட்ட முதலாவது தேர்தல் ஜூன் 7 தேர்தல் ஆகும். இந்தத் தேர்தலில் 13 கோடி மக்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். 90 சதவீதமானோர் வாக்களித்தனர். இந்தத் தேர்தலில் கோல்கார் கட்சி ஹபீபியையே தனது வேட்பாளராக நியமித்திருந்தது. மற்றும் PKB எனப்படும் தேசிய விழிப்புக்கட்சித் தலைவர் அப்துல் ரஹ்மான் வாஹிட், PAN எனப்படும் தேசிய அதிகாரக் கட்சியின் தலைவர் அமீன் ராய்ஸ் ஆகியோர் தேர்தலில் போட்டியிட்ட ஏனைய வேட்பாளர்களில் பிரதானமானவர்கள்.

## சுஹார்ட்டோவின் காலத்தில் ஊழல்

சுஹார்ட்டோவின் ஆட்சிக்காலத்திலும் இந்தோனேசியாவில் தேர்தல்கள் நடைபெற்றன. ஆனால் அந்தத் தேர்தல்கள் ஜனநாயக முறைப்படி நடைபெறவில்லை. அந்தத் தேர்தல்களில் ஊழல், மோசடிகள் தராளமாக இடம்பெற்றன.

ஒவ்வொரு தேர்தலிலும் கோல்கார் கட்சி அமோக வெற்றியீட்டி வந்தது. ஆனால் இம்முறை இடம்பெற்ற தேர்தலில் கோல்கார் கட்சியின் மோசடி முயற்சிகள் வெற்றி அளிக்கவில்லை. வாக்களிப்பு நடைபெற்று 6 நாள்கள் கழிந்த நிலையிலும் 25 சதவீதமான வாக்குகள் மட்டும் எண்ணப்பட்ட நிலமை இருந்த போது வாக்குச் சீட்டுகளில் மோசடிகள் இடம்பெறுவதாக அஞ்சப்பட்டது. எனினும் இந்தோனேசிய ஜனநாயக கட்சியின் வெற்றியும் கோல்கார் கட்சியின் தோல்வியும் இந்தச் சந்தேகத்தை நீக்கிவிட்டன.

இந்தோனேசிய நாடாளுமன்றம் 500 உறுப்பினர்களைக் கொண்டது. மக்களால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களை விட இராணுவத்தில் இருந்து 38 உறுப்பினர்களும் 27 பிராந்தியங்களில் இருந்து 135 உறுப் பினர்களும் சமூக மற்றும் தொழில் சார்ந்த துறைகளில் இருந்து 65 உறுப்பினர்களும் நாடாளுமன்றத்துக்கு ஜனாதிபதியால் தெரிவுசெய்யப் படுவர்.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களும் இவர்களும் சேர்ந்தே நவம்பரில் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வார்கள்.

சுஹார்டோவின் ஆட்சிக்காலத்தில் மக்களினால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களைவிட ஜனாதிபதியால் தெரிவு செய்யப்படும் உறுப்பினர் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. வாக்களிப்பில் ஊழல் மோசடியாலும் இத்தகைய தேர்தல் முறையாலும் கோல்கார் கட்சி ஒவ்வொரு தேர்தலிலும் அமோக வெற்றிகளை ஈட்டி இந்தோனேசிய நாடாளுமன்றத்தில் 90 சதவீதத்திற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

## கூட்டாட்சி

தற்பொழுது மேகவதி எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை அறுதிப் பெரும்பான்மை இல்லாத நிலைமையே. இவரின் கட்சி 38 சதவீத வாக்குகளை மட்டும் பெற்றிருப்பதால் ஏனைய கட்சிகளையும் இணைத்து கூட்டாட்சி அமைக்க வேண்டிய நிலையில் இருந்து வருகிறது. அப்துல் ரஹ்மான் வாஹிட் தலைமையிலான தேசிய விழிப்புக்கட்சி, அமீன் ராய்ஸ் தலைமையிலான தேசிய அதிகாரக்கட்சி ஆகியவை மேகவதியின் இந்தோனேசிய ஜனநாயகக் கட்சிக்கு ஆதரவு அளிக்கும் என்று நம்பப்படுகிறது.

தேர்தலில் இந்த மூன்று கட்சிகளும் பெற்ற மொத்த வாக்குகள் 60 சதவீதம். இந்தோனேசிய அரசியலில் பெரும் செல்வாக்கு வகித்து வரும் இராணுவத்தின் ஆதரவு கடந்த தேர்தலில் மேகவதிக்கே இருந்ததாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்தோனேசிய இராணுவத் தளபதி ஜெனரல் விரான்ரோவை மேகவதி உபஜனாதிபதியாக நியமிக்கலாம் என்றும் ஊகங்கள் தெரிவிக்கின்றன.

## கோல்கார் கட்சிக்குள் முரண்பாடு

இந்தோனேசியாவில் 32 வருடகாலமாக சுஹார்ட்டோ நடத்திய ஊழல் ஆட்சி, அரசியலில் குடும்ப ஆதிக்கம், சுஹார்ட்டோவின் வீழ்ச்சிக்குப் பின்னர் கோல்கார் கட்சியில் ஏற்பட்ட பிளவு ஆகியவையே தேர்தலில் கோல்கார் கட்சி தோல்வியடையக் காரணம் ஆகும். இந்தோனேசியாவின் கிராமப்புறங்களில் கோல்கார் கட்சி ஓரளவு செல்வாக்குப் பெற்றிருந்த போதிலும் சுஹார்ட்டோவின் ஏதேச்சாதிகார ஆட்சியினால் ஏற்படுத்தப்பட்ட வடு கோல்கார் கட்சியின் வெற்றிக்குத் தடையாக அமைந்துவிட்டது.

சுஹார்ட்டோவைப் பிரநிதித்துவம் வகிக்கும் ஹபீபி கோல்கார் கட்சியின் தலைமை வேட்பாளராக நிற்கக் கூடாது என்று கோல்கார் கட்சிக்குள் இம்முறை எதிர்ப்பு கிளம்பியிருந்தது. கோல்கார் கட்சியின் தலைவர் அக்பர் மார்சுகியும் ஹபீபியின் நியமனத்தை எதிர்த்தார். எனினும் தமது அரசியல் சீர்திருத்தங்கள் தமக்கு வெற்றியை தேடித்தரலாம் என்று ஹபீபி நம்பினார். இந்தோனேசியாவில் சுதந்திரமான தேர்தலுக்கு மட்டும் அல்ல கிழக்குத் திமோர் மக்கள் தமது அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கான அங்கீகாரத்தையும் ஹபீபி வழங்கி இருந்தார்.

மேகவதியின் இந்தோனேசிய ஜனநாயகக்கட்சி இந்தத்தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை பெறத் தவறியதற்குக்காரணம் முஸ்லிம் அடிப்படைவாதிகளின் ஆதரவை கடந்த தேர்தலில்

**உலக உலா**
**என்.பி.சீலன்**

அவர் பெறத் தவறியது ஆகும். கிறிஸ்தவர்களின் ஆதிக்கம் அக்கட்சியில் இருந்து வருகிறது. இதனால் அந்தக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டாம் என்று பிரதான முஸ்லிம் உலாமா சபை ஒன்று மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது.

அத்துடன் 1998 மே மாதம் சுஹார்ட்டோவுக்கு எதிரான மாணவர் போராட்டத்தின் போது மேகவதி மாணவர்கள் சார்பாக போதிய அளவு குரல் கொர்டுக்கவில்லை என்றும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன. கூட்டரசாங்கத்தில் இடம்பெற உள்ள தேசிய விழிப்புக்கட்சியும் தேசிய அதிகாரக் கட்சியும் உறுதியான அடித்தளம் கொண்ட முஸ்லிம் மதசார்ப்புக் கட்சிகள் ஆகும். இந்த இரு கட்சிகள் மூலம் இந்தோனேசியாவுக்கும் முஸ்லிம் உலகுக்கும் இடையிலான நல்லுறவை கட்டியெழுப்பலாம் என்று மேகவதி நம்புகிறார்.

இந்தோனேசியமக்களபல தசாப்த காலத்துக்குப் பின்னர் முதல் தடவையாக மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்றம் ஒன்றைப் பெறப் போகிறார்கள். இந்தோனேசியா தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்கு அரசியல், சமூக சீர்திருத்தங்கள் அவசியம். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் ஒன்றினாலேயே மக்களின் அபிலாசைகளுக்குஏற்றமாற்றங்களை உருவாக்கமுடியும்.

* * *

# மற்றொரு சோமாலியாவாக கொசோவோ உருவாகுமா?

## கொசோவோ நெருக்கடி

கொசோவோவில் யுத்தம் முடிவடைந்து விட்டதாக நேட்டோ அறிவித்துள்ளது. கொசோவோ விடுதலை இராணுவத்துடன் நேட்டோ ஒப்பந்தம் ஒன்றையும் செய்து கொண்டுள்ளது. ஒப்பந்தத்துக்கு இணங்க நேட்டோவிடம் தனது ஆயுதங்களையும் கொசோவோ விடுதலை இராணுவம் கையளித்து வருகிறது.

நேட்டோவின் அடுத்த பணிகள் கொசோவோ மக்களை மீள் குடியமர்த்துவதும் யுத்தத்தினால் அழிந்து போய் உள்ள கொசோவோவில் புனர்நிர்மாண வேலைகளை மேற்கொள்வதும் கொசோவோவின் எல்லைகளைப் பாதுகாப்பதும் கொசோவோ மக்களுக்கு அதிகபட்ச சுயாட்சி வழங்கும் திட்டம் ஒன்றை வகுப்பதும் ஆகும்.

கொசோவோ விடுதலை ராணுவம் நேட்டோ தலைமையிலான சர்வதேசப் படைகளிடம் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டதாகக் கூறுகிறது. ஆனால் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டதாக அது இன்னும் தெரிவிக்கவில்லை. கொசோவோ விடுதலை ராணுவத்திடம் இருந்த ஆயுதங்களின் எண்ணிக்கையும் எவருக்கும் தெரியாது.

## சேர்பியர்கள் வெளியேற்றம்

யூகோஸ்லாவியராணுவம் கொசோவோவில் நிலை கொண்டிருந்தபோது அந்த ராணுவத்தின் பாதுகாப்புடன் இருந்த சேர்பியர்கள் தற்பொழுது கொசோவோவில் இருந்து வெளியேறி வருகின்றனர். கொசோவோ ஜனத்தொகையில் சேர்பியர்கள் 2 இலட்சம் மட்டுமே. யூகோஸ்லாவிய ராணுவம் கொசோவோவுக்குள் தாக்குதலை ஆரம்பித்த சமயமே சேர்பியர்கள் பலர் வெளியேறி சேர்பியாவுக்கும் மொண்டேநேக்ரோவுக்கும் சென்றிருந்தனர். யூகோஸ்லாவியா ராணுவத்தினால் தாக்கப்படும் அல்பேனியர்கள் ஆத்திரத்தைத் தீர்ப்பதற்காக தம்மைப் பழிவாங்கலாம் என்று சேர்பியர்கள் அஞ்சினர்.

கொசோவோவில் நேட்டோவின் தாக்குதல் ஆரம்பமாவதற்கு முன்னரே கொசோவோவில் உள்ள சுமார் 300 கிராமங்களில் இருந்து சேர்பியர்கள் வெளியேறி இருந்தனர். நேட்டோவின் தாக்குதல் ஆரம்பமான சமயமும் பலர் வெளியேறினர். தற்பொழுது யூகோஸ்லாவியப் படைகள் வெளியேறியதை அடுத்து அங்கு எஞ்சி இருந்த சேர்பியர்களும் வெளியேறிவிட்டனர்.

## சேர்பியர் இல்லாத கொசோவோ

கொசோவோவில் இருந்து அல்பேனியர்களை முற்றாக வெளியேற்றும் நோக்கத்துடன் யூகோஸ்லாவிய அதிபர் மிலோசேவிக் கொசோவோவில் யுத்தத்தை ஆரம்பித்தார். ஆனால் இந்த யுத்தமும் தற்போதைய நிலைமையும் சேர்பியர்இல்லாதகொசோவோ ஒன்றை உருவாக்கி இருக்கிறது. யூகோஸ்லாவிய ராணுவத்தின் தாக்குதல்களுக்கு அஞ்சி கொசோவோவில் இருந்து 7 லட்சத்து 80 ஆயிரம் அல்பேனியர்கள் வெளியேறி மசெடோனியாவிலும் அல்பேனியாவிலும் தஞ்சம் அடைந்திருந்தனர். சுமார் 6 லட்சம் அல்பேனியர்கள் கொசோவோவிலேயே தங்கி இருந்தனர்.

கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு கால அவகாசம் தேவை ஆகையால் மீளக்குடியமர்வில் அகதிகளை அவசரம் காட்டவேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. யூகோஸ்லாவிய ராணுவத்தினாலும் கொசோவோ விடுதலை ராணுவத்தினாலும் புதைக்கப்பட்ட சுமார் 10 லட்சம் நிலக்கண்ணிகளை அகற்றும் பெரிய பொறுப்பு ஐ.நா.கண்ணி அகற்றும் நிபுணர்களிடம் விடப்பட்டுள்ளது.

மீளக்குடியமர்ந்த அகதிகளில் பலர் ஏற்கனவே கண்ணிவெடிகளில் சிக்கி காயம் அடைந்துள்ளனர்.

கொசோவோ அகதிகளை திருப்பி அனுப்புவதில் மசெடோனியாவே அவசரம் காட்டுகிறது. மசெடோனியாவின் ஜனத் தொகையில் நான்கில் ஒரு பங்கினர் அல்பேனிய இனத்தவர்கள். கொசோவோவில் இருந்து வந்த சுமார் ஒரு லட்சம் அல்பேனியர்களும் மசெடோனியாவில் நிரந்தரமாகத் தங்கி விட்டால் மசெடோனியாவில் தற்போதைய இனவிகிதாசாரம் பாதிக்கப்படலாம் என்று மசெடோனிய அரசு அஞ்சுகிறது.

கொசோவோவில் உள்ள அல்பேனியர்களுக்கு வழங்கப்படும் அதே அளவு அரசியல் அந்தஸ்து தமக்கும் வழங்கப்பட வேண்டும் என்று மசெடோனியாவில் வாழும் அல்பேனியர்கள் கோருகின்றனர். கொசோவோவில் தற்பொழுது சுமுகமான நிலைமை காணப்பட்டாலும் காலஞ்செல்லச் செல்ல கொசோவோ விடுதலை இராணுவத்தினாலும் யூகோஸ்லாவிய இராணுவத்தினாலும் மட்டும் அல்ல கொசோவோவில் அமைதிப் பணிகளில் ஈடுபட்டுள்ள ரஷ்யப் படைகளினாலும் நேட்டோ தலைமையிலான படைகளுக்கு ஆபத்து வரலாம் என்று ஊகங்கள் தெரிவிக்கின்றன.

சோமாலியாவில் எப்படியான ஒரு நிலைமை ஏற்பட்டதோ அதே போன்ற நிலைமையே கொசோவோவிலும் ஏற்படலாம்.

*



மசெடோனியாவில் முகாம் ஒன்றில் கொசோவோ அகதிகளுடன் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மெடலின் ஆல்பிரைட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org